Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

டிச.22-28,1996

வாரமலர்

# தினமுரசு


THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 184

# பிரபா — ரத்வத்தை

## எட்டிக்குப் போட்டியான

# இராணுவ வியூகம்

## யாருக்கு அடி சறுக்கும்?



"நக்மா அக்காதான் என் குரு"

— ரோஷினி

செல்வியின் கண்ணீர்

## கைதான தளபதிகளும் பகையான உறவும்!

# முரசம்

## கேட்காமல் கொடுக்கலாம்

**அன்புள்ள உங்களுக்கு வணக்கம்.**

விசாரணையில்லாமல்
சிறையில் வாடும்
தமிழ்க் கைதிகளை
அரசாங்கமும் அரசியல்வாதிகளும்
மறந்து போய் விடுகின்றனர்.

உண்ணாவிரதம் இருந்துதான்
தாங்கள் உள்ளே இருப்பதை
கைதிகள்
நினைவூட்ட வேண்டியிருக்கிறது.

மட்டக்களப்புச் சிறையில்
சாகும்வரை உண்ணாவிரதத்தை
ஆரம்பித்த 17 தமிழ்க் கைதிகள்
உடனடியாக விடுதலையாகினர்.

போராடாவிட்டால்
நீதி கிடைக்காது
என்பதைத்தான்
அவர்களின் விடுதலை
உணர்த்தி நிற்கிறது!

விடுதலை செய்வதற்கான
சகல காரணங்கள் இருந்தும்
அவர்களை வெளியேவிட
அரசாங்கம் ஆர்வம் காட்டவில்லை.

அமைதியாகவே இருந்திருந்தால்
அந்தப் 17 பேரும்
இன்னமும் சிறைக்கம்பிகளை
எண்ணிக்கொண்டிருக்க
வேண்டியதுதான்!

நீதிமன்றம் உத்தரவிட்டும்கூட
பாதுகாப்பு அமைச்சு
விடுதலை செய்யத் தாமதித்தது.
நீதிமன்ற உத்தரவுக்கே
இப்படியொரு நிலையென்றால்,
யாரிடம் நீதி கேட்பது?

சட்டம், நீதி அமைப்புக்கள்
மற்றும் ஜனநாயக நிறுவனங்கள்
மதிக்கப்படவேண்டியவை
என்பதில் மறுப்பேதுமில்லை!

'அரசன் எவ்வழி
குடிகள் அவ்வழி' என்பார்கள்.
நீதிமன்ற உத்தரவுகளையும்
ஜனநாயக நிறுவனங்களையும்
ஆட்சிப் பொறுப்பிலிருப்போர்
மதிக்கத் தவறும்போது
மற்றோரும் அவற்றில்
நம்பிக்கை இழக்கவே செய்வர்!

நீதிமன்றம் சொல்லியும்
கிடைக்காத விடுதலை
போராடித்தான் கிடைக்கிறது
என்ற நிலை உள்ளபோது,
நம்பிக்கை எதில் வரும்?

'பொறுத்தார் அரசாள்வர்'
என்பது பழமொழி;
'பொறுத்தார் சிறையிருப்பர்'
என்பதுதான்
தமிழ்க் கைதிகள் விடயத்தில்
புதுமொழியாகியிருக்கிறது!

ஒருவர் சிறையிலிருக்கிறார்
என்றால் அவர் சார்ந்த
குடும்பத்தினர் சோகத்திலிருக்கின்றனர்
என்பதுதான் அர்த்தம்!

இன்னமும் பல நூற்றுக்கணக்கான
தமிழ்க் கைதிகள்
சிறையில் இருக்கின்றனர்.
பெண்களும் அதில் அடக்கம்.

வயதான பலர்கூட
வெறும் சந்தேகத்தின் பேரில்
சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் விடயத்திலாவது
தாமதமில்லாமல் நீதி கிடைக்குமா?
அலட்சியம் செய்யாமல்
விடுதலை உத்தரவு
விரைவுபடுத்தப்படுமா?

நினைவூட்டாமலேயே
நீதி வழங்கப்படும் போதுதான்
அரசின்மீது மதிப்பு வரும்.

'கேளுங்கள் தரப்படும்'
என்பதற்கு
கைதிகள் வரம் கேட்கவில்லை.
கொடுக்க வேண்டியதை
கேளாமல் கொடுக்கும் போதுதான்
அரசின் நேர்மை
மக்களால் வியக்கப்படும்!

நியாயமாகப் பார்த்தால்
நிரபராதிகளை
நீண்டகாலச் சிறையில்
வைத்திருந்தமைக்காக
அரசாங்கம் வருந்த வேண்டும்!

ஆனால் வருந்துவதற்குப் பதிலாக
மேலும் மேலும்
கைதிகளை வருந்த வைப்பது
'போராடினால்தான் கிடைக்கும்'
என்ற வழிமுறைக்கு
வலுவூட்டுவதாக அமைந்துவிடும்!

நடந்தவை நடந்ததாக
இருக்க வேண்டுமானால்
நடப்பது நல்லவையாகவே
இருக்கவேண்டும்!

❑ ❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## மீண்டும் பிறப்பாரா இயேசு கிறிஸ்து?

அன்று
ஒரு
ஆனந்தத் திருநாள்
பெத்லகேமில்....

கொட்டும்பனி இரவில்
மாட்டுக் கொட்டிலில்
ஒரு
தேவப் பிரசவம்.....

பால் நிலா இயேசுவை
பெற்றெடுத்தாள்
பௌர்ணமி நிலவாள்
அன்னை மரியாள்....

சிலுவையிலே இரத்தம் சிந்தி
சிலுவைக்குமோர் புனிதம் செய்திடவே
சிரித்துக் கொண்டே அவதரித்தார்
சீர்மிகு இயேசு பாலன்.....


மழலை இயேசுவின் பிறப்பை
மகிழ்வுடனே
மந்தை மேய்த்திட்ட
மேய்ப்பருக்கு அறிவித்தான்
தேவதூதன்.

சந்தோஷம் பொங்கிடவே
மேய்ப்பர்கள் வந்து
அன்னை மரி சுதனை
துதித்தனரே....தொழுதனரே.....

கிறிஸ்து பிறப்பின் நாளாம்
கிறிஸ்துமஸ் நாளில்
ஆலயம் செல்வோர்
பிரார்த்திப்பார்களா?

மறந்து விட்ட
மனித சமாதானத்தை
மறுபடி நினைவூட்ட
மீண்டும் பிறக்கமாட்டீரா
இயேசு கிறிஸ்துவே?

ஜி.செல்வா



## அதிகம் பரிவு காட்டுவது யாருக்கு?

எம் பெருமானார் (ஸல்) அவர்களிடம், ஒருவர் "நாயகமே! மனிதர்களில் நான் (உபகாரத்தாலும், நடத்தையாலும்) அழகான முறையில் உறவு கொண்டாட மிகவும் பாத்தியதை உடையவர் யார்?" என்று வினவினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "உம்முடைய அன்னை" என்றார்கள். அவர் "பின்னர் யார்?" என வினவ அவர்கள் "உம்முடைய அன்னை" என்றார்கள். மீண்டும் "எவர்?" என வினவ, "உம்முடைய அன்னை" என்றார்கள். மீண்டும் "எவர்?" என்று வினவியதற்கு நபி (ஸல்) அவர்கள் "உம்முடைய தந்தை என்று திருவுளமானார்கள். அதற்குப் பிறகு மற்ற உற்றார், உறவினர் (தூரத்து பந்துங்கள், சுற்றத்தார்கள் இப்படி படிப்படியாக எவர் எந்த அளவு நெருங்கி இருக்கிறாரோ அந்த அளவு முற்படுத்தி முதலிடம் அளிக்க உரிமை உடையவர் ஆவார்கள்.) என்று நபி (ஸல்) அவர்கள் விளக்கினார்கள், என்று ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.(ஆதாரம்:- புஹாரி, முஸ்லிம்)

நாம் அதிகம் பரிவுகாட்ட வேண்டியவர்களில் முதலிடத்தில் உள்ளவர் 'அன்னை'தான். எம்மைப் பெற்று வளர்த்த அன்னைக்கு நாங்கள் மதிப்பளிக்கக்கூடியவர்களாகவும், கஷ்டமான வேளைகளில் உதவி புரியக்கூடியவர்களாகவும் மாறவேண்டும். ஒரு ஹதீஸில் "உம்முடைய தாயும், தகப்பனும் ஒரே நேரத்தில் அழைக்கும் போது, தாயுடைய அழைப்பையே முதலில் ஏற்றுக்கொள்" என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, எமது அன்னையை எமது கண்களைப்போல காப்பாற்ற வல்லவன் அல்லாஹ் துணை புரிந்தருள்வானாக!

எம்.ஏ.எம். மசூத் அஹ்மத், காத்தான்குடி-03.

# கவிதைப் போட்டி இல.181



இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

## பரிசுக்குரிய கவிதை

### தேவை

**பொன் நகையை**
**இழந்திடினும்-மலர்ப்**
**புன்னகையை மறந்திடினும்**
**கைப்பொருளை விற்றிடினும்**
**மெய்ப் பொருளைப் பெற்றிடுவோம்.**

சி.பஞ்சநாதன், வி/செட்டிக்குளம் ம.வி.,
செட்டிக்குளம்.

### மிகக்கவனம்!

காலை எழுந்தவுடன் படிப்போ?
கவனம்! பாரதி காலமல்ல பாப்பா!
கண்மூடி 'செல்'லும் வரும்;
'கலிபர்' அதன் குண்டும் வரும்;
காலமிது போர்க் கோலம்
கண்மணிகாள் மிகக்கவனம்!

சி.பத்மனி-மட்டக்களப்பு.

### வேண்டாம்

பள்ளிக்குப் போவது பயங்கர அனுபவம்;
கிருஷாந்தி அக்கா கிடங்கினில் மடிந்தாள்;
ரஜினி அக்கா ராவோடு மறைந்தாள்;
பள்ளியே வேண்டாம், வீட்டிலே படிப்போம்!

சீ.தங்கவடிவேல்-அரசினர் வைத்தியசாலை, மட்டக்களப்பு.

### ஒற்றுமை?

முக்கியமான பிரச்சனை பற்றி
மூவரும் கூடி முடிவெடுத்தோம்!
அறிக்கை கொடுப்பது யார் பெயரில்?
அதில்தான் எமக்கில்லை உடன்பாடு!

சி.மு.சுந்தரேசன்-அரசினர் வைத்தியசாலை- மஸ்கெலியா.

### நீறுபூத்த நெருப்பு

நீறுபூத்த நெருப்பாய்
விளங்குதெங்கள் கல்வித்தாகம்!
ஊதிவிட ஆளிருந்தால்;
உயர் கொழுந்தாய் விட்டெரியும்!
ஆசிரியர் ஏதுமிலா
அகதிமுகாம் வாழ்வு-எங்கள்
அறிவைத்தான் வளர்த்திடுமா?
ஆவலைத்தான் போக்கிடுமா?

க.கதிரவேலு- பண்டாரிகுளம், வவுனியா.

### முற்றுப்புள்ளி

நாட்டில் உள்ள
மூவினமும்
நம்மைப் போல
ஒன்று பட்டால்
யுத்தம் என்ற
பெயருக்கே
முற்றுப் புள்ளி
வைத்திடலாம்!

எஸ்.மூர்த்தி-சாகாம வீதி,
அக்கரைப்பற்று-8.

### அறிவைக் குடி!

அகிலம் போற்றும் அறிஞராய் வாழ
அறிவைக் குடித்திடு பிள்ளாய்!
அகதி முகாமில் அடைத்திட்டபோதும்,
அறிவுக்கு வேலை கொடு!!

ஏ.எஸ்.மரைக்கார்-மண்டலக்குடா, கல்பிட்டி.

### வடுக்கள்!

அப்ப சொல்லுங்க! இப்ப;
அச்சமுண்டு அச்சமுண்டு
அச்சமென்றும் உண்டடா!
உச்சிமீது வானிடிந்து
வீழுகின்ற போதிலும்
பங்கர் வேணும் பங்கர்
வேணும்
பங்கர் வேணும் என்பதே!

குமரகுருபரன்.

### இங்கேயே......

பள்ளியிலோ அகதிமுகாம்;
பாதையிலும் பயமுண்டு;
வெளியிலோ உயிரழிவு;
வீட்டினிலே கற்றிடுவோம்!

அன்பு சண்முகம், காரைதீவு.

### எங்கும் முகாம்

படிக்க வேண்டிய பருவத்திலே,
பள்ளி எங்கும் முகாம்களே;
பாலர் நாமும் படித்திடவே
காலம் எப்போ வந்திடுமோ?

என்டனி லாசரஸ், ஒபேசேகர ரவுன்,
ராஜகிரிய.

### எங்கே?...

அறிவோ விருந்து!
அதிலே அமர்ந்து;...
உண்பவரோ மொத்தம் மூன்று!
மீதிப்பேர் எங்கே?...
கொடும் போர் உண்டதுவோ?

எஸ்.மௌனேஷ்- மகாஜனா கல்லூரி,
மட்டக்களப்பு.

---

எனதன்பின் முரசே!

நீ சுமந்து வரும் ஆக்கங்கள் அனைத்தும் வெகு ஜோராக உள்ளன. அதிலும் சினிவிசிட் தூள். மகளிர் மட்டும் பட்டுச்சேலை பரிசு உண்மையிலேயே பாராட்டப்படவேண்டியது. அது என்னங்க கமல் மாமிக்கு அவ்வளவு வெட்கம்!

ஐ.எல். சல்மா, அக்கரைப்பற்று-06.

---

என் பிரிய முரசே!

ஜூலிஸ் பூசிக்கின் தூக்கு மேடைக் குறிப்பில் மனம் குழைந்து, திலீபனின் இறுதி நாளுக்காய் கண்ணீர் சிந்தி, கொள்ளைராணி பூலான்தேவியின் வேதனையில் வெந்து, காதில பூ கந்தசாமிக்காக சிரித்தேன், உடல் சிலிர்த்தேன்.

செல்வி மஞ்சுளா சத்திவேல்,
றைகம, இங்கிரிய.

□●□

ஏய் முரசே!

நீ தரும் அனைத்து அம்சங்களும் அசத்தல் தான். எம் குடும்பத்தவர் அனைவருமே முதன்முதல் வாசிப்பது பூலான் தேவியின் சோக சுய சரிதையைத்தான். தொடர் நவீனமாகவன்றி ஒரே முறையில் வாசித்து முடிக்கவிருந்தால் என்ன என்று ஆதங்கமாயுள்ளது. "வளரட்டும் உன் பணி!"

திருமதி திலகரத்தினம்,
அவிசாவளை.

□●□

திலீபனின் இறுதி நாள் கண் கலங்கவைத்துவிட்டது. சோகம் படர்ந்த நாட்களை மீண்டும் நினைவு படுத்திய அற்புதனுக்கும் முரசிற்கும் எனது நன்றிகள்.

ஜீ. நந்தகுமார், பெல்மதுளை.

### மடல் அனுப்பியவர்களில் இடம்உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படுபவர்கள்:

* திருமதி கிலேரா ஜோதிரட்னம், கொழும்பு-05.
* எல். தேவா, பாண்டிருப்பு.
* செல்வி சுமைரா அன்வர், குருநாகல்.
* க. இரத்தினேஸ்வரன், கட்டார்.
* வி. சகாதேவன், வெள்ளவத்தை.
* எம். ரஷாட் பஸ்லியா, மடவளை.
* ஏ. முகமட் நியாஸ், கிண்ணியா.
* ஜெயராமகுமார், மட்டக்களப்பு.
* சிவதில்லைநாதன், இலண்டன்.
* எஸ். மௌனேஷ், மட்டக்களப்பு.
* க. ஐங்கரன், ஒன்ராறியோ, கனடா.
* மகேஸ்வரி இராமதாஸ், வத்தேகம.
* நவீன், வத்தளை.
* கு. சிவகடாச்சம் பிள்ளை, கிருளப்பனை.
* ஜெ. உதுமான் அலி, குவைட்.
* மஹ்யூப் இஸ்மாயில், தெஹிவளை.
* எஸ். கே. ரமேஷ், பெரிய போரதீவு.
* எம்.சி. மகரூப், சாய்ந்தமருது-06.
* கே. சிவநாதன், குவைட்.
* எம்.ஐ.எம். சித்தீக், பொத்துவில்-02.
* கனகபிள்ளை விஜயராணி, மல்லிகைத்தீவு.
* எம்.எஸ்.ஜெகதீஸன், மொனராகல.
* ஆர். கிருஷ்ணன், கொழும்பு-15.
* செல்வி எஸ். யுவரணி, பிட்டக்கந்தை.
* ஏ. செபஸ்தியன், உக்குவலை.
* வ. பிர்தௌஸ், கிண்ணியா-03.
* க. ராசாத்தி, திருமலை.
* எம்.ஐ.றியாஸ், ஓட்டமாவடி.
* திருமதி சரோஜினி கோணேஸ்வரன், கொழும்பு-13.
* வி. பௌமியா, புதிய காத்தான்குடி-03.
* ஏ.எஸ். ஆதிமூலம், தெல்தோட்டை.

# கவிதைப் போட்டி இல-184



**கவனியுங்கள்!** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி:- 28.12.1996

முகவரி: கவிதைப் போட்டி இல.184 தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்) சாலை




தமிழக முதல்வர் மு. கருணாநிதி அவர்களின் ஆட்சிப் பொறுப்பு முன்னாள் பறிபோனதுக்கு விடுதலைப்புலிகள்தான் காரணமாயிருந்தனர். அதன் பொருட்டு அவர் கோபம் நியாயம்தான். "அரவணைத்தேன். எனக்குத் தெரியாமலேயே பல காரியங்களைச் செய்துவிட்டனர், அதனால் வெறுத்தேன்" என்று தெரிவித்திருப்பாரானால் சரியாக இருந்திருக்கும். அதற்கு மாறாக 'தமிழ் ஈழ' ஆதரவாளராக இருந்து செயற்பட்டவர் என்னும் உண்மையை மறைத்துப் பேசுவது முறையாக இல்லை. முரசு அதனைச் சுட்டிக்காட்டியது சரியானதே.

மு. இராசநாயகம், இலண்டன்.

## கலைஞர் சொன்னது சரியா?

அம்மையார்-பிரபா வாழ்த்தும், நன்றியும் பிரமாதம். பலம், பலமறிய ஆவல் என்று ஆரம்பித்து, 'மாவீரர் தினத்துக்காக நீங்கள்பட்ட சிரமத்துக்கும், செய்த செலவுக்கும் என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்' என்று பிரபா சொல்வதாக முடித்திருந்தார் கா.பூ.கந்தசாமியார். நயமான கற்பனை. நிஜமும் அதுதானே?!

ஏ. ஜெயக்குமார், பதுளை.

□●□

'தாய்' விட்டுச் சென்ற இடத்தை 'தூக்கு மேடைக் குறிப்பு' நிறைவு செய்கிறது. எத்தனை அருமையான மனிதர்களை வரலாறு உருவாக்கியிருக்கிறது. நெஞ்சுரம் கொண்ட அத்தகைய மனிதர்களை பலிகொடுத்துத்தான் மனித சமூகம் இன்றைய உயரத்தில் ஏறிநிற்கிறது. சிறைப்பட்டபோதும் மனம் உடையாத ஜோசப்-மேரி தம்பதியினரின் உறுதி வியக்கவைத்தது.

திருமதி லோஜினி கிறிஸ்டி, நீர்கொழும்பு.

□●□

சுஜாதாவின் 'அனிதா' சூப்பர். நான் கதையைத்தான் சொல்கிறேன். ஷர்மாவை அனிதாதான் கொன்றிருப்பாரோ? என் ஊகம் சரியாக இருந்தால், அனிதாதான் பாவம். இளங்கரங்களில் விலங்கு ஏறும்.

எஸ். ஹரிகரன், பசறை.

□●□

'பூலான் தேவி' தொடர்பாக முன்னர் இருந்த கண்ணோட்டங்களை 'முரசின்' தொடர் மாற்றிவிட்டது. அவள் சந்தித்த மனித மிருகங்கள்தான் பூலான் புயலாக மாறக் காரணம். கொடிய கொள்ளைக்காரியாக பூலானை நினைத்த என்போன்றவர்களுக்கு பூலானின் பக்கமுள்ள நியாயங்கள் இப்போதுதான் புரிகின்றன.

செல்வி ஆர். ரஞ்சனி, கொழும்பு-11.

□●□

பழிவாங்கும் பூலான்கள் தோன்றுவதற்கு யார் காரணம்? ஆழ்ந்து சிந்தித்தால் உண்மை உறைக்கும். உண்மைகள் உறைக்காதவரை பூலான்கள் அவசியம்தான்! சட்டமும், நீதியும் வளைந்துபோகும்போதுதான் சாதாரண மனிதர்கள் சட்டத்தைத் தமது கையிலெடுக்கத் துணிகிறார்கள்.

எல். பௌசியா, கண்டி.

□●□

முரசின் அறிமுக எழுத்தாளர்கள் கனகசபை தேவகடாட்சம், ஆத்மராஜா றூத் சந்திரிக்கா, எம்.சுரேஸ், மானுடபுத்ரன் ஆகியோரின் படைப்புக்களில் புதுவேகம் இருக்கிறது. எழுதுவதும், சிந்திப்பதும் ஒரு சிலரின் குத்தகையல்ல என்பதை முரசு நிரூபித்துவருகிறது. மேலும் புதிய படைப்பாளிகளை முரசு தரவேண்டும்.

ந. சத்தியேந்திரன், மட்டக்களப்பு.

# தாமதமாகிவரும் அரசியல் தீர்வு முயற்சி!

## இந்தியத் தலைவர்களுக்கு டக்ளஸ் விபரிப்பு!

(அலுவலக நிருபர்)

"இலங்கைத் தமிழர்களுக்கு உதவி செய்ய நினைத்தால், அது புலிகளுக்கு ஆதரவானதாகிவிடுமோ என்று இந்திய அரசியல் தலைவர்கள் பலர் தயக்கம் காட்டுகின்றனர்." இவ்வாறு ஈ.பி.டி.பி செயலாளர்நாயகமும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் இந்தியா சென்று அங்குள்ள அரசியல் தலைவர்களுடன் பேசிவிட்டு டக்ளஸ் தேவானந்தா நாடு திரும்பியுள்ளார்.

இந்திய வெளிநாட்டமைச்சர் ஐ.கே. குஜ்ரால், இந்திய உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தா, அமைச்சர்கள் அருணாசலம், பாலசுப்பிரமணியம் ஆகியோரையும், காங்கிரஸ் கட்சித் தலைவர் சீதாராம் கேசரி, பாரதிய ஜனதாத் தலைவரும் முன்னாள் பிரதமருமான வாஜ்பாய், அத்வானி, தமிழக மாநிலக் காங்கிரஸ் தலைவர் ஜி.கே.மூப்பனார், இந்திய மார்க்சியக் கட்சித் தலைவர் ஹரித்கிஷன் சிங் சுர்ஜித், முன்னாள் பிரதமர் சந்திரசேகர் மற்றும் ராஜிவ் காந்தியின் பாரியார் சோனியா காந்தி, பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் ஆகியோர் உட்பட பல தலைவர்களைச் சந்தித்து இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக எடுத்துக் கூறியதாக டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் தவிர ஏனையோர் புலிகள் இயக்கத்தினருக்கு எதிரான கருத்தைக் கொண்டிருந்தனர். "இந்தியாவைத்தான் வேண்டாம் என்று துரத்திவிட்டீர்களே! இனிமேல் எப்படி நாம் தலையிடமுடியும்?" என்று காங்கிரஸ் கட்சி எம்.பிக்கள் கேள்வி எழுப்பினார்கள்.

"இலங்கைத் தமிழர் பிரச்சனையில் நியாயமான அனுதாபம் காட்டுவது புலிகளுக்கு சார்பான நிலைப்பாடாக அமையாது. இந்தியாவின் அனுதாபத்தை தமிழ் மக்கள் பெரிதும் எதிர்பார்க்கிறார்கள்.

அரசியல் தீர்வு முயற்சிகள் ஒரு வரையறைக்கு மேல் நகரமுடியாமல் இருக்கின்றன. இனப்பிரச்சனையோடு சம்பந்தப்பட்ட சகல தரப்புக்களையும் உடன்பாட்டுக்குக் கொண்டுவரக்கூடிய பணியை இந்தியா செய்ய முடியும். அரசியல் தீர்வை விரைவுபடுத்த வேண்டிய அவசியத்தையும் இந்தியா வலியுறுத்த வேண்டும்" என்று இந்திய வெளிநாட்டமைச்சர் உட்பட முக்கிய தலைவர்களிடம் எடுத்துக் கூறியதாக டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்துள்ளார்.

# நிபந்தனையில்லாத நேரடிப் பேச்சுவார்த்தை!

## ஐ.தே.கட்சியும் ஆதரவு தெரிவிப்பு!

"பாராளுமன்றத்திலுள்ள 11 அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குழு எல்.ரி.ரி.ஈ.யினருடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும். இதன் மூலம் இந்நாட்டில் சமாதானமும் அமைதியும் ஏற்படுத்த அவ்வியக்கம் தயாராக இருக்கிறதா என்பதைக் கண்டறிய முடியும். இதற்கு, மோதல் தவிர்ப்பு உடன்பாடு போன்ற முன் நிபந்தனைகள் எதுவும் விதிக்க வேண்டிய அவசியமில்லை."

இவ்வாறு ஐக்கிய தேசிய ஜனநாயக லலித் முன்னணியின் (U.N.D.L.F) சிரேஷ்ட உறுப்பினரும் பாராளுமன்ற அங்கத்தவருமான ரவி கருணாநாயக்க கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "முன் நிபந்தனைகளை விதிப்பதனால், எந்தத்தரப்பு நிபந்தனையை மீறுகிறது என்ற சந்தேகக் கண்ணோட்டமே எப்போதும் இருதரப்பாரிடமும் இருந்துவரும். ஆகவே ஓரிருமாதகால எல்லையை வகுத்து அதற்குள்ளாகப் பேச்சுவார்தையைப் பூர்த்தி செய்யவேண்டும்" என்றார்.

பாராளுமன்றத்துக்குள்ளேயும் வெளியேயுமுள்ள தமிழ்க்கட்சிகள் தாங்களும் இந் நாட்டில் வாழும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறிவருகின்றன. அவர்களும் எல்.ரி.ரி.ஈ.யுடன் நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டே ஒரு நல்ல முடிவினை ஏற்படுத்த வேண்டும் என்று வற்புறுத்தி வருகின்றனர்.

அரசாங்கத்துக்கும் எல்.ரி.ரி.ஈ.க்குமிடையில் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு வேறு எந்த மூன்றாந்தரப்பு நாடுகளும் குறுக்கிடவேண்டிய அவசியமில்லை.

எந்தவொரு நாடும்-விரும்பினால்- இருதரப்பினரையும் பேச்சுவார்த்தைக்கு இணங்க வைப்பதில் முயன்று பார்க்கலாம். இருதரப்பினரையும் நேரடியாகப் பேச்சுவார்த்தையில் இறக்கிவிட்டு மூன்றாந் தரப்பினர் ஒதுங்கிவிடவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க, பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும், எல்.ரி.ரி.ஈ.யினருடன் நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதில் தமக்கு ஆட்சேபனை இல்லை என்று கூறியிருக்கிறது.

ஆயுதங்களைக் கீழே போடவேண்டும் என்றோ போர் நிறுத்த உடன்படிக்கை செய்யவேண்டுமென்றோ முன் நிபந்தனை விதிக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை என்று அக்கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

# வடக்கில் படை பலத்தை குறைக்கும் தந்திரம்!

## கிழக்கில் மேலும் தாக்குதல் தொடரும்?

வடக்கிலும், கிழக்கிலும் உள்ள புலிகள் இயக்கத்தினரிடம் ஆட்டிலறி ஆயுதங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதால் பாதுகாப்புப் படை முகாம்களின் விஸ்தீரணத்தை அதிகமாக்கும் அவசியம் ஏற்பட்டுள்ளது.

புலுக்குணாவை முகாம் தாக்குதல் வெற்றிகரமாக நடத்தப்பட்டமையால் கிழக்கில் புதிய தாக்குதல்களுக்கான உற்சாகம் புலிகளின் படையணிகளிடம் மேலும் அதிகமாகி இருக்கிறது.

கிழக்கில் ஒரு குறிப்பிட்டளவு படையினரை மட்டும் வைத்துக்கொண்டு, வடக்கில் படைகளின் ஒன்று குவிந்த தாக்குதலை மேற்கொள்ளும் தந்திரமும் கேள்விக்குள்ளாகியுள்ளது.

கிழக்கில் புலிகளின் படையணிகள் பலமாகியுள்ளதால் அங்குள்ள முகாம்களின் பாதுகாப்புக்கு பெருமளவான படையினர் தேவைப்படுவர்.

கிழக்கில் அடிக்கடி படைநகர்வுகளை மேற்கொண்டு தமது முகாம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அவசியமும் படையினருக்கு ஏற்பட்டுள்ளது. புலிகளிடம் நீண்டதூர ஆயுதங்கள் இருப்பதாலும், அவர்களது தாக்குதல் திறன் மேலோங்கியிருப்பதாலும் அவ்வாறான படை நகர்வுகளுக்கு பெருந்தொகையான படையினர் தேவைப்படுவர்.

கிழக்கில் முகாம்களை மட்டுமல்லாமல் எல்லைப்புற சிங்களக் கிராமங்களின் பாதுகாப்புக்கும் படையினர் தேவைப்படுகின்றனர்.

வடக்கில் நிலைகொண்டுள்ள பாதுகாப்புப் படையினரில் கணிசமான பகுதியினரை கிழக்குக்கு நகர்த்த வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்த புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

அதனால் கிழக்கில் மேலும் தாக்குதல்கள் தீவிரமாகும். அதேவேளை படையினரும் அடிக்கடி நகர்வுகளை மேற்கொள்வர். புலிகளை ஒரு எல்லைவரை விரட்டிச் சென்றுவிட்டு திரும்பிவரும் நடவடிக்கையில்தான் படையினர் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஆயினும் படையினர் முன்னேறிச் செல்வதற்கு இடையில் புலிகள் வேறு பகுதிக்குச் சென்றுவிடுகின்றனர்.

படையினர் மட்டக்களப்பு மாவட்டத்தில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கும்போது எல்லைப்புறப் பகுதிகளிலும், வேறு பகுதிகளிலும் புலிகளின் அணிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பரீட்சையில் 'குதிரைகள்'

கிழக்கு மாகாணத்தில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 'குதிரைகள்' தொகை இம்முறை அதிகமாக இருந்தது என்று ஒரு பரீட்சை மேற்பார்வையாளர் கவலை தெரிவித்துள்ளார். பரீட்சை எழுத வேண்டிய ஒருவருக்குப் பதிலாக ஆள் மாறாட்டம் செய்து பரீட்சை எழுதுபவரை குதிரை என்று அழைக்கிறார்கள்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய மூவினக் குதிரைகளை 'இன அபிமானம்' என்ற ரீதியில் சில பரீட்சை மேற்பார்வையாளர்கள் கண்டும் காணாமல் இருந்தனர் என்றும் கூறப்படுகிறது.

# கற்பிட்டியில் பயணிகள் தடுத்து வைப்பு!

## பயணம் செய்ய வேண்டாம் என அறிவிப்பு!

(மன்னார் மாவட்ட நிருபர்)

மன்னாரிலிருந்து படகுகள் மூலம் கற்பிட்டிக்குப் பயணம் மேற்கொள்வோர் கற்பிட்டியில் சில நாட்கள்வரை தடுத்து வைக்கப்படுகின்றனர்.

அதனால் மிக மிக அவசரத்தேவைகளுக்கேனும் வெளியிடங்களுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மன்னாரிலிருந்து கற்பிட்டிக்கு வரும் பயணிகள் பலத்த சோதனையின் பின் தமது அடையாள அட்டையை ஒப்படைத்துவிட்டு சில நாட்கள் கழித்து வருமாறு கூறப்படுகின்றது.

அவ்வாறு வரும்போது, தாம் தங்கப் போகும் பகுதிக் கிராம அதிகாரியின் சிபாரிசுக் கடிதமும் கொண்டு வர வேண்டும். அப்படிச் செய்தால்தான் அடையாள அட்டையை மீளப்பெற முடியும்.

இந்தப் புதிய நடைமுறையினால் பயணிகள் பெரும் அதிருப்தியடைந்துள்ளனர். படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து மற்றொரு பிரதேசத்திற்கு வருவதற்கு இந்தளவு கடுமையான நடவடிக்கை மேற்கொள்வதா எனவும் அவர்கள் கேட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் தினத்தை முன்னிட்டு கடந்த 20.11.1996 முதல் இந்த நடைமுறை தற்காலிகமாக பின்பற்றப்பட்டது. எனினும் இது தொடர்வது குறித்து பலரும் அச்சமும், ஏமாற்றமும் அடைந்துள்ளனர்.

# ஒத்துழைப்பு வழங்கக் கோருகிறார் தளபதி

## 900 கைக்குண்டுகள் மீட்கப்பட்டதாம்!

யாழ்ப்பாணக் குடாநாட்டில் படையினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

51 வது படையணியின் கட்டளைத் தளபதியான ஜானக பெரேரா யாழ்ப்பாணத்தில் ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார்.

"விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் கடந்த மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நடத்திய தாக்குதல்களில் 39 பொதுமக்கள் காயமடைந்தனர். ஒருவர் பலியானார்.

யாழ்ப்பாண நகரப் பகுதியில் மட்டும் சுமார் 900 கைக்குண்டுகளை பர்துகாப்புப் படையினர் கண்டுபிடித்தனர்.

மக்களின் ஒத்துழைப்பின் பேரிலேயே பெருந்தொகையான கைக்குண்டுகளை மீட்க முடிந்தது. எனினும் பாதுகாப்புப் படையினரின் நோக்கத்தில் சந்தேகம் கொண்டுள்ள பொதுமக்கள் சிலர் பாதுகாப்பு படையினருக்கு ஒத்துழைப்பு வழங்கப் பின்நிற்கிறார்கள்.

அவர்களுக்கு நாம் சொல்ல விரும்புவது என்னவென்றால் உங்களுடைய மனதை மாற்றி எங்களுடன் ஒத்துழையுங்கள் என்பதாகும். எதிர்காலம் உங்களுக்கும், உங்கள் குடுபங்களுக்கும் உரியது." இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடவுளைக் காணவில்லை

யாழ் குடாநாட்டில் உள்ள இந்து ஆலயங்கள் சிலவற்றில் விலை உயர்ந்த பொருட்கள், விக்கிரகங்கள் என்பவை காணாமல் போயுள்ளன.

கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தில் இருந்த வழிபாட்டுச் சிலை மாயமாய் மறைந்துள்ளது. மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்திலும் விலை உயர்ந்த சில பொருட்கள் காணாமல் போயுள்ளதாகக் கூறப்படுகிறது.

# மரக்கறிச் சந்தை குத்தகை விவகாரம்

## இனப் பதட்டத்தை தூண்ட ஹர்த்தால்!

திருமலை நகர மரக்கறிச் சந்தை தமிழர் ஒருவரால் குத்தகை எடுக்கப்பட்டதையடுத்து பெரும்பான்மை இன குத்தகைக்காரர் ஒருவர் இன மோதல் நிலையைத் தோற்றுவிக்க முற்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட பெரும்பான்மை இனக் குத்தகைக்காரருக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பின்னணியில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

17.12.96 அன்று திருமலை நகரில் ஹர்த்தால் ஒன்று நடத்தப்பட்டதுடன், திருமலை நகரையே ஸ்தம்பிதம் அடையச் செய்வோம் என்று சிலர் கூச்சலிட்டனர்.

இச் சம்பவம் தொடர்பாக அறியப்படுவதாவது: திருமலை நகர மரக்கறிச் சந்தையை இதுவரை பெரும்பான்மை இன குத்தகைக்காரர் ஒருவரே வருடாவருடம் குத்தகை எடுத்துவந்தார். குத்தகைக்கான கோரல் எதுவும் இல்லாமல் மிகக்குறைந்த தொகையில் குத்தகை எடுப்பது வழக்கமாக இருந்தது. கடந்த முறை மூன்று இலட்சம் ரூபாய்க்கு குத்தகை எடுத்திருந்தார்.

இம்முறை, நகரசபையினர் உரிய முறையில் குத்தகை விடத் தீர்மானித்தனர். குத்தகைக்கான கோரல் அறிவிக்கப்பட்டது. வழக்கமாக குத்தகை எடுப்பவர் விண்ணப்பம் போடவில்லை. இந்நிலையில் விண்ணப்பம் போட்டவர்களுக்கு குத்தகை கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இதனை அறிந்த அந்தப் பெரும்பான்மை இன குத்தகைக்காரர் திருமலை பிரிகேடியர் உதவியுடன் நகர சபையினருடன் பிரச்சனைப்பட்டு, குத்தகைக் கோரல் திகதியை நீடிக்கவைத்தார்.

அதன்படி டிசம்பர் 2ம் திகதிவரை நீடிக்கப்பட்டது. அப்படியிருந்தும்கூட அவர் தனது விண்ணப்பத்தை அனுப்பவில்லை.

இந்நிலையில், அந்தோனி வில்சன் கென்னடி என்பவருக்கு 5 இலட்சத்து 140 ரூபா 50 சதத்துக்கு மரக்கறிச் சந்தை குத்தகைக்குக் கொடுக்கப்பட்டது. இதன் பின்னர் கடந்த முறை குத்தகை எடுத்த குத்தகைக்காரர் தனது ஆட்களையும் திரட்டிக் கொண்டு பிரச்சனை கிளப்பியிருக்கிறார்.

ஹர்த்தால் நடத்தி இனமோதலைத் தூண்டும் முறையில் பிரச்சனைகளை வளர்த்திருக்கிறார். அரசியல் இலாபம் கருதி ஐ.தே.கட்சி பா.உ ஒருவர் அவருக்குத் துணை நிற்பது மக்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தி இருக்கிறது.

# கரையில் தலையில்லாத உடல்கள்

வடமராட்சி கிழக்குப் பிரதேச கடற்கரைப் பகுதிகளில் உருக்குலைந்த சடலங்கள் கரை ஒதுங்கி வருகின்றன.

மாமுனைக் கடற்கரைப் பகுதியில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் உருக்குலைந்த பெண் ஒருவரின் சடலம் காணப்பட்டது. அப்பகுதியில் இரண்டு ஆண்களின் சடலங்களும் கரை ஒதுங்கியிருந்தன.

நாகர்கோவில் பகுதியில் மூன்று ஆண்களின் சடலங்கள் உருக்குலைந்த நிலையில் கரை ஒதுங்கின. அவற்றில் ஒரு சடலத்தின் தலை துண்டிக்கப்பட்டுக் கிடந்தது.

# "இலங்கை அரசுக்கு உதவாதே!"

## அமெரிக்காவுக்கு கண்டனம்!

தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் 'தமிழீழ ஆதரவாளர்' கூட்டம் ஒன்று நடைபெற்றது. கூட்டத்துக்கு தமிழ் தேசியக் கட்சித் தலைவர் பழ.நெடுமாறன் தலைமை தாங்கினார்.

"புலிகளுக்கு ஆதரவாகப் பேசியதாகக் கைதுசெய்யப்பட்டுள்ள மணியரசன், சுபவீரபாண்டியன் ஆகியோரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

புலிகளுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள தடையை உடன் நீக்க வேண்டும்.

சிறீலங்கா அரசுக்கு சார்பாக இலங்கை விவகாரத்தில் அமெரிக்கா தலையிடுவதை நிறுத்த வேண்டும்" ஆகிய தீர்மானங்கள் அக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

தமிழக அரசின் போக்குத் தொடர்பாகவும், தமிழக முதல்வர் கருணாநிதியின் புலிகள் எதிர்ப்பு தொடர்பாகவும் கூட்டத்தில் கலந்துகொண்ட பலர் கண்டித்து உரையாற்றினார்கள்.

# விசேட அதிரடிப்படை முகாம் தாக்குதல்!

## புலிகள் வெளியிட்ட ஆயுதப்பட்டியல்

அம்பாறை-கண்டி வீதியிலுள்ள புலுக்குணாவை விசேட அதிரடிப்படை முகாம் மீதான தாக்குதலில் தமது தரப்பில் 26 பேர் பலியானதாக புலிகள் அறிவித்துள்ளனர். ஒரு கப்டன், ஒரு லெப்டினன்ட், ஏழு இரண்டாம் லெப்டினன்ட்கள் உட்பட 26 பேர் பலியானதாக தெரிவித்துள்ளனர்.

கிழக்கில் விசேட அதிரடிப்படை முகாம் ஒன்றுமீது புலிகளால் நடத்தப்பட்ட முதலாவது வெற்றிகரமான தாக்குதல் இதுவாகும்.

கடந்த ஆண்டு மட்டக்களப்பு-புதுக்குடியிருப்பு விசேட அதிரடிப்படை முகாம்மீது புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்று தோல்வியடைந்திருந்தது. அத் தாக்குதலில் பலியான கரும்புலி மேஜர் ரங்கனின் நினைவாகவே புலுக்குணாவை முகாம் தாக்குதல் நடத்தப்பட்டதாகப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதத்தில் புலுக்குணாவை முகாமிலுள்ள விசேட அதிரடிப்படையினருடன் புலிகள் மோதியதில் 17 அதிரடிப்படையினர் பலியாகினர்.

இதேவேளை, புலுக்குணாவை முகாம் தாக்குதலில் காயமடைந்த புலிகளை பாவற்கொடிச் சேனை விநாயகர் வித்தியாலயத்தில் வைத்து புலிகள் சிகிச்சை செய்தனர். விமானப்படையினர் பாடசாலை மீது குண்டுத் தாக்குதல் நடத்தினார்கள்.

காயமடைந்திருந்த நான்கு புலிகள் இயக்க உறுப்பினர்கள் குண்டுத்தாக்குதலில் பலியானார்கள். பொதுமக்கள் தரப்பில் ஒரு பெண் பலியானார். பாடசாலைக் கட்டிடமும் சேதமடைந்தது.

### ஆயுதப் பட்டியல்

புலுக்குணாவை முகாமில் தம்மால் கைப்பற்றப்பட்டதாக புலிகள் வெளியிட்டுள்ள பட்டியல் பின்வருமாறு:

85-எம்.எம். ஆட்டிலறி 01
85-எம்.எம். ஆட்டிலறி செல் 165
81-எம்.எம். மோட்டர் 01
81-எம்.எம். மோட்டர் செல் 26
60-எம்.எம். கொமாண்டோ மோட்டர் 02
60-எம்.எம். மோட்டர் 01
60-எம்.எம். மோட்டர் செல் 95
எல்-3 எம்.எம்.ஜி. ரகத் துப்பாக்கி 05
எல்-3 எம்.எம்.ஜி. இதற்குரிய ரவை 26000
ஜி.-3 எல்.எம்.ஜி. துப்பாக்கி 03
ஜி.-3 எல்.எம்.ஜி. லிங்குடன் ரவை 2842
ரி.-81 எல்.எம்.ஜி. துப்பாக்கி 02
பி.கே. எல்.எம்.ஜி. துப்பாக்கி 01
பி.கே. எல்.எம்.ஜி. இதற்குரிய ரவை 250
ஆம்ஸ்கோர் 01
40. எம்.எம். பிஸ்டல் 01
கோல்கொமாண்டோ ரகத் துப்பாக்கி 22
ரி. 56-1 ரகத் துப்பாக்கி 20
ரி. 56-2 ரகத் துப்பாக்கி 06
எம். 70. ரகத் துப்பாக்கி 08
றிப்பிட்டல் ரகத் துப்பாக்கி 05
சொட்கண் 02
கேஸ் கண் 01
பிறணியம் பிஸ்டல் 01
ஏ.கே. ரவை 9652
5.56 ரவை 36460,
மொபைல் செற் 01,
புகைக் குண்டு 183
வோக்கி 01

# அம்பாறை 'சமுர்த்தி' ஊழியர்கள் இடை நிறுத்தம்!

(ஏறாவூர் நிருபர்

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே வழங்கப்பட்ட தமிழ்ப்பகுதிகளுக்கான "சமுர்த்தி" ஊக்குவிப்பாளர் நியமனம் திடீர் திடீரென மேலும் பல தடைகளை எதிர் நோக்கிவருகிறது.

அம்பாறையிலுள்ள தமிழ்ப்பகுதிகளில் சமீபத்தில் வழங்கப்பட்டிருந்த "சமுர்த்தி" ஊக்குவிப்பாளர் நியமனம் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரின் திடீர் உத்தரவினால் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

நியமனம் பெற்றுச் சில நாட்களின் பின்னரே பணி நிறுத்த உத்தரவு கிடைத்ததனால் தமிழ்ப் பகுதி மக்கள் கவலையடைந்துள்ளனர்

கடந்த மாதம் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வழங்கப்படவிருந்த "சமுர்த்தி" நியமனங்களும் கூட்டணியினரின் தலையீட்டால் இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

# யாழ் அரச நிர்வாகத்தில் முறைகேடுகள்!

## அதிகாரிகள் போக்கால் மக்கள் அதிருப்தி!

யாழ் குடாநாட்டில் அரச நிர்வாகத்தில் உள்ள சிவில் அதிகாரிகள் சிலர் தலைகால் தெரியாமல் ஆடுகிறார்கள் என்று பொதுமக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

முன்னர் விடுதலைப் புலிகளின் நிர்வாகம் இருந்தபோது அவர்களுக்கு நெருக்கமாக காட்டிக் கொண்ட அதிகாரிகள் சிலர் தற்போது படை அதிகாரிகளுடனும், கொழும்பில் உள்ள அரச உயரதிகாரிகள் சிலருடனும் நட்பை ஏற்படுத்திக்கொண்டு பொதுமக்களுடன் முரண்டு பிடிக்கிறார்களாம்.

யாழ் அரசாங்க அதிபர் பத்மநாதன் தொடர்பாகவும் அதிருப்திகள் தெரிவிக்கப்படுகின்றன. யாழ் குடாநாட்டு புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட ஒரு அதிகாரியுடன் இணைந்து யாழ் குடாநாட்டில் மதுபானக் கடை ஒன்று திறக்க காரணமாக இருந்தார் என்று புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

இதேவேளை யாழ் குடாநாட்டு அரச நிர்வாகச் சீர்கேடுகள் தொடர்பாக யாழிலிருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்றில் பின்வரும் புகார் தெரிவிக்கப்பட்டிருக்கிறது:

யாழ்ப்பாணத்தில் ஒருகிலோ சீனி 50 ரூபாவாக வெளிச்சந்தையில் விற்கப்படுகிறது. கப்பலில் சீனி வந்ததாகப் பத்திரிகைகள் கூறுகின்றன. உணவுத் திணைக்களத்தில் சீனி கையிருப்பில் இருப்பதாக கச்சேரி கூறுகின்றது. அப்படியானால் சந்தையில் சீனியைக் கூடுதல் விலையில் விற்பனை செய்வதைத் தடுக்கும் விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் எங்கே? அரச நிர்வாகம் எங்கே?

மண்ணெண்ணெய் வெளிச்சந்தையில் லீற்றர் 60 ரூபாவாக விற்கப்படுகிறது. மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட மண்ணெண்ணெய் எங்கே? மக்களுக்கு வழங்கியது எவ்வளவு? நிர்வாகம் பதில் சொல்லுமா?

என்று புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ் அரச நிர்வாக அதிகாரிகள் சிலர் கறுப்புச் சந்தையோடு தொடர்புவைத்துக் கொண்டு செயற்படுவதாக மக்கள் சந்தேகிக்கின்றனர். இதன் மூலமாக முக்கிய நிர்வாக அதிகாரிகள் கொழுத்த லாபம் சம்பாதிக்கிறார்களாம்.

# மின் விநியோகம் மீண்டும் சீர்குலைப்பு!

(ஏறாவூர் நிருபர்)

கடந்த இருமாதங்களுக்கு மேலாகச் சேதப்படுத்தப்பட்டு தடைப்படுத்தப்பட்டிருந்த மட்டக்களப்புக்கான அம்பாறை-இங்கினியாகலை ஊடான மின்விநியோகம் சென்ற 5ம் திகதி திருத்தியமைக்கப்பட்டு மின் விநியோகம் சீர்செய்யப்பட்டது. திருத்தம் செய்யப்பட்டு ஒருவாரத்தின் பின்னர் இந்த மின் விநியோக வழியை புலிகள் மீண்டும் சேதப்படுத்தி மட்டக்களப்பு மாவட்டத்திற்கான ஒரு வழி மின்விநியோகத்தைத் தடை செய்துள்ளனர்.

களுவாஞ்சிக்குடியில் 3 பாரிய மின் கம்பங்கள் சாய்க்கப்பட்டதன் விளைவாக மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு பகுதி இருளில் மூழ்கியுள்ளது.

# கற்பிட்டியில் கெடுபிடிகள் அதிகரிப்பு!
## பயணம் செய்வோரின் தொகை குறைவு!!

(மன்னார் நிருபர்)

மன்னாரிலிருந்து கற்பிட்டியூடாக வெளியிடங்களுக்குச் செல்வோர் மீது பலத்த கெடுபிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனையடுத்து மிக மிக முக்கிய தேவைகளுக்காக மட்டும் பயணம் செய்ய வேண்டிய நிலை இப்பகுதி மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

முன்னர் மன்னாரிலிருந்து கற்பிட்டி வழியாக வருவோர் பலத்த சோதனையின் பின் உடனடியாக தத்தம் இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

ஆனால், தற்போது கற்பிட்டியில் சில நாட்கள்வரை தங்கியிருந்து அதன் பின்னரே தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியும்.

இப்புதிய நடைமுறை கடந்த 20-11-96 முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. அப்போது புலிகளின் மாவீரர் தினத்தை முன்னிட்டே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்பட்டது.

ஆனால் இன்னமும் இந்த நடைமுறை தொடர்கிறது. இதனால் நேர்முகப் பரீட்சை போன்ற அவசரத் தேவைகளுக்கு உடனடியாக சமூகமளிக்க முடியாத இக்கட்டான நிலை தோன்றியுள்ளது.

இதேவேளை இப்பகுதிகளுக்கிடையில் சில நாட்களாக படகுப் போக்குவரத்தும் நடைபெறவில்லை. இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தில் ஏற்பட்ட புயலையடுத்து கடல் பகுதியில் கொந்தளிப்பினால் படகுப் பயணத்தில் தடையேற்பட்டதாகத் தெரிகிறது.

கடற்படைப் பாதுகாப்புடனான சரக்குப் படகு சேவை வாரத்திற்கொருதடவை நடைபெறுவதால் மன்னார்ப் பகுதியில் பொருட்களுக்குத் தடை ஏற்பட்டுள்ளது.

# விரைவாக வளரும் போதைப் பொருள் வியாபாரம்
## பாவனையாளர் தொகை 50 ஆயிரம்!

இலங்கையில் போதைப்பொருள் வியாபாரம் மிகவேகமாகப் பரவுவதாகவும் இதனைப் பாவிப்பவர்களின் தொகை 50 ஆயிரத்துக்கும் அதிகமாகி வருவதாகவும் பொலிசார் அண்மையில் வெளியிட்ட அறிக்கை ஒன்று கூறுகிறது. விமான நிலையம் மற்றும் துறைமுகங்களில் போதைப் பொருள் கடத்துவோரைக் கண்டு பிடிக்க கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும் பல்வேறு முறைகளில் போதைப் பொருள்கள் நாட்டுக்குள் கொண்டுவரப் படுகின்றன.

போதைப் பொருட்கடத்தலில் பணம் படைத்த பெருமுதலாளிகள் ஈடுபட்டிருப்பதாகவும் சர்வதேசக் கடத்தல் மன்னர்களுடன் இவர்கள் நெருங்கிய தொடர்பு வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவிலிருந்து படகு மூலம் 13 கிலோகிராம் ஹெரோயின் எனும் போதைப் பொருளை ஒரு வர்த்தகர் கடத்திவரும்போது அண்மையில் கைது செய்யப்பட்டதாகவும், இவ்வருடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கடத்தல்களில் இதுவே மிகக் கூடுதலானது என்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சி.எல்.ரத்நாயக்கா தெரிவித்தார்.

நடப்பு வருடம் பிடிபட்ட போதைப் பொருட்களின் பெறுமதி ரூ.5 கோடி 50 இலட்சம் என்றும் போதைப்பொருள் கடத்திய குற்றத்துக்காகப் பிடிபட்டோர் தொகை 7650 என்றும் அதிகாரி தெரிவித்தார்.

# ஊக்குவிப்பு அலவன்ஸ் இன்றேல் உண்ணாவிரதம்
## ஊழியர் சங்கம் எச்சரிக்கை

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்திலுள்ள குறிப்பிட்ட சில அரச துறை ஊழியர்களுக்கு கிடைக்க வேண்டிய ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குவதில் இன்னும் தாமதம் காட்டப்பட்டு வருகின்றது.

இந்நிலை தொடருமானால் எதிர்வரும் 23-12-96 அன்று பாரிய உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கப்போவதாக மன்னார் மாவட்ட அரச, கூட்டுத்தாபன, நியதிச்சபை, ஊழியர் தொழிற்சங்கங்களின் ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இவ்வமைப்பின் தலைவர் எஸ்.எஸ். லெம்பேட் ஜே.பி. தகவல் தருகையில், "இது விடயமாக ஜனாதிபதிக்கு மாவட்ட அரசாங்க அதிபரூடாக மகஜர் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. அதில் இம் மாதம் 23 ஆம் திகதிக்கிடையில் இதனை வழங்குமாறு கேட்டுள்ளோம்" என்றார்.

கடந்த 02-12-96 அன்று இவ்வமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தத் திட்டமிட்டிருந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் பொலிஸார் அனுமதி வழங்க மறுத்ததையடுத்து ஒத்திவைக்கப்பட்டதாக செயலாளர் பி.சிறிகாந்தன் தெரிவித்தார்.

போக்குவரத்து, வைத்தியசாலை, பாடசாலை ஆகிய துறை ஊழியர்களுக்கே இக்கொடுப்பனவு வழங்கப்பட வேண்டியுள்ளது.

இதேவேளை கடந்த 9-12-96 அன்று மன்னார் இ.போ.ச தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அரசாங்க அதிபர் எஸ்.மரியதாசன் குரூஸைச் சந்தித்து, இது விடயமாக ஆராய்ந்தனர்.

# தமிழ்ச்சேவை கேட்பதில்லை

மலையகப் பகுதிகளில் (ஊவா) கடந்த சில மாதங்களாக வானொலி தமிழ் வர்த்தக சேவை நிகழ்ச்சிகளை அறவே கேட்கமுடியாதுள்ளது. சில இடங்களில் தெளிவில்லாமல் கேட்க முடிந்தாலும் கூட பெரும்பாலான இடங்களில் அறவே கேட்கமுடியாதுள்ளது. இதுபற்றி எத்தனையோ முறை "தினமுரசு" மூலமாக, எத்தனையோ நேயர்கள் எழுதி இருந்தாலும்கூட இதுவரை இதைப்பற்றி எமது தமிழ் வானொலிப் பிரிவு அதிகாரிகள் கூட இதற்குத் தகுந்த விளக்கமளிக்கவில்லை.

கடந்த சில மாதங்களாக தமிழ்ச் சேவை நிகழ்ச்சிகளை "ருகுணு" வானொலிச்சேவை ஊடாக காலை 8 மணிமுதல் மாலை 3 மணிவரை எடுத்துக் கொடுத்தார்கள். ஆனால் கடந்த ஒருவாரகாலமாக இச்சேவையிலும் தமிழ்ச்சேவை நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதை நிறுத்தி விட்டார்கள். எனவே இது சம்பந்தமான அதிகாரிகள் இதற்கான நடவடிக்கையை உடன் எடுக்க வேண்டும் என அன்போடு வேண்டுகின்றேன். அல்லது வரும் காலங்களில் வானொலிப் பெட்டி வைத்திருக்கும் தமிழ் நேயர்கள் வானொலி அனுமதிப்பத்திரம் பெறுவது கூட கேள்விக்குறியாகிவிடும்.

கு.தில்லைநாதன், நாரங்கலை, ஹாலி-எல.

# பரீட்சையும் - அலைச்சலும்

உதவித் தபால் அதிபர் தெரிவுக்கு தபால் திணைக்களத்தினால் பரீட்சை கொழும்பில் மாத்திரமே நடத்தப்படுகின்றது. திணைக்களத்தில் வேலை செய்யும் சிற்றூழியர்க்கும் உபதபால் அதிபர்களுக்கும் உதவித் தபாலதிபர்களுக்குமாக நடத்தப்படும் பரீட்சைக்கு யாழ் குடாநாட்டில் வேலை செய்யும் சிற்றூழியர்களும் உபதபாலதிபர்களும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு கொழும்புக்கு வரவேண்டியுள்ளது.

இம்முறை பரீட்சை 2.11.96 அன்று நடத்துவதாக அறிவிக்கப்பட்டு பின்னர் அப்பரீட்சை 28.12.96ம் திகதிக்குப் பின் போடப்பட்டுள்ளது.

ஆனால் திகதி மாற்றம் யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களுக்கு அறிவிக்கப்படவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து 40க்கு மேற்பட்டவர்கள்- ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி 2ம் திகதி பரீட்சை என்று கொழும்பிற்கு வந்து திரும்பிப் போகவேண்டிய நிலை ஏற்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வருவதற்கும் இங்கு தங்குவதற்கும் ஏற்படும் கஷ்டங்கள் பற்றியும் சொல்லித்தான் தெரிய வேண்டுமா?

ஆகவே, குறிப்பிட்ட பரீட்சையை யாழ்ப்பாணத்திலேயே நடத்த ஆவன செய்ய வேண்டும்.

ஆர். சுந்தரலிங்கம், யாழ்ப்பாணம்.

# கட்டிடம் கட்ட மறந்தது ஏன்?

(நிந்தவூர் நிருபர்)



சாய்ந்தமருது மாவட்ட வைத்திய சாலையில் நிருவாகக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கென கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் அத்திவாரமிடப்பட்டது. ஆனால் அத்திவாரமிடப்பட்டபின்னர் கட்டிடம் எழும்பவே இல்லை.

அத்திவாரத்துடன் கட்டிட நிர்மாணத்திற்கெனப் பொருத்தப்பட்ட இரும்புக்கம்பிகளெல்லாம் துருப்பிடித்து அழிந்து கொண்டிருக்கின்றன. சுகாதார அமைச்சு இந்த மாவட்ட வைத்தியசாலையின் நிருவாகக் கட்டிட அவசியம் உணர்ந்து உடனடியாக ஆவனசெய்யவேண்டுமெனப் பொது மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இந்த வைத்தியசாலையிலிருக்கும் 30 வருடங்கள் பழமை வாய்ந்த நீர்த்தாங்கியும் படத்தில் காணப்படுகின்றது.

# அழிவுற்றுக் கிடக்கும் சைவ ஆலயம்

பொத்துவில், இன்ஸ்பெக்டர் ஏத்தம் கிராமத்தில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயம் தற்போது அழிவுற்ற நிலையில் காணப்படுகிறது.

இவ்வாலயம் 1990ம் ஆண்டு இப்பகுதியில் ஏற்பட்ட அனர்த்தத்தின்போது அழிவுக்குள்ளாக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை இவ்வாலயம் அதே நிலையிலேயே காணப்படுகின்றது. இதேவேளை வன்செயலின்போது பாதிக்கப்பட்ட ஆலயங்களின் விபரங்களை பிரதேச செயலகம் மூலம் புனர்வாழ்வு அமைச்சு கோரியிருந்தது. இச்செய்தி வெளியாகும் முன்னமே இவ்வாலய அழிவு பற்றியும் இதற்கு உதவும் பொருட்டும் பிரதேச செயலகத்திடம் பலமுறை அறிவித்தும், நேரே பேசியும் எதுவித பலனுமில்லை.

இக்கிராமம் மாதிரிக் கிராமமாக்கப்பட்டபோது இவ்வாலயம் கவனிக்கப்படாமல் போனது மனவேதனைக்குரிய விடயமாகும்.

எனவே, இக் கிராமத்திலுள்ள பழமை வாய்ந்ததும் ஒரேயொரு ஆலயமுமான இவ்வாலயத்தினை புனரமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் பெரியோர்களையும் வேண்டுகின்றோம்.

ஆர்.சாந்தசீலன், பொத்துவில்.


மலையகத்தில் மிகச் சிறந்த
COMPUTER கல்வி நிறுவனமான

WIN 95

MIRAJ
WINDOWS 95
MS WINDOWS
WIN 95 PLUS

தனது 7ம் ஆண்டுப் பூர்த்தியை கொண்டாடுமுகமாக
COMPUTER பயிற்சியில் வழங்கும்
மீண்டும் பெற முடியாத அரியதோர் வாய்ப்பு ........

இன்று உலகிலே பெறும் புரட்சியை ஏற்படுத்தி வரும்
MS Windows '95 ஐயும் அதனுடன் தொர்புள்ள ஏனைய
அதி நவீன Packages களையும் கற்க

**50% வரை கட்டணக் கழிவு**

**DIPLOMA IN WINDOWS APPLICATIONS**

- * MICROSOFT WINDOWS 95 PLUS
- * MICROSOFT EXCEL VER 7
- * MICROSOFT WORD VER 7
- * COREL DRAW VER 5
- * PRINCIPLES OF COMPUTERS
- * INFORMATION TECHNOLOGY
- * DATA PROCESSING

* இப்பாடநெறி உங்கள் தொழில் தகைமைகளை உறுதிப்படுத்துவதோடு இதற்கு இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் பெரும் கிராக்கி நிலவும்.

ரூபா 7000/- பெறுமதியான இப்பாடநெறிக்கு நீங்கள் செலுத்த வேண்டிய கட்டணம் ரூபா 3500/- மட்டுமே

இப் பாடநெறிக்கு முதலில் வரும் 100 மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவர். "இன்றே விரையுங்கள்"

December 31ம் திகதிக்கு முன் உங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும்.

**MIRAJ INFORMATION SYSTEMS**
**196, D.S. SENANAYAKE VEEDIYA, KANDY**

MIRAJ - KANDY



COMPUTER, MATHS, SCIENCE வகுப்புக்கள்

**Computer Diploma**
Ms. Dos - Lotus
W.P - d-Bass
**Ms Office**
Windows. 3.1 -Excel
Word. Power Point
Windows 95.

Yr 9, 10, 11.(G.C.E. O/L) ற்கான புதிய கணித. விஞ்ஞான. வகுப்புக்கள் 01.01.97 முதல் ஆரம்பிக்கப்படுகின்றது.

Note: முன்கூட்டியே பதிவுகளை
Contact: மேற்கொள்ளவும்.

**Institution of Information System (I.I.S)**
No-4, 1st Floor, Fussels Lane, Wellawatte.
Opp: New market



றெறாசோ ஷிப்ஸ்
(TERRAZZO CHIPS)
★ கலர்பவுடர் (Pigments)
(Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்

**றம்சன்ஸ்**
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411



**SABONA OF LONDON** | ஆரோக்கியமான வாழ்வுக்கு சபோனா



வாதம், இரத்தக் கொதிப்பு, மூட்டுவலி, தலைவலி, கைகால் மரத்தல் முதலான நோய்களிலிருந்து நிவாரணம் பெற்ற உலகின் பலகோடி மக்கள் அயலாரிடம் உத்தரவாதம் அளிக்கும் சர்வதேச சிறப்பு பெற்ற ஒரே இயற்கை நிவாரணி.

செப்பு, வெள்ளி, 24 கரட் 5 மைக்றோன்ஸ் கனம் கொண்ட தங்க முலாம் பூசப்பட்ட வைவர்ண டிசைன்களிலும் கிடைக்கின்றன.

**சபோனா செப்புக் கையணி**

உலகம் முழுவதுமே வலம் வருகிறது சபோனா

**போலிகளை வாங்கி வருந்தாதீர்கள்**

**Brass, Silver & Gold Plated Magna Bangles are Available ISLAND WIDE**

ரூ. 750/- க்கு மேல்

இருதயக் கோளாறு குருதிச் சுற்றோட்டத் தொகுதி, மாதவிலக்கு நோவு, இரத்தோட்டத் தடை, நரம்பு முடிச்சு, வாசத்தன்மை இழப்பு, அமுக்கம், நரம்புத் தளர்ச்சி, தலைவலி, தூக்கமின்மை, தசைப்பிடிப்பு, இளைப்பு நோய், நீரிழிவு, சோர்வு, இடுப்புப் பிடிப்பு, பிரயாண அசதி, வாதநோய், வலிப்பு நோய்களுக்கு.


**சபோனா மெக்னா கையணி**




தயாரிப்பு :
சபோனா வாதரோக நிவாரண சமாஜம் லண்டன் (V.K)
Estd. 1960

SOLE AGENTS
**WINNER (PVT) LTD.**
100-1/16, CRYSTAL PALACE SUPER MARKET, KEYZER STREET, COLOMBO 11.
TEL: 434658, 345245.


## 31ம் நாள் அந்தியேட்டியும் நன்றி நவிலலும்



**அமரர் தில்லையம்பலம் மார்க்கண்டு**

தோற்றம்-09.08.1935 மறைவு-21.11.1996

கொழும்பில் 21-11-1996ல் காலமான ஏழாலையைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 4ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் தில்லையம்பலம் மார்க்கண்டு அவர்களின் 31ம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் 21-12-96 சனிக்கிழமை கொழும்பு- கொச்சிக்கடை- தம்பையா சத்திரத்தில் நடைபெறவுள்ளது. அன்னாரின் ஆத்மசாந்திக்காக நடைபெறும் இக்கிரியைகளில் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்பாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அன்னாரின் பூதவுடலுக்கான இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோர், அனுதாபச் செய்திகளை அனுப்பிவைத்தோர், பூதவுடல் தகனக்கிரியைகளில் பங்குபற்றினோர் அனைவருக்கும் இத்தால் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்-
திருமதி சரஸ்வதி மார்க்கண்டு (மனைவி)
திரு.த. மகேந்திரன் (பெறாமகன்)
திரு. ந. சிறிதரன் (மருமகன்)
மற்றும் உறவினர்கள்.

# மாறிவரும் தந்திரோபாயங்கள்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

நாரதர்

**11.12.96** அன்று புதன்கிழமை அதிகாலை நேரம். அடைமழை கொட்டிக் கொண்டிருந்தது.

மட்டக்களப்பு- அம்பாறை மாவட்ட எல்லையில் அமைந்திருந்த புலுக்குணாவை விசேட அதிரடிப்படை முகாம் நோக்கி லொறிகளிலும், ட்ரக்டர்களிலும் புலிகளின் கெரில்லா அணிகள் முன்னேறிச் சென்றுகொண்டிருந்தன.

செவ்வாய்க்கிழமையன்று புலுக்குணாவை அதிரடிப்படை முகாமுக்கு ஒரு தொலைபேசிச் செய்தி கிடைத்தது.

**"நாங்கள்தான் புலிகள் பேசுகிறோம். ஆட்டிலறிகளையும், ஆயுதங்களையும் கிளீன் பண்ணி வையுங்கள். எடுத்துச் செல்ல வருகிறோம்" என்று மறுமுனையில் பேசிய குரல் சொன்னது.**

வழக்கமான மிரட்டல் என்று நினைத்தனர் அதிரடிப்படையினர்.

11.12.96 அன்று அதிகாலை 2 மணியளவில் புலிகளின் கெரில்லாக்களின் முதல் வேட்டுத் தீர்க்கப்பட்டபோதுதான் அது மிரட்டல் அல்ல முன்னெச்சரிக்கை என்பது உறுதியாகியது.

மாவீரர் தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு நாடெங்கும் இராணுவ முகாம்கள் உஷார் நிலையில் இருந்தன.

கிழக்கில் தாக்குதல் நடத்தப்படும் என்பதை எதிர்பார்த்து அங்குள்ள முகாம்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

கிட்டத்தட்ட ஒரு மாத காலமாக உஷார் நிலையில் இருக்க வேண்டிய கட்டாயத்தை மாவீரர் தினம் ஏற்படுத்தி இருந்தது.

முகாம்களை நோக்கிப் புலிகள் அணிகள் திரண்டு வருவதற்கு இடமளிக்காமல் புலிகளை தேடிச் சென்று தாக்கும் தந்திரோபாய நகர்வுகளையும் படையினர் வடக்கு-கிழக்கில் மேற்கொண்டிருந்தனர்.

புலிகளின் தாக்குதலுக்கு உரிய தினங்களை அறிந்துவைத்து, அத்தகைய நாட்களில் புலிகளை தற்காப்பு நிலைக்கு தள்ளிவிடுவதே படையினரின் புதிய தந்திரோபாயம்.

படையினர் தமது தந்திரோபாயத்தை மாற்றிக்கொண்ட அதே நேரத்தில் புலிகளும் தமது தந்திரோபாயத்தை மாற்றிக் கொண்டனர்.

மாவீரர் தினத் தாக்குதலுக்கு தயாராவது போன்ற ஒரு தோற்றத்தை தமது நடவடிக்கைகள் மூலமாக புலிகள் காண்பித்துக் கொண்டிருந்தனர்.

புலிகள் பெரியளவில் ஒன்றுதிரண்டு கொண்டிருக்கின்றனர் என்ற தகவல்கள் கிழக்கில் படையினருக்கும் எட்டிக் கொண்டிருந்தன. எட்ட வேண்டும் என்பதுதான் புலிகளின் நோக்கம்.

புலிகள் ஒன்றுதிரள்வதைத்தடுக்க விமானப்படையின் உதவியோடு கிழக்கில் உள்ள காடுகளிலும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

மாவீரர் தினத்தை முன்னிட்டு திருமலையில் நடத்தப்பட்ட கரும்புலித் தாக்குதலும் தோல்வியில் முடிந்தது. வேறெங்கும் பாரிய தாக்குதல் எதுவும் நடைபெறவில்லை.

புலிகளின் தாக்குதலைத் தடுக்க தாம் மேற்கொண்ட தந்திரோபாயத் தாக்குதல்கள் வெற்றியளித்துவிட்டன என்ற நிம்மதியோடு படையினர் இருந்தனர்.

தொடர்ந்து ஒரு மாத காலமாக விழிப்பாக இருந்தும் எதுவும் நடக்கவில்லை என்பதால் படைமுகாம்களில் இருந்தவர்களின் விழிப்பு நிலையில் ஒரு மாதகால களைப்பின் தாக்கமும் ஒரு விதமான அலட்சியம் ஏற்படுவது இயல்புதான்.

'எதிரி விழிப்பாக இருக்கும்போது தாக்காதே' என்பது கெரில்லா யுத்தத்தில் கண்டிப்பான ஒரு விதி.

அந்த விதியோடு மேலும் ஒரு தந்திரத்தையும் சேர்த்துக் கொண்டுள்ளார்கள் புலிகள்.

எதிரியை களைப்பூட்டுவதற்கு தொடர்ச்சியாக விழிப்பாக இருக்கவைத்து ஏமாற்றுவது என்பதுதான் அந்தத் தந்திரம்.

எதிர்பார்த்தது நடக்கவில்லை என்னும் போது களைப்பும் வரும். எதிர்பார்த்து ஏமாந்த படையினர் தமது எதிரிகளின் பலம் தொடர்பாக 'ப்பூ இவ்வளவுதானா' என்று குறைத்து மதிப்பிட்டுவிட்டு அலட்சியமாக இருக்கும் நிலையும் ஏற்படும்.

அதனை எதிர்பார்த்துத்தான் புலிகள் தமது தாக்குதலை மிகக் கச்சிதமாக திட்டமிட்டிருந்தனர்.

புலுக்குணாவை விசேட அதிரடிப்படை முகாம் தொடர்பான உளவறியும் நடவடிக்கைகள் மாவீரர் தினத்துக்கு முன்னரே மேற்கொள்ளப்பட்டுவிட்டன. மிக இரகசியமாக உளவு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

கிழக்கில் பொலிஸ் நிலையங்கள், மற்றும் இராணுவ முகாம்கள் மீதுதான்புலிகள் தாக்குதல்களை நடத்தியிருந்தனர். விசேட அதிரடிப்படை முகாம்கள் மீது பாரிய தாக்குதல் நடத்தியதில்லை.

மட்டக்களப்பு-புதுக்குடியிருப்பு அதிரடிப் படை முகாம் மீதான தாக்குதல் முன்னர் தோல்வியில் முடிந்திருந்தது.

## தந்திரோபாயம் வேறு தாக்குதல் முறை ஒன்று

***1995***

**கட்டுமுறிவுக்குள முகாம் தாக்குதல்**
**இருந்தவர்கள் *150* இராணுவத்தினர்.**
**கடும் மழையோடு தாக்குதல்.**
**மோதல் நான்கு மணிநேரம்.**
**புலிகளின் மகளிர் அணியும் தாக்குதலில் ஈடுபட்டது.**
**முதலடி ட்ரான்ஸ்போமருக்கு.**

***1996***

**புலுக்குணாவை முகாம் தாக்குதல்**
***150* விசேட அதிரடிப்படையினர் இருந்தனர்.**
**கடும் மழையில் தாக்குதல்.**
**மோதல் அதிகாலை *1.15* முதல் காலை *5* மணிவரை.**
**புலிகளின் மகளிர் படையணியும் தாக்குதலில் ஈடுபட்டது.**
**முதலடி ட்ரான்ஸ்போமருக்கு.**

அதனாலும் விசேட அதிரடிப்படையினர் மத்தியில் தமது பலம், எதிரியின் பலம் என்பவற்றை மீறிய கணிப்பு நிலவியிருக்கும் என்று நம்பலாம்.

இவை எல்லாவற்றையும் கணிப்பிட்டு திட்டமிட்டு தயார் நிலையில் இருந்த புலிகள் நல்லதொரு காலநிலையை எதிர்பார்த்திருந்தனர்.

திங்கள் செவ்வாய் கிழமைகளில் மழை பெய்யத் தொடங்கியது. மழைக் குளிர் தூக்கத்துக்கு சுகமானது.

மழைக்காலத்தில் தேடிச் சென்று தாக்குபவர்கள் விழிப்பாகச் செல்லலாம். காத்திருப்பவர்கள் குளிரின் இதம் காரணமாக தூக்கத்தை நாடவே செய்வர்.

காலநிலை வாய்ப்பாக அமைந்தவுடன் தாக்குதலுக்கான நாளாக புதன்கிழமையைத் தெரிவு செய்துவிட்டனர் புலிகள்.

**புலிகள் இயக்கத் தளபதிகளில் ஒருவரான ராமின் தலைமையில்தான் தாக்குதல் அணி புறப்பட்டது.**

**புலிகள் இயக்க அம்பாறை மாவட்டத் தளபதியாக பிரபாகரனால் நியமிக்கப்பட்டவர் ராம். வன்னியில் இருந்து சில மாதங்களுக்கு முன்னர்தான் பயிற்சிபெற்ற புதிய அணிகளோடு ராம் அம்பாறைக்கு திரும்பியிருந்தார்.**

1995ல் திருமலையில் கட்டுமுறிவுக் குளத்தில் இருந்த இராணுவமுகாம் புலிகளால் தாக்கப்பட்டது. அத் தாக்குதலிலும் ராம் பங்கு கொண்டதாகத் தெரிகிறது.

கட்டுமுறிவுக் குள முகாம் தாக்குதலுக்கு ஒத்ததாகவே புலுக்குணாவை முகாம் தாக்குதலும் அமைந்திருக்கிறது.

கட்டுமுறிவுக்குள முகாமிலும் 150 இராணுவத்தினர் இருந்தனர். நாலு மணிநேர மோதலின் பின்னர் முகாம் புலிகளிடம் வீழ்ந்தது.

கடும்மழை கொட்டிக் கொண்டிருக்க, எங்கும் இருள் சூழ்ந்திருந்த நேரத்தில் இரவு 10.50மணிக்கு கட்டுமுறிவுக்குள முகாம்மீது தாக்குதலை ஆரம்பித்தனர் புலிகள்.

அதேபாணியில்தான் இம்முறை புலுக்குணாவை விசேட அதிரடிப்படை முகாம்மீது தாக்குதலை ஆரம்பித்தனர்.

கிட்டத்தட்ட முன்னூறு புலிகள்வரை தாக்குதலில் பங்கெடுத்திருக்கலாம் என்று கணிப்பிடப்படுகிறது.

ஆண்கள் அணிக்கு ஈடாக பெண்கள் அணியினரும் சண்டையில் இறக்கப்பட்டனர்.

ஆர்.பி.ஜி.ரொக்கட் லோஞ்சரால் முகாமின் மின்சார ட்ரான்ஸ்போமர் தகர்க்கப்பட்டது. முகாமை இருள் கவ்விக் கொண்டது. அதனைத் தொடர்ந்தே புலிகளின் அணிகள் முகாமை சுற்றிவளைத்து தாக்குதலைத் தொடுத்தன.

எங்கும் இருள். எங்கு புலிகள் நிலையெடுத்திருக்கிறார்கள் என்பதை துல்லியமாக கண்டறிய அதிரடிப் படையினரால் முடியவில்லை.

முற்றுகையை உடைத்துக் கொண்டு வெளியேறாவிட்டால் முல்லைத்தீவு முகாமில் ஏற்பட்டது போல பாரிய உயிரிழப்புக்கள் ஏற்படும் என்று அதிரடிப்படையினர் நினைத்திருக்கலாம்.

சரமாரியாக சுட்டுக் கொண்டு முகாமின் ஒரு பகுதி வழியாக முற்றுகையை உடைத்துக் கொண்டு வெளியேறினர்.

இருதரப்பினருக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது.

முகாமில் பலியானவர்கள் தவிர ஏனையோர் முற்றுகையில் இருந்து தப்பிச் சென்றனர். முகாம் புலிகளின் கையில் வீழ்ந்தது.

85 மில்லி மீட்டர் ஆட்டிலறிகளும் முகாமில் இருந்தன. தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதும் அந்த ஆட்டிலறிகள் வைக்கப்பட்டிருந்த பகுதியை நோக்கி புலிகளின் அணியொன்று விரைந்து கைப்பற்றிக் கொண்டது. அதனால் அந்த ஆட்டிலறிகளைப் பயன்படுத்தி அதிரடிப்படையினர் தாக்குதல் நடத்தவும் முடியாமல் போனது.

முகாம் உள் நிலவரங்கள் மிகத் துல்லியமாக புலிகளால் அறியப்பட்டுள்ளன என்பதுதான் மற்றொரு ஆச்சரியம்.

ஒரு கெரில்லாத் தாக்குதலின் வெற்றிக்கு மூன்று காரணங்கள் மிகப் பிரதானமானவை.

**1. தாக்குதல் அணிகளின் வேகம். 2.காலநிலை. 3. துல்லியமான தகவல்கள்.**

புலுக்குணாவை முகாம் தாக்குதலில் மேற்கண்ட மூன்று காரணங்களும் புலிகளால் மிக நுட்பமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

முகாம் பகுதி தமது கட்டுப்பாட்டில் வந்ததும் தமது வாகனங்களில் அங்கிருந்த ஆயுதங்களை புலிகள் ஏற்றி முடித்தனர். இராணுவக் கவச வாகனங்கள் கைப்பற்றப்பட்டதாக செய்திகள் முன்னர் வெளியாகி இருந்தன. எனினும் கவச வாகனங்கள் எதுவும் புலிகளால் எடுத்துச் செல்லப்படவில்லை. இராணுவத்தினரின் வாகனங்களான ட்ரக்டர் ஒன்றும், டிரக் ஒன்றும் புலிகளால் கொண்டு செல்லப்பட்டது.

முகாமில் இருந்த பாரிய ஜெனரேட்டரையும் கொண்டு செல்ல புலிகள் முற்பட்டனர். ஜெனரேட்டர் வைக்கப்பட்டிருந்த வண்டியின் சக்கரங்களில் ஒன்று துப்பாக்கிப் பிரயோகத்தில் சூடுபட்டு காற்றுப் போயிருந்தது. அதனால் அதனை கட்டி இழுத்துச் செல்ல முடியாமல் கைவிட்டுச் சென்றுவிட்டனர்.

சண்டையொன்று தொடர்பாக ஆராயும் போது இரு தரப்பின் செயற்பாடுகளையும் நோக்க வேண்டும்.

புலுக்குணாவை முகாம் தாக்குதல் முற்று முழுதான ஒரு கெரில்லாத் தாக்குதலாகும். முகாமில் இருந்த படையினரைவிட புலிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது.

அவ்வாறு இருந்தும் முகாமில் இருந்த அதிரடிப்படையினரில் நூறு பேர் வரை முற்றுகையில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர். அதில் 45 பேர்வரை காயமடைந்தனர்.

தாக்குதல் ஆரம்பித்ததும் அதிரடிப்படையினர் உடனடியாக பின்வாங்கிவிடவில்லை. கடும் எதிர்ப்பொன்றை காட்டியிருக்கிறார்கள்.

புலிகளின் தரப்பில் 26 பேர் பலியாகி இருப்பதும், மோதல் இரண்டு மணிநேரம் நடைபெற்றதும் சண்டையின் தீவிரத்தை உணர்த்துகின்றன.

புலிகளின் அணிகளின் பலமும், வேகமும், துல்லியமான தகவல்களும் புலிகளின் வெற்றிக்கு சாதகமாக அமைந்துள்ளன. இதில் ஒன்று பிசகி இருந்தால் புலிகளின் தரப்பு இழப்புக்கள் அதிகமாக இருந்திருக்கலாம்.



பிரபாகரனுடன் அம்பாறை மாவட்டத் தளபதி ராம்

அதிரடிப்படையினர் தரப்பில் 50 பேர் வரை பலியாகி இருக்கின்றனர். புலிகளின் தரப்பில் 26 பேர் பலியாகி உள்ளனர். புலிகளின் இழப்பு ஒப்பீட்டளவில் குறைவாகத் தெரிந்தாலும், குறிப்பிட்ட சண்டையின் இருதரப்பு ஆட்பல எண்ணிக்கையோடு ஒப்பிடும்போது சற்று அதிகமான இழப்பாகவே இருக்கிறது.

மரபுப் போரில் தமது ஆட்பலத்தால் படையினர் வெற்றி பெறுகின்றனர். புலிகளின் அணிகளைவிட பல மடங்கு அதிகமான ஆட்பல, படைக்கலப் பலத்தோடு படையினர் தமது பலத்தை நிலை நிறுத்தி வருகின்றனர்.

கெரில்லாப் போரில் புலிகள் தமது ஆட்பலத்தை ஒன்றுதிரட்டி தாக்கி வெற்றி பெறுகின்றனர்.

மரபுப் போரில் படையினர் வியூகம் வகுக்கும்போது அதில் சிக்காமல் தவிர்த்துக் கொள்வதன் மூலம் புலிகள் தமது ஆட்பலத்தைத் தக்க வைத்துக்கொள்கின்றனர்.

மரபுரீதியான படை நகர்வுகளில் இருந்து கெரில்லா அணிகள் தப்பிக்கொள்ள முடியும்.

ஆனால் கெரில்லாக்களின் திடீர் தாக்குதல் எப்போது, எங்கே நடக்கும் என்பது தெரியாமையால் மரபுப் படையணிகள் கெரில்லாத் தாக்குதல்களில் சிக்கிக் கொள்வது தவிர்க்க முடியாமல் இருக்கும்.

மரபுப் போர் முறையில் புலிகளுக்குள்ள பலவீனங்களை பயன்படுத்தி வடபகுதியில் இராணுவபலத்தை மேலோங்கச் செய்வது என்பதுதான் பிரதிபாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் தந்திரம்.

புலிகளது அணிகளை சண்டைக்கு இழுத்து வியூகத்திற்குள் சிக்கவைப்பதுதான் நோக்கம். ஆனால் புலிகளோ அந்தச் சண்டைகளைத் தவிர்த்துவிட்டு தமது அணிகளை பாதுகாத்துக் கொள்கின்றனர்.

'எதிரிக்கு சாதகமற்ற சண்டைமுனைகளை திறப்பது' என்பது பிரதி பாதுகாப்பு அமைச்சரின் திட்டம்.

'எதிரிக்குச் சாதகமான முனைகளில் இருந்து பின்வாங்கு' என்பது பிரபாகரனின் தந்திரம்.

வடக்கில்தான் புலிகளின் முதுகெலும்பு இருக்கிறது. அதனால் கிழக்கை இழந்தாலும் வடக்கை கட்டுப்பாட்டில் கொண்டுவருவதுதான் முதல் வேலை என்பது அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் கணக்கு.

வடக்கை முழுதாக கைப்பற்றி விட்டால் கிழக்கை அதன் பின்னர் சுலபமாக கட்டுப்படுத்தலாம் என்று அவர் நினைக்கிறார்.

வடபகுதியில்தான் புலிகளின் பிரதான பலம் இருப்பதாகக் கருதப்படுவதால், அங்கு பெறும் வெற்றிகள் தெற்கில் பிரமாதமாகக் கருதப்படும். வெளியுலகிலும் வியந்து நோக்கப்படும் என்று அரசாங்கம் நினைக்கிறது.

ஆனால் கிழக்கிலும் தமது பிரதான பலம் இருக்கிறது என்பதை காண்பிக்கும் பாரிய தாக்குதல்களுக்கு ஏற்ப அங்குள்ள அணிகளை ஒழுங்குபடுத்தியிருக்கிறார் பிரபாகரன்.

புலுக்குணாவை முகாம் தாக்குதல் போன்ற பாரிய தாக்குதல்கள் கிழக்கில் இடம்பெறும்போது வடக்கில் பெறும் வெற்றிகள் மட்டுமே புலிகளின் மீதான வெற்றிகளாகக் கருதப்பட முடியாது என்ற அபிப்பிராயமும் ஏற்படத் தொடங்கியுள்ளது.

அதுதவிர கிழக்கில் இருந்து படையினரை வடபகுதித் தாக்குதலுக்கு கொண்டு செல்லும் நடவடிக்கைகளை ஒருவரையறைக்கு மேல் செய்ய முடியாது.

கிழக்கில் உள்ள முகாம்களை பாதுகாக்க வேண்டுமானால் ஒவ்வொரு முகாமிலும் கணிசமான அளவு படையினர் இருந்தாக வேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

**புலிகளின் 'மூன்றாம் கட்ட ஈழப் போரில்' கிழக்கு மாகாண அணிகள் யுத்தத்தின் அச்சாணிகளாக மாறியுள்ளன. வடக்கில் முழுப்பலத்தையும் ஒன்று குவித்து புலிகளின் தலைமைப்பீடத்தை கிடுக்கிப்பிடிக்குள் தள்ளிவிடும் தந்திரத்துக்கு போதுமான படை பலம் தேவை. அதனைத் தடுக்கும் பொறுப்பை கிழக்கில் உள்ள அணிகளிடம் விட்டிருக்கிறார் பிரபாகரன்.**

சாதகமற்ற சண்டைமுனைகளில் இருந்து புலிகள் பின்வாங்கிச் செல்வதால், அவர்களைத் துரத்திச் சென்று பின்வாங்க இடமில்லாமல் தொடர்ந்து தாக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் பிரதி பாதுகாப்பு அமைச்சரின் மரபுப் போர் பலத்தால் புலிகளை வடக்கில் பின்நோக்கித் தள்ளும் தந்திரம் முழு வெற்றியடையும்.

ஆனால் அவ்வாறு செய்வதற்கு வாய்ப்புக் கொடுக்காமல் கிழக்கில் தனது அணிகளை நகர்த்தியிருக்கிறார் பிரபாகரன்.

ஒரு கெரில்லா யுத்தத்தில் தொடர்ந்து தாக்குப்பிடிக்கத்தக்க போதிய படைக்கல, ஆட்பல நிலை புலிகளிடம் இருக்கிறது.

அதனால் அரசாங்கம் நினைக்கும் விதமாக மட்டும் யுத்தத்தை நடத்திச் செல்ல முடியாது. இரு தரப்பின் இழப்புக்கு ஏற்ப யுத்தம் வளைந்தும், நெளிந்தும் சென்று கொண்டிருக்கிறது.

## அதிரடி அய்யாத்துரை



**தும்**பி தரையிறங்கிய பின்னர் வழிகாட்டி வந்தவர் வவுனியாவில்தான் தங்கியிருக்கிறார். விதிமுறைப்படி அவருக்கும் ஒரு வாரகால பாஸ்தான் கொடுக்கப்பட்டதாம். ஊருக்குப் போய் மனைவியைப் பார்க்க வேண்டும் என்று புலம்பிக்கொண்டிருக்கிறாராம். ரெண்டு எழுத்தாரின் வரவேற்பு அங்கு எப்படியிருக்குமோ தெரியேல்லை.

**கி**ழக்கின் தனித்துவக் கட்சியின் இளம் பிரதிநிதி ரெண்டு எழுத்தாரின் சம்மதத்துடன் செய்துவரும் அபிவிருத்தி வேலைகள் கூட்டான கட்சியினருக்கு வயிற்றில் புளியைக் கரைச்சிருக்குது. ரெண்டு எழுத்தாரிடமும் சனத்திடமும் நல்ல பெயர் எடுத்துத் தொலைக்கப்போறார் எண்டு பொருமிக் கொண்டிருக்கினமாம்.

**கூ**ட்டான கட்சியின் இரண்டு பிரதிநிதிகள் மங்களமான அமைச்சரிடம் சென்று கிழக்கின் தனித்துவக் கட்சித் தலைவரைப் பற்றி புகார் செய்தவையாம். அந்த விஷயம் தனித்துவத் தலைவருக்கு தெரிஞ்சு போச்சுதாம். இரண்டு பிரதிநிதிகளையும் நேரில் கண்டபோது, "என்ன புகார் சொன்னியளாமே" எண்டு கேட்டாராம். "சேச்சே நாங்கள் அப்படிச் சொல்லுவமோ?" எண்டு அசடு வழிந்தனராம் இரண்டு பேரும். தலைவரையும் நேரடியாகப் பகைக்க முடியாதல்லோ, சலுகைகள் 'கட்'டாகிவிடும். கெட்டிக்காரர்கள்தான்.

'பட்ஜெட்' விவாதங்கள் முடிந்ததையிட்டு ஆளும் தரப்பாரும், பச்சை எதிர்த்தரப்பாரும் விருந்து கொடுத்தவையாம். தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் பாடுதான் ஒரே கொண்டாட்டம். இரு தரப்பாரின் விருந்திலும் அவர்கள் அனைவரும் அழைக்கப்பட்டனராம். தவறாமல் கலந்தும் கொண்டனராம். மீனுக்கு வால், பாம்புக்குத் தலை எண்டமாதிரி இரு தரப்பையும் அனுசரித்துப் போவதால், இப்படியான விருந்து பலாபலன்களும் போனஸ் மாதிரிக் கிடைக்குதாக்கும். மலையகத் தனித்துவ தலைவருக்குத்தான் கொடுப்பினை இல்லை. அவர் ஆளும் தரப்பு விருந்தில் மட்டும்தான் கலந்து கொள்ளலாம். அவரது கட்சிப் பிரதிநிதிகள் பாடு ஜாலி. இருதரப்பு விருந்திலும் ஆஜரானவையாம்.

**யா**ழுக்குப் பொறுப்பான அதிகார ஏஜண்ட் சொந்த வருமானத்திலும் குறியாக இருப்பதாகத் தகவல். பெரும்பான்மை இன அதிகாரி ஒருவருடன் இணைந்து யாழில் ஒரு மதுபானக் கடைக்கும் பினாமியாக இருக்கிறாராம். யாழ் ஸ்டான்லி றோட்டில் அந்த மதுபானக் கடை இருக்கிறதாம். நாதா நாதா... என்ன இது அநியாயமப்பா. துஷ்பிரயோகம் கூடாதப்பா.

**கு**டாநாட்டுக்கு உணவுப் பொருட்களுடன் கப்பல் சென்றதும், முதலில் இறக்கப்படுவது என்ன தெரியுமோ? அடித்தளத்தில் உள்ள உற்சாகபானப் புட்டிகள்தானாம். அதையெல்லாம் பத்திரமாக இறக்கியபின்னர்தான் உணவுப் பொருட்களும், மருந்துப் பொருட்களும் ஏனோ தானோவென்று இறக்கப்படுகிறதாம். சும்மா சொல்லக்கூடாது 'குடிமக்களுக்கான' விநியோகத்தில் யாழ் நிர்வாகம் படு படு சுறுசுறுப்புத்தான்.

**வெ**ளிநாட்டு மாப்பிள்ளைகள் என்றால் இனிக் கொஞ்சம் கவனமாக இருப்பது நல்லது. மாப்பிள்ளையின் சாதகத்தைவிட அவரது இரத்த பரிசோதனை ரிப்போட்டை வாங்கிப்பார்ப்பது உபயோகம். ஏன் இந்தப் போடு போடுகிறேன் என்று தெரியுமோ? பாரிஸ் மாப்பிள்ளைக்கு யாழில் இருந்து பெண்ணை அனுப்பி வைச்சினம் பெற்றோர். சாதகப் பொருத்தம் கச்சிதம். தம்பதிகளுக்கு பிள்ளையும் பிறந்தது. பிள்ளையைப் பரிசோதித்தபோது பேரதிர்ச்சி. பிள்ளைக்கு எயிட்ஸ்! பெற்றோரைப் பரிசோதிக்க இரண்டு பேருக்கும் எயிட்ஸ்! மாப்பிள்ளைதான் பாரிஸ் விடுதிகளில் வாங்கி வந்து மனைவிக்கு தானம் செய்திருக்கிறார். அது பிள்ளையின் இரத்தத்திலும் கலந்திருக்கு. பார்த்தியளோ தற்காலத்தில் சாதகம் பார்க்கிறதைவிட இரத்தப் பரிசோதனை ரிப்போட்டைத்தான் பார்க்கவேணும். காலம் மாறிப் போச்சு!

**ஈ**.ரி.வி.யில் ஒரே நாளில் மூன்று தமிழ் படங்கள் போட்டு கலக்கிப் போட்டினம். தமிழ் நிகழ்ச்சிகள் போதாது எண்டு முணுமுணுத்தது போய், பிள்ளைகளின் படிப்புக் கெடுகுது எண்டு தாய்க்குலம் முணுமுணுக்காமல் இருந்தால் சரிதான். எம்.ரி.வியும் தனித் தமிழ் சேவை துவங்கப்போகுதாம். வானொலி அறிவிப்பாளர் எழில் வேந்தனை உள்வாங்கியிருக்கினமாம். தொலைக்காட்சி சனல்கள் எங்கும் தமிழ் முழக்கம் கேட்கப் போகுதாக்கும். திகட்டாமல் இருந்தால் சரிதான்.

**மா**வீரன் நெப்போலியன் விட்டுச் சென்ற ஒரு அனுபவ மொழி. எல்லோருக்கும் உபயோகமானது.

***"வாய்ப்பை***
***சரியாகப் பயன்படுத்தினால்***
***எல்லோரும்***
***சூரியனைப் போல***
***பிரகாசிக்க முடியும்!***
***இல்லையேல்***
***மெழுகுவர்த்திகள்தான்!"***

# மாத்தையா கொடுத்த சயனைட் வில்லைகள்!

# விரிசலை வளர்த்த ஜே.ஆரின். தந்திரம்

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

**கடல்புறா**

'கடல்புறா' என்னும் பெயருடைய படகில்தான் குமரப்பா, புலேந்திரன் உட்பட 17 புலிகள் இயக்க உறுப்பினர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

'கடல் புறாவை' டோராப் படகில் வந்த கடற்படையினரே வழிமறித்தனர். லெப்ரினன்ட் ஆரியதாசா டோராப் படகில் வந்த கடற்படையினருக்கு பொறுப்பாக இருந்தார்.

அக்டோபர் மூன்றாம் திகதி அதிகாலை 2 மணியளவில்தான் கடற்புறா வழிமறிக்கப்பட்டது.

கடல்புறாவில் இருந்த புலிகள் இயக்க தளபதிகளிடமும், உறுப்பினர்களிடமும் ஆயுதங்கள் இருந்தபோதும், கடற்படையினரைத் தாக்குவதற்கு அவர்கள் முயற்சிக்கவில்லை.

போர் நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டதால் தமது தளபதிகள் தாக்குதல் நடத்தவில்லை என்று பின்னர் புலிகள் அமைப்பினர் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட புலிகள் இயக்கத்தினர் 17 பேரும் கடற்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

17 பேரையும் கைதுசெய்த விடயத்தை கடற்படையினர் உடனடியாக ஜனாதிபதி ஜே.ஆருக்கும், தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலிக்கும் அறிவித்தனர்.

லலித் அத்துலத் முதலியின் மூளை பயங்கரமாக வேலை செய்யத் தொடங்கியது.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் புலேந்திரன். அநுராதபுரத்தில் சிங்கள மக்கள்மீதான தாக்குதலுக்கு காரணமானவர்.

அந்த குற்றச்சாட்டை வைத்து அவரை கொழும்புக்கு கொண்டுவந்து விசாரித்தால் சிங்கள மக்களிடம் அரசுக்கு சாதகமான அபிப்பிராயம் ஏற்படும்.

இலங்கை, இந்திய ஒப்பந்தம் தொடர்பாகவும், இந்திய படைக்கு அனுமதியளித்தது தொடர்பாகவும் எதிர்கட்சிகள் கடும் எதிர்ப் பிரசாரம் நடத்திக் கொண்டிருந்தனர்.

ஐ.தே.கட்சி அரசாங்கம் இந்தியாவிடம் பணிந்து, புலிகளுக்கு விட்டுக் கொடுத்துவிட்டது என்ற பிரசாரத்தை முறியடிக்க இதுதான் தகுந்த தருணம் என்று கணக்குப் போட்டார் லலித் அத்துலத் முதலி.

ஜே.ஆருக்கு அந்த யோசனையுடன் உடன்பாடு இருந்தது.

கைதுசெய்யப்பட்டவர்களைக் கொழும்புக்கு கொண்டுவருமாறு கடற்படையினருக்கு உத்தரவு பறந்தது.

தமது தளபதிகள் உட்பட 17 பேரும் கைதுசெய்யப்பட்ட செய்தி அறிந்ததும் புலிகள் அமைப்பினர் இந்தியப் படையின் தொடர்பாளரான பிரிகேடியர் பெர்னாண்டசுடன் தொடர்பு கொண்டனர்.

"ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். உங்கள் தளபதிகளும், உறுப்பினர்களும் பத்திரமாக உங்களிடம் ஒப்படைக்கப் படுவார்கள்" என்று உறுதியளித்தார் பெர்னாண்டஸ்.

இந்தியப் படைத் தளபதி ஹரிகிரத்சிங்குடனும் புலிகள் அமைப்பினர் தொடர்பு கொண்டனர். அவரும் பெர்னாண்டஸ் கூறிய பதிலையே மீண்டும் கூறினார்.

இந்தியப்படை தளபதி திபீந்தர்சிங் கொழும்புக்கு விரைந்து சென்று ஜே.ஆரைச் சந்தித்தார்.

திபீந்தர் சிங்கிடம் பிடி கொடாமல் நழுவிக் கொண்டேயிருந்தார் ஜே.ஆர்.

ஜே.ஆரின் மனதில் வேறு ஒரு திட்டமும் இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

கைதுசெய்யப்பட்டவர்களை மீட்டெடுத்து புலிகளிடம் ஒப்படைக்க இந்தியப் படையால் முடியாது போனால், புலிகளுக்கும், இந்தியப் படைகளுக்கும் இடையே விரிசல் தோன்றும் என்று ஜே.ஆர் ஊகித்திருக்கக் கூடும்.

தான் எடுத்த முடிவில் உறுதியாக இருந்துகொண்டு திபீந்தர்சிங்கை குழப்பத் தொடங்கிவிட்டார் ஜே.ஆர்.

"தேவைக்கதிகமான படைகளும், படைக்கலங்களும் உங்களிடம் இருந்தும், புலிகளை ஏன் கட்டுப்படுத்த முடியவில்லை?" என்று கேள்வி எழுப்பினார் ஜே.ஆர்.

"தேவையற்ற மோதலுக்கு இடமளிக்க விரும்பவில்லை. படிப்படியாக அவர்களை வழிக்குக் கொண்டுவரவே விரும்புகிறோம்" என்று திபீந்தர்சிங் எடுத்துக் கூறினார்.

தன்னால் இனிமேலும் பொறுத்துக் கொண்டு இருக்கமுடியாது என்றும், தனது கட்சிக்குள் கூட எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது என்றும் ஜே.ஆர் கூறினார்.

ஜே.ஆரின் முடிவை மாற்றமுடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பினார் திபீந்தர்சிங்.

**ஜே. ஆர் பிடிவாதம்**

இக்காலகட்டத்தில் இந்தியத்தூதர் திக்ஷித் விடுப்பில் இருந்தார். நிலமையின் விபரீதத்தை அவருக்குத் தெரியப்படுத்தினார்கள்.

அக்டோபர் 4ம் திகதியன்று கொழும்பு திரும்பினார் திக்ஷித். உடனடியாக ஜே.ஆருடன் தொடர்பு கொண்டார்.

ஜே.ஆர். விட்டுக்கொடுக்கவில்லை. ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் அவர்கள் கடத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களை விடுதலை செய்தால் தனக்குள்ள எதிர்ப்பு அதிகமாகிவிடும் என்பது ஜே.ஆரின் வாதம்.

அத்தோடு நிற்கவில்லை, தொலைக்காட்சி மூலமாக ஒரு அறிக்கையையும் ஜே.ஆர் வெளியிட்டார்.

கைதுசெய்யப்பட்டவர்கள் கடத்தல்காரர்கள் என்பதால், இந்திய-இலங்கை ஒப்பந்தத்துடன் அவர்கள் விடயத்தை இணைத்துப் பார்க்க முடியாது. அவர்கள் ஆயுதங்களை இந்தியாவிலிருந்து கடத்தி வந்தார்கள் என்று குறிப்பிட்டார் ஜே.ஆர்.

**புலிகள் மறுப்பு**

புலிகள் அதனை மறுத்தனர். இந்தியாவில் இருந்த தமது அலுவலகத்தை மூடிவிட்டு அங்கிருந்து ஆவணங்களை எடுத்து வரும் போதே தமது உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டதாக புலிகள் கூறினர்.

ஆனால், அவ்வாறு எந்த அலுவலகமும் இந்தியாவில் மூடப்படவில்லை. சென்னையில் புலிகளின் அலுவலகம் இயங்கிக் கொண்டிருந்தது. கிட்டுவும் அங்குதான் இருந்தார்.

புலிகள் சொன்ன காரணத்தை இந்தியப் படையினர் நம்பவில்லை. ஆயினும், கைதுசெய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்படாவிட்டால் அதனை வைத்தே புலிகள் ஒரு பெரும் பிரச்சனையைக் கிளப்புவார்கள். ஆயுதங்களை ஒப்படைக்க மறுப்பார்கள். இடைக்கால நிர்வாகத்தில் பங்கெடுக்கவும் முன்வரமாட்டார்கள். அதனால் நிலமை மோசமாகும் என்று இந்தியப்படை தளபதிகள் புரிந்து கொண்டனர்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அடுத்து இலங்கை அரசு பொதுமன்னிப்பு வழங்கி யிருந்தது. அப்படியிருக்கும்போது முன்னர் நடைபெற்ற ஒரு சம்பவத்துக்காக புலேந்திரனை எப்படி விசாரிக்க முடியும்?

அந்தக் கேள்விக்கும் அரசாங்கம் ஒரு பதில் தயாராக வைத்திருந்தது.

பொது மன்னிப்பு 1987 ஆகஸ்ட் 30ம் திகதிக்கு முன்னர் கைதுசெய்யப்பட்டவர்கள், மற்றும் வன்முறைகளில் ஈடுபட்டவர்களுக்கே பொருந்தும். அக்டோபர் 3ம் திகதி கைது செய்யப்பட்டவர்களுக்குப் பொருந்தாது என்று அறிவித்தது அரசாங்கம்.

அது மட்டுமல்லாமல் புலேந்திரன் பொது மன்னிப்புக்குரிய வடக்கு-கிழக்கு பிராந்தியத்துக்கு வெளியே இடம் பெற்ற ஒரு சம்பவத்துக்காக தேடப்பட்டவர். எனவே அவருக்கு பொது மன்னிப்பு வழங்கப்படவில்லை என்றும் அரசாங்கம் சொல்லிவிட்டது.

17 பேரும் கைதுசெய்யப்பட்ட விடயத்தை இரகசியமாக வைத்திருந்தால், இந்தியாவின் நிர்ப்பந்தம் காரணமாக விடுதலை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். அதனால் கைது செய்யப்பட்ட செய்தியை பகிரங்கமாக்கிவிட்டார் ஜே.ஆர்.

அவ்வாறு பகிரங்கமாக்கிவிட்டு, அவர்களை விடுதலை செய்தால் நாட்டில் கடும் எதிர்ப்புக் கிளம்பும் என்றும் நியாயம் சொல்லிக் கொண்டிருந்தார்.

ஜே.ஆரின் அரசியல் சாணக்கியத்துக்கு உதாரணமான சம்பவங்களில் இதுவும் ஒன்று.

ஜே.ஆருடன் ஒருவிதமாகப் பேசி கைது செய்யப்பட்ட உறுப்பினர்களை மாத்தையாவும், அன்ரன் பாலசிங்கமும் சென்று பார்வையிட அனுமதி பெற்றுக் கொடுத்தார் திக்ஷித்.

பலாலி விமானத் தளத்திற்கு அக்டோபர் நாலாம் திகதி 17 புலிகள் இயக்க உறுப்பினர்களும் கொண்டுவரப்பட்டனர்.

விமானத் தளத்திற்கு இந்திய படையினர்தான் பாதுகாப்பாக இருந்தனர். ஆனால் கைதுசெய்யப்பட்ட புலிகள் இயக்க உறுப்பினர்கள் இலங்கை இராணுவத்தினரின் பாதுகாப்பில் இருந்தனர்.

**மாத்தையா சந்திப்பு**

நாலாம் திகதி மாலையில் கைதுசெய்யப்பட்ட உறுப்பினர்களைச் சந்தித்து மாத்தையாவும், அன்ரன் பாலசிங்கமும் உரையாடினர். கொண்டு சென்ற சாப்பாட்டை 17 பேருடனும் அமர்ந்து சாப்பிட்டார்கள் மாத்தையாவும், அன்ரன் பாலசிங்கமும்.

கொழும்புக்கு விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்டால் சயனைட் விழுங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்று மாத்தையா கூறிவிட்டார்.

சாப்பிட்டுக் கொண்டிருந்தபோதே மிகத் தந்திரமாக சயனைட் வில்லைகளும் மாத்தையாவால் வழங்கப்பட்டுவிட்டன.

கைதான 17 பேருக்கும் எப்போது சயனைட் வில்லைகள் வழங்கப்பட்டதோ அப்போதே இந்தியப் படையுடன் ஒரு மோதலுக்கு புலிகளின் தலைமைப்பீடம் முடிவு செய்துவிட்டது.

மறுநாள் ஐந்தாம் திகதியும் புலிகள் இயக்க உறுப்பினர்கள் பலாலி விமானத் தளத்துக்குச் சென்றனர். கைதானவர்களைப் பார்வையிட அனுமதி மறுக்கப்பட்டது.

அன்றுதான் 17 பேரையும் கொழும்புக்குக் கொண்டு செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுக் கொண்டிருந்தன.

இந்தியப் படை அதிகாரிகள் சிலர் அவர்களைக் கொழும்புக்குக் கொண்டு செல்ல வேண்டாம் என்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டே இருந்தனர்.

இந்தியப்படையைச் சேர்ந்த ஜெனரல் ரொட்றிகஸ் என்பவர் விடாப்பிடியாக நின்று 17 பேரையும் விடுதலை செய்யுமாறு வற்புறுத்தினார்.


கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான யாழ் மாவட்டத் தளபதி குமரப்பாவுக்கு இந்திய படையினர் வந்த பின்னர்தான் திருமணம் நடந்திருந்தது.

இந்தியப்படை அதிகாரிகளும் அத் திருமணத்தில் கலந்துகொண்டு வாழ்த்தினார்கள். திருமணம் நடந்து ஒரு மாதத்துக்குள் குமரப்பா, கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்தியப் படை அதிகாரி ஒருவரை அழைத்த குமரப்பா தனது மனைவியைச் சென்று பார்த்து ஆறுதல் கூறுமாறு சொன்னார்.

அவர் ஏன் அப்படிக் கூறுகிறார் என்பதற்கான முழு அர்த்தத்தையும் அப்போது அந்த அதிகாரி புரிந்து கொண்டிருக்க முடியாது.

தனது மரணம் உறுதிசெய்யப்பட்ட நிலையில்தான் குமரப்பா அவ்வாறு கூறியிருக்கிறார்.



குமரப்பா (இரத்தினபாலன்)

**விபரீதம் ஆரம்பம்**

ஐந்தாம் திகதி மாலை ஐந்து மணி. நீண்ட விபரீதங்களுக்கு வித்திடப்போகும் அந்தக் காட்சி ஆரம்பமானது.

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

கொழும்பிலிருந்து அனுப்பப்பட்ட விசேட இராணுவ அணியொன்று விமானத்தில் இருந்து இறங்கி கைதுசெய்யப்பட்டவர்கள் வைக்கப்பட்டிருந்த அறையை நோக்கிச்சென்றது.

இந்தியப் படையினர் நினைத்திருந்தால் அந்த அணியைத் தடுத்து நிறுத்தியிருக்கலாம்.

ஐந்தாம் திகதி பிற்பகல் 4.30 மணியளவில் புதுடில்லியிலிருந்து இந்தியப் படைத் தளபதிக்கு ஒரு இரகசியத் தகவல் கிடைத்தது.

'17 பேரையும் கொழும்புக்கு கொண்டு செல்வதற்கான முயற்சியைத் தடுக்க வேண்டாம்' என்று அத் தகவல் தெரிவித்தது.

அத் தகவல் காரணமாகவே இந்தியப் படையினர் தடையெதுவும் செய்யவில்லை.

தமது அறையை நோக்கி இராணுவ அணி வருவதைக் கண்டதும் குமரப்பா, புலேந்திரன் ஆகியோர் சயனைட் வில்லைகளை கையிலெடுத்துக் கொண்டனர்.

"யாரும் நெருங்க வேண்டாம். உள்ளே வந்தால், நாம் சயனைட் விழுங்கிவிடுவோம்" என்று உரத்த சத்தமாகக் கூறினார்கள்.

இராணுவத்தினர் அவர்களை நெருங்கிச் செல்லத் தொடங்கினார்கள்.

குமரப்பாவும், புலேந்திரனும் ஏனைய 15 பேரையும் ஒரு தடவை பார்த்துக் கொண்டனர். அவர்களும் சயனைட் வில்லைகளுடன் தயாராக நின்றனர்.

இராணுவத்தினர் மிக அருகில் வந்துவிட்டனர்.

அதே நேரம் குமரப்பாவும், புலேந்திரனும் சயனைட் வில்லைகளை உட்கொண்டனர்.

அதனைக் கண்டதும் பாய்ந்து சென்ற இராணுவத்தினர் சயனைட்டைப் பறிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இராணுவத்தினரில் சிலர் கோபத்தில் தாக்குதலும் நடத்தினார்கள்.

கைதான பதினேழு பேரில் 12 பேர் சயனைட் வில்லைகளை துரிதமாக விழுங்கிவிட்டனர். ஏனைய 5 பேர் சயனைட் வில்லைகளை விழுங்கத் தாமதித்ததால் அவர்கள் காப்பாற்றப்பட்டனர்.

குமரப்பா, புலேந்திரன், உட்பட 12 பேரும் பலியாகியதும், எதிர்பாராத அதிர்ச்சியால் திகைத்துப் போய்விட்டனர் இந்தியப் படை அதிகாரிகள்.

பலியான 12 பேரின் உடல்களும் இந்தியப் படையினரின் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டன.

**புலிகளுக்கு தகவல்**

பலியானவர்களின் உடல்களை வந்து பொறுப்பெடுக்குமாறு புலிகள் அமைப்பினருக்கு தகவல் அனுப்பினார்கள் இந்தியப் படையினர்.

ஐந்தாம் திகதி 12 பேரும் மரணமாகினர். ஆறாம் தேதிதான் புலிகளுக்கு தகவல் அனுப்பப்பட்டது.

மதியம் 2 மணிக்கு உடல்களை ஒப்படைக்கலாம் என்று முதலில் தெரிவித்திருந்தனர்.

உடல்களைப் பெறுவதற்காக 1.30 மணியில் இருந்து பலாலி தளத்தில் காத்திருந்தனர் புலிகள் இயக்கத்தினர்.

மாலை ஐந்து மணிவரை உடல்கள் ஒப்படைக்கப்படவில்லை.

"உடல்களை தயார் செய்து கொண்டிருக்கிறோம் இன்னமும் பத்து நிமிடத்தில் தந்துவிடுகிறோம்" என்று இந்தியப் படையினர் தெரிவித்தனர்.

ஏழரை மணிக்குத்தான் உடல்கள் கொண்டுவரப்பட்டன. புலிகள் இயக்கத்தினரின் வாகனங்களில் ஏற்றப்பட்டன.

வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்த இடம் இருள் சூழ்ந்து காணப்பட்டதால் உடல்கள் தெளிவாகத் தெரியவில்லை.

டோர்ச் லைற் இருக்கிறதா என்று படையினரிடம் கேட்டனர் புலிகள் இயக்கத்தினர். அவர்கள் தம்மிடம் இல்லை என்று கூறிவிட்டனர்.

புலிகள் இயக்கத்தினருக்கு சந்தேகம் வந்துவிட்டது.

2 மணிக்கு உடல்களைத் தருவதாகச் சொன்னவர்கள் இருள் சூழ்ந்த பின்னர் ஒப்படைக்கிறார்கள். டோர்ச் லைற்கூட இல்லை என்கிறார்கள்.

வாகன வெளிச்சத்தில் உடல்களை பரிசோதித்துப் பார்த்தவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

**உடலில் காயங்கள்**

புலேந்திரனின் உடலில் கழுத்தின் முன்பக்கத்தில் ஒரு காயம். பின்பக்கத்திலும் காயம்.

குமரப்பாவின் உடலிலும் காயங்கள் காணப்பட்டன. துப்பாக்கி முனையில் பொருத்தப்பட்டிருக்கும் கத்தியால் (பயனெட்) ஏற்பட்ட காயங்களே அவை.

புலிகளிடம் உடல்களை ஒப்படைத்த இந்தியப் படை வைத்திய அதிகாரி மௌனமாக நின்று பார்த்துக் கொண்டிருந்தார்.

"சயனைட் உட்கொண்டவர்களின் உடலில் காயங்கள் எப்படி வந்தன?" என்று கேட்டார்கள் புலிகள். வைத்திய அதிகாரி மௌனமாக இருந்தார்.

"இவர்கள் சயனைட் உட்கொண்ட நேரத்தில் கத்தியால் குத்தப்பட்டு மரணமடைந்தார்கள் என்று உங்களால் அத்தாட்சிப்படுத்த முடியுமா?" என்று கேட்டார்கள்.

"என்னால் முடியாது" என்று மறுத்துவிட்டார் வைத்திய அதிகாரி.

12 பேரின் உடல்களுடன் சென்றனர் புலிகள் இயக்கத்தினர்.

இதற்கிடையே குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 பேர் மரணமான செய்தி யாழ் குடாநாடெங்கும். காட்டுத் தீயாகப் பரவிக்கொண்டிருந்தது.

குமரப்பாவும், புலேந்திரனும் புதிதாக திருமணமானவர்கள். இருவரும் திருமணக் கோலத்தில் இருந்த படங்களை யாழ் பத்திரிகைகளில் வெளியிட்டனர் புலிகள் இயக்கத்தினர்.


மணமாலை மாற்றிக்கொண்ட ஒரு மாதகாலத்திற்குள் இரு தளபதிகளும் மரணமாலையைச் சூடிக்கொண்டனர்.

புகைப்படங்களை பார்த்த மக்கள் கலங்கி நின்றனர். அனுதாப அலை எழுந்தது.

அதுதான் தருணம்.

போருக்குத் தயாராகினர் புலிகள்.

(தொடர்ந்து வரும்)



புலேந்திரன் (தருமராசா)

# அலசுவது- இராஜதந்திரி

# வெளிப்படையாகாத பாராளுமன்ற அமர்வுகள்!

# தமிழ் கட்சிகளின் பாராளுமன்ற வாய்வீச்சுக்கள்!

வரவு- செலவுத் திட்டம் மீதான விவாதங்கள் யாவும் முடிவடைந்துவிட்டன. கிட்டத்தட்ட ஒரு மாதகாலமாக பாராளுமன்ற விவாதங்கள் பத்திரிகைகளின் பக்கங்களை ஆக்கிரமித்திருந்தன.

பிரிட்டனின் பாராளுமன்ற சம்பிரதாயங்களை நமது நாட்டு பாராளுமன்றத்திலும் காணக்கூடியதாக இருந்தாலும், பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற அமர்வுகளில் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதை அவர்களைத் தெரிவு செய்த வாக்காளர்கள் நேரில் அவதானிக்க முடியாதவர்களாக இருக்கின்றனர்.

பிரிட்டன் பாராளுமன்ற அமர்வுகள் தொலைக்காட்சிகளில் அங்கு காண்பிக்கப்படுகின்றன. ஈ.ரி.வி. தொலைக் காட்சி மூலமாக நம்நாட்டவரும் பிரிட்டன் பாராளுமன்ற அமர்வுகளை இங்கிருந்தே காணக்கூடியதாகவுள்ளது.

ஆயினும், நம் நாட்டின் பாராளுமன்ற அமர்வுகள் தொலைக் காட்சியில் காண்பிக்கப்படுவதில்லை. குறிப்பிட்ட சில முக்கிய நிகழ்ச்சிகளின்போது மாத்திரமே நம்நாட்டு பாராளுமன்ற அமர்வுகள் காண்பிக்கப்பட்டு வருகின்றன.

பாராளுமன்ற கூட்டத் தொடரை வருடா வருடம் ஜனாதிபதி ஆரம்பித்து வைக்கும்போதும், வரவு- செலவு திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போதும் பாராளுமன்ற அமர்வுகளை இங்கு தொலைக் காட்சியில் காண்பிக்கிறார்கள்.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் வாக்குரிமையோடு திருவாளர் பொதுஜனத்தின் கடமை முடிவடைந்துவிடக்கூடாது.

ஜனநாயகம் என்பது வெளிப்படைத் தன்மையோடு இணைந்ததாகவே இருந்து வரவேண்டும்.

அதன்மூலமாகவே ஜனநாயக நடைமுறைகளை அவதானிக்கவும், அவற்றிலே பங்கெடுக்கவும் பரந்துபட்ட மக்களால் இயலக்கூடியதாகவிருக்கும்.

தாம் தெரிவு செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்கள், தெரிவு செய்து அனுப்பப்பட்ட கடமையை எவ்வாறு செய்கிறார்கள் என்பதை, ஐந்தாண்டு காலத்தில் வாக்காளர்கள் கண்காணிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

அப்போதுதான் மறுமுறையும் வாக்களிக்கும் சந்தர்ப்பத்தில் தமது தெரிவை தெளிவான முறையில் அவர்களால் மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

பாராளுமன்ற அமர்வுகளை தொடர்ந்து தொலைக்காட்சிகளில் காண்பிப்பது மூலம் தமது பிரதிநிதிகள் தமது சார்பாக அங்கு எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதனை வாக்காளர்கள் நேரில் காணக்கூடியதாகவிருக்கும்.

பாராளுமன்றத்தில் குறட்டைவிட்டு உறங்கும் பிரதிநிதிகளையும் வாக்காளர்கள் கண்டுகொள்ளமுடியும்.

நமது பாராளுமன்ற அமர்வுகளை பார்வையிட பொதுமக்கள் முன்னர் அனுமதிக்கப்பட்டனர். பார்வையாளர் பகுதியில் இருந்து பாராளுமன்ற நடைமுறைகளை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு இப்போது அந்த நடைமுறைக்கும் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது.

பாராளுமன்ற பார்வையாளர் பகுதிக்கு பொதுமக்கள் எவரும் தற்போது அனுமதிக்கப்படுவதில்லை. பத்திரிகையாளர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகிறார்கள்.

எனவே பத்திரிகைகள் ஊடாக மட்டுமே பாராளுமன்றச் செய்திகளை வாக்காளர்கள் அறிந்துகொள்ள முடிகிறது.

பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் ஆற்றும் உரைகளைத்தான் பெரும்பாலும் பத்திரிகைகள் வெளியிட்டு வருகின்றன.

ஒரு பொதுக்கூட்டத்தில் ஆற்றப்படும் உரைகள் மக்களை நோக்கி சொல்லப்படும் கருத்துகளாக அமைகின்றன. பாராளுமன்ற உரைகள் அரசாங்கத்தை நோக்கி சொல்லப்படுபவையாக அமைந்திருக்கின்றன.

ஆயினும் நமது பாராளுமன்ற அமர்வுகளையும், நடைமுறைகளையும் நேரில் காணும் வாய்ப்புக் கிடைக்குமானால் தாம் நினைப்பதற்கு நேர்மாறான நிலவரம் அங்கு இருப்பதைத்தான் ஒருவர் காணமுடியும்.

பாராளுமன்ற அமர்வுகளின்போது ஆளும் கட்சி தரப்பிலும், எதிர்க்கட்சித் தரப்பிலும் பெரும்பாலான ஆசனங்கள் காலியாகவே காணப்படுகின்றன.

வரவு- செலவுத் திட்ட விவாதத்தின்போது ஒவ்வொரு அமைச்சுக்குமான நிதி ஒதுக்கீடு மீதான விவாதம் நடைபெறும்.

அவ்வாறு நடைபெற்ற விவாதங்களில் குறிப்பிட்ட அமைச்சின் அமைச்சர், பிரதியமைச்சர் தவிர ஆளும் கட்சித் தரப்பில் ஐந்து அல்லது ஆறு உறுப்பினர்கள்தான் அமர்ந்திருந்தனர்.



எதிர்க்கட்சி வரிசையிலும் அதே நிலைதான் காணப்பட்டது.

அன்றைய விவாதத்தில் உரையாற்றிய ஒரு உறுப்பினரின் உரையை செவிமடுத்திருக்க இரு தரப்பிலும் கூட்டிப் பார்த்தாலும் பத்து உறுப்பினர்கள்கூட இல்லாதிருந்தனர்.

அது மட்டுமல்லாமல், உறுப்பினர்கள் உரையாற்றும்போது குறிப்பிட்ட அமைச்சர்கள்கூட சில சமயங்களில் வேறு வேலைகளில் மூழ்கி விடுவதையும் கவனிக்கக்கூடியதாக உள்ளது. ஏதாவது ஒரு பத்திரத்தில் கையொப்பம் இட்டுக் கொண்டிருப்பதையோ, அல்லது வேறு உறுப்பினருடன் பேசிக்கொண்டிருப்பதையோ அவதானிக்கத் தக்கதாக இருக்கிறது.

அவ்வாறான சந்தர்ப்பத்தில் ஆற்றப்படும் உரைகள் பாராளுமன்ற ஹன்சாட்டில் பதியப்படவும், மறுநாள் பத்திரிகைகளில் வெளிவரவுமே பயன்பாடு உடையனவாக மாறிவிடுகின்றன.

அதனால் பாராளுமன்றத்தில் ஆற்றப்படும் உரைகளும் மக்கள் அறிந்துகொள்ளச் சொல்லப்பட்ட செய்திகளாகவே அமைந்துவிடுகின்றன.

பாராளுமன்றத்தில் உரையாற்றுவதும் ஒரு வகையில் பத்திரிகைகளுக்கு வெளியிடும் அறிக்கைகள்தான். "அரசாங்கம் கேட்காவிட்டாலும், நாம் பாராளுமன்றத்தில் இப்படியெல்லாம் உரையாற்றி இருக்கிறோம் என்பதை மக்கள் அறிந்து கொண்டால் போதும். அடுத்த தடவையும் வாக்குக் கேட்டுப் போக வேண்டியிருக்கும் அல்லவா?" என்று ஒரு பாராளுமன்ற உறுப்பினர் சமீபத்தில் சொல்லியிருந்தார்.

அந்த உறுப்பினரின் கூற்று மெத்தச் சரியான ஒன்றாகவே அமைந்திருக்கிறது.

இன்னொரு விடயத்தையும் கவனிக்கக் கூடியதாக உள்ளது.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சி வரிசையில்தான் அமர்ந்திருக்கின்றனர். இ.தொ.க. தலைவர் தொண்டமான் மட்டும் அமைச்சர் பதவி காரணமாக ஆளும் கட்சி வரிசையில் அமர்ந்திருக்கிறார். அவரது கட்சியின் பாராளுமன்ற அங்கத்தினர்கள் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கின்றனர். இது ஒரு சுவையான காட்சியாகவும் இருக்கிறது.

பாராளுமன்றத்தில் உள்ள தமிழ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருப்பதற்கும், அவர்களது நடைமுறைக்கும் இடையே முரண்பாடு காணப்படுகிறது.

தமிழ் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆற்றும் உரைகளை மட்டுமே பத்திரிகைகள் வாயிலாகப் படிப்பவர்களுக்கு அவர்கள் எதிர்க்கட்சியாக செயற்படுவதுபோலவே நினைக்கத்தோன்றும்.

பாராளுமன்ற நடைமுறைகளை நேரில் அவதானிக்கும் ஒரு வாய்ப்புக்கிடைத்தால் அந்த நினைப்பு பொய்த்துவிடவே செய்யும்.

வாக்கெடுப்புக்களில் ஆளும் கட்சிக்கு சார்பாகவே தமிழ் கட்சி பா.உக்கள் கை உயர்த்துகின்றனர். எதிர்க்கட்சி வரிசையில் உள்ள ஆளும் கட்சியினராகவே அவர்களது செயற்பாடுகள் அமைந்திருக்கக் காணப்படுகின்றன.

தமிழ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் உரையாற்றவே முடியாத ஒரு காலகட்டம் முன்னர் நிலவியது.

எதிர்க்கட்சித் தலைவராக அமரர் அமிர்தலிங்கம் பதவிவகித்த காலத்தில், அவர் பேச எழுந்தால் ஆளும் கட்சி வரிசையில் இருந்து கூச்சலும் குறுக்கீடுகளும் சரமாரியாக எழும்.

'கொட்டியா, கொட்டியா' என்றெல்லாம் அவரை நோக்கிக் கூச்சல் போட்டுக் கொண்டிருப்பர்.

தற்போது தமிழ் பா.உக்கள் பேச எழுந்தால் சபையில் அமைதி நிலவத் தொடங்கிவிடுகிறது. ஆளும் கட்சி உறுப்பினர்கள் குறுக்கிடுவதில்லை. பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்களும் குறுக்கிடுவது கிடையாது.

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் உரையாற்றுவதாகத் தெரிந்தால் ஆளும் கட்சி தரப்பில் உறுப்பினர்கள் தொகை அதிகமாக இருக்கும். குறிப்பிட்ட உறுப்பினர் அரசைக் கடுமையாகச் சாடும்போது பதிலடி கொடுத்துக் குறுக்கிடத் தயாராக ஆளும் கட்சி உறுப்பினர்கள் காணப்படுவர்.

தமிழ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசும்போது ஆளும் கட்சி, எதிர்க்கட்சி தரப்புகளில் ஆசனங்கள் காலியாக இருக்கும். அமர்ந்திருப்பவர்களும் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருப்பர்.

அரசாங்கத்தை கடுமையாகச் சாடி உரையாற்றினாலும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் குறுக்கிட மாட்டார்கள்.

எப்படித்தான் உரையாற்றினாலும் இறுதியில் தமக்கு ஆதரவாகத்தான் சபையில் கை உயர்த்தப்போகிறார்கள், எனபதால் ஆளும் கட்சி உறுப்பினர்கள் தமிழ் பா.உக்களை குறுக்கீடு செய்வதில்லை.

தமிழ் பா.உக்கள் தமது உரைகளில் எழுப்பும் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதிலளிப்பதும் அரிதாகவே இருந்து வருகிறது.

அப்படிப் பதில் அளித்தாலும்கூட தமிழ் பா.உக்களும் மிக அமைதியாக செவிமடுத்துக் கொண்டிருப்பர். தவறுகளை நியாயப்படுத்தும் வகையில் பதில் சொல்லப்பட்டாலும் தமிழ் பா.உக்கள் குறுக்கிடாமல் இருந்து விடுவதையே அவதானிக்க முடிகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் மட்டுமே தமது உரைகளுக்கு பதில் அளிக்கப்படும்போது, அது தவறாக இருந்தால் பலமாகக் குறுக்கீடு செய்கிறார்கள்.

தமிழ் கட்சிகளின் பாராளுமன்ற நடைமுறைகள் ஆளும் கட்சி உறுப்பினர்களின் நடைமுறைகளுக்கு ஒத்ததாகவே அமைந்திருக்கின்றன.

அரசாங்கத்திற்கு எதிராக தமிழ் பா.உக்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் அவர்களது அரசியலுக்காக பேசப்படும் விடயங்களாகவே ஆளும் தரப்பால் கருதப்படுகிறது. "அரசியலுக்காக அவ்வாறு பேசுகிறார்கள்; ஆனால் எங்களோடுதான் இருக்கிறார்கள்!" என்பதுதான் தமிழ் கட்சி பா.உக்கள் தொடர்பான ஆளும் தரப்பு மனோபாவம், என்பதையே உணரக்கூடியதாக உள்ளது.

இதேவேளையில் ஆளும் கட்சி வரிசையில் உள்ள வாசுதேவ நாணயக்கார போன்றவர்களின் நிலை நேர்மாறாக அமைந்திருக்கக் காணப்படுகிறது.

ஆளும் தரப்பில் இருந்துகொண்டே அரசாங்கத்தின் நிலைப்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ஒருவராக வாசுதேவ நாணயக்கார விளங்கிவருகிறார்.

வரவு- செலவுத் திட்ட வாக்கெடுப்பில் கூட வாசுதேவநாணயக்கார கலந்து கொள்ளவில்லை.

வாசுதேவ தன்னை ஒரு ஆளும் கட்சி உறுப்பினர் என்று சொல்வதற்கு வெட்கப்படவில்லை. அதே சமயத்தில் தனது கொள்கைக்கு மாறான நிலைப்பாடுகளை ஆதரிக்க மறுப்பவராகவே இருந்துவருகிறார்.

தமிழ் கட்சி பா.உக்கள் தம்மை ஆளும் கட்சி சார்பாளராகச் சொல்ல வெட்கப்படுகின்றனர். தமது காரசாரமான உரைகள் மூலமாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் போல மக்கள் கருத இடமளிக்கின்றனர். ஆனால் பாராளுமன்றத்தில் அரசாங்கத்தை தோள்கொடுத்து தாங்கும் தூண்களாகவே விளங்குகின்றனர்.

பாராளுமன்ற அமர்வுகள் தொலைக்காட்சிகளில் காண்பிக்கப்பட்டால் தமிழ் கட்சி பா.உக்களின் மறுபக்கத்தையும் மக்கள் கண்டுகொள்ளக் கூடியதாகிவிடும்.

தமிழ் கட்சி பா.உக்கள் பாராளுமன்ற அமர்வுகளை தொலைக்காட்சியில் காண்பிப்பதை விரும்பமாட்டார்கள். பத்திரிகைகள் வாயிலாக தமது உரைகள் வெளியாவதை மட்டுமே விரும்புகின்றவர்களாக இருப்பார்கள்.

ஆளும் கட்சி, எதிர்க்கட்சி தரப்பின் ஏனைய உறுப்பினர்களும் பாராளுமன்ற அமர்வுகள் தொலைக்காட்சிகளில் நேரடியாகக் காண்பிக்கப்படுவதை சங்கடமான விடயமாகவே கருதுவர்.

ஆளும் கட்சியும் பாராளுமன்ற அமர்வுகள் நேரடியாக ஒளிரப்பாவதை விரும்பாது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சில முக்கிய பிரச்சனைகளைப் பேசும்போது கூச்சல் போட்டே அவரது வாயடைத்துவிடும் வாய்ப்பு இல்லாமல் போவதை ஆளும் கட்சியும் விரும்பமாட்டாது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் பாராளுமன்ற சம்பிரதாயங்களை கடைப்பிடிக்கத் தவறுகிறார்கள் என்று சபாநாயகர் கே.பி.ரத்நாயக்கா சமீபத்தில் குறைபட்டிருந்தமையும் அவதானிக்கத் தக்கதாகும்.

இவ்வாறான சூழ்நிலையில் பாராளுமன்ற அமர்வுகளில் வெளிப்படைத்தன்மையை கொண்டுவரக்கூடிய துணிச்சல் அரசாங்கத்திற்கும் ஏற்படமாட்டாது.

நமது நாட்டைப் பொறுத்தவரை தேர்தல் காலங்கள் தவிர ஏனைய காலங்களில் தமக்கும் வாக்காளர்களுக்கும் இடையே ஒரு திரை தொங்கவிட்டிருப்பதைத்தான், அவர்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் விரும்பி வருகின்றனர். அதுதான் அவர்களுக்கு வசதியும் கூட.



முல்லைத்தீவு முகாமில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆட்டிலறி பீரங்கிகளுடன் பிரபா.

# கொள்ளை ராணி

## பூலான்தேவி

தருவது 23 ரசிகன்

அந்தப் பரட்டைத் தலையனும் அவனது ஆட்களும் என்னை நோக்கித் திரும்பினார்கள்.

என் தம்பி சிவநாராயணனை வீட்டின் நடுவே தலைகீழாகக் கட்டித் தொங்க விட்டிருந்தார்கள்.

**கடந்தவாரம்**

**நிலச்சுவாந்தார்களின் ஆசை நாயகியாகப் பூலான் இருப்பதாகச் சொல்லி அவளுக்கு தண்டனை தரப்போவதாக கொள்ளைக் கோஷ்டி எச்சரிக்கைக் கடிதம் அனுப்புகிறது. பூலான் வீட்டார் பயந்துபோகிறார்கள். இரவு கொள்ளைக் கோஷ்டி பூலான் வீட்டுக்குள் புகுந்தது. ஒளிந்து கொள்ளும் பூலான், தன் பெற்றோரையும் சகோதரனையும் அவர்கள் சித்திரவதை செய்ததால் வெளியே வருகிறாள்.**

**இனி...**

அம்மா அழுது மன்றாடிக்கொண்டிருந்தார். அப்பாவை இரண்டுபேர் பிடித்துவைத்திருந்தார்கள்.

"வந்துவிட்டாயா, வா, வா, வரேவா!" என்று இளித்துக் கொண்டு என்னிடம் வந்தான் பரட்டைத் தலையன். அவன் கையில் நீளமான துப்பாக்கி வைத்திருந்தான்.

"அக்கா, ஓடிப்போ.... அக்கா, அக்கா.." என்றான் தலைகீழாகத் தொங்கிய சிவநாராயணன். அதற்காக முதுகில் உதை பட்டான்.

"ஏனடி இங்கே வந்தாய்?" என்று கத்தினாள் அம்மா. அவளது மார்பில் காலால் உதைத்தான் இன்னொரு முரடன்.

நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். என் அருகில் வந்த பரட்டைத் தலையனை நேராகப் பார்த்தேன்.

"உனக்கு நான்தானே வேண்டும்? இவர்களை ஏன் போட்டு வதைக்கிறாய்? நான்தான் வந்துவிட்டேனே!"

பரட்டைத் தலையன் தன் நாக்கை நீட்டி தன் உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டு, என்னை விழுங்குவது போலப் பார்த்தான்.

"நீ.. நீதான் வேண்டும். நான் யார் தெரியுமா? குஜார், பாபுசிங் குஜார்!"

தன் பெயரைச் சொல்லும்போதே பெருமையாகச் சொல்லிக்கொண்டான். தன் பெயரைக் கேட்டதும் நான் பயந்து நடுங்குவேன் என்று எதிர்பார்த்தான் போலும்.

"தெரியும்!" என்றேன் நிதானமாக.

"தெரியுமா? என்னைத் தெரியுமா? எப்படி? எப்படித் தெரியும்? எப்படி, எப்படி?"

"அதுதான் கடிதம் அனுப்பியிருந்தாயே!"

"ஓ.. ஓஹோ. ஓ.ஹோ. உனக்குப் பயமே இல்லையா?"

"இல்லை! நீ என்ன என்னைத் தின்னவா போகிறாய்?" என்று கேட்டதும் வீடே இடிந்து விழும்போலச் சிரித்தான். தன் ஆட்களை நோக்கித் திரும்பினான்.

"அந்தப் பயலை அவிழ்த்து விடுங்களடா!" சொல்லிக்கொண்டே என் கையில் பிடித்து இழுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியே முற்றத்திற்கு வந்தான்.

உள்ளே அம்மா ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தாள். தம்பி சிவநாராயணன் என் பின்னால் ஓடிவந்தான். அவன் கன்னத்தில் அறைந்து துரத்தினான் ஒருவன்.

"டேய்.. அவனை அடிக்காதேயடா" என்று கத்தினேன்.

முற்றத்திலும் பாபுசிங் குஜாரின் ஆட்கள் துப்பாக்கிகளோடு நின்றார்கள்.

"பேசாமல் வந்தாய் என்றால் இப்படியே உன்னைக் கொண்டுபோவேன். சத்தம் கித்தம் போட்டு தகராறு பண்ணினாய் என்றால், உடம்பில் பொட்டுத் துணிகூட இல்லாமல்தான் கூட்டிப் போவேன். என்ன, இப்படியே வருகிறாயா அல்லது.....?"

என்னதான் நடக்கும் என்றுதான் பார்த்து விடலாமே என்ற உறுதியுடன் சொன்னேன்:

"வருகிறேன், இப்படியே வருகிறேன்!"

தன் ஆட்களில் ஒருவனை அழைத்து கண்ஜாடையால் ஏதோ சொன்னான்.

என் கைகள் இரண்டையும் முதுகுப்புறமாகத் திருகி ஒரு கயிற்றால் கட்டினார்கள்.

"வேண்டாம், நான் ஓடமாட்டேன்!"

"சத்தம் போடாதே!" என்றான் பாபுசிங் குஜார். முதுகுப்புறமாக கைகள் கட்டப்பட்டதால் நடப்பதற்கே கஷ்டமாக இருந்தது.

"ம்... நட" என்று சொல்லிவிட்டு என் முன்னால் நடந்தான் பாபுசிங் குஜார்.

'அய்யோ... அய்யோ' என்று அம்மா கத்திக்கொண்டிருப்பது கேட்டது. அவர்கள் யாரும் வெளியே வரமுடியாமல் உள்ளே வைத்துப் பூட்டிவிட்டார்கள்.

இனிமேல் அவர்களில் யாரையும் நான் பார்க்க முடியாமல் கூடப் போகலாம். இதுதான் என் வாழ்வின் கடைசிப் பயணமாகக் கூட இருக்கலாம்.

கடைசியாக ஒரு தடவை அப்பா, அம்மா முகத்தையாவது பார்த்துவிட்டுச் செல்லவேண்டும் போலிருந்தது. அதுதான் முடியாதே!

நடந்தவள் நின்று, என் வீட்டை ஒரு முறை ஆசைதீரப் பார்த்தேன்.

நான் ஏன் வளர்ந்தேன்? வளர்ந்து பெரியவளானேன்? குழந்தையாகவே இருந்திருந்தால் இந்த வீட்டில் இருந்து, இந்த முற்றத்தில் ஓடித்திரிந்து விளையாடிக் கொண்டிருக்கலாமே! நினைக்க நினைக்க மனது வலித்தது.

"என்னடி நிற்கிறாய்? நட!" முதுகில் துப்பாக்கி முனையால் தள்ளினான் ஒருவன்.

முன்னால் சென்றுகொண்டிருந்த பாபுசிங் குஜார் யாருடனோ பேசிக்கொண்டிருந்தான். இருளாக இருந்ததால் அவன் யாருடன் பேசுகிறான் என்று தெரியவில்லை.

அவர்களை நெருங்கியபோதுதான் தெரிந்தது. பாபுசிங் குஜாருடன் பேசிக் கொண்டிருந்தவன் வேறு யாருமல்ல; கிராம அதிகாரியின் வேலையாள் ராதேஷ்யாம்தான் அந்தக் கழுதை.

"உன் உதவிக்கு நன்றி. இந்தா இதை வைத்துக் கொள்!" என்று சில நோட்டுக் கற்றைகளை ராதேஷ்யாமின் கைகளுக்குள் பாபுசிங் குஜார் திணித்ததைக் கண்டுவிட்டேன்.

நான் கிட்டத்தில் வந்ததும் முகத்தைத் திருப்பிக் கொண்டான் ராதேஷ்யாம்.

அடப்பாவி மனுசா! ஒரே சாதி என்று சொல்லி என் அப்பாவிடம் வந்து என்னமாய் உருக்கமாகப் பேசினான். இந்தப் பாவிதான் என் வீட்டைக் காட்டிக் கொடுத்திருக்கிறான்.

அவன் எங்கள் வீட்டுக்கு தகவல் சொல்ல வரவில்லை; நான் இருக்கிறேனா இல்லையா என்று அறிந்து சென்று பாபுசிங் குஜாருக்குத் தகவல் சொல்லத்தான் வந்திருக்கிறான் பாவி.

நாய்கள் குரைத்துக் கொண்டிருந்தன. பாபுசிங் குஜார் முன்னால் நடக்க ஒருவர் பின் ஒருவராக எல்லோரும் சென்று கொண்டிருந்தனர்.

என் பின்னால் எத்தனை பேர் வருகிறார்கள் என்று தெரியவில்லை. என் முதுகில் அடிக்கடி ஒரு துப்பாக்கியின் முனை தொட்டுத் தொட்டு விலகியது.

எங்கும் ஒரே இருள். கிராமம் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறதா? அல்லது உறக்கத்தில் இருப்பது போல எல்லோரும் நடிக்கிறார்களா என்று தெரியவில்லை.



நாய்கள் விடாமல் குரைத்தும் யாரும் வெளியே எட்டிப்பார்க்கவில்லை. இரவு நேரத்தில் நாய்கள் இப்படிக் குரைத்தால் கொள்ளைக் கோஷ்டிதான் நடமாடுகிறது என்று தெரிந்துவிடும்.

கதவைத் திறந்து வெளியே வந்தால் கொள்ளைக் கோஷ்டிக்காரர்கள் வீட்டுக்குள் புகுந்துவிடுவார்கள் என்ற பயத்தில் யாருமே வெளியே வரமாட்டார்கள்.

முன்னாலும், பின்னாலும், பாதையின் இரு மருங்கிலும் வெகு ஜாக்கிரதையாகக் கூர்ந்து பார்த்துக்கொண்டுதான் எல்லோரும் சென்றார்கள்.

ஏதாவது சத்தம் கேட்டதும் பாபுசிங் குஜார் தன் கையில் உள்ள துப்பாக்கியை உயர்த்தி சத்தம் வந்த திசையைக் குறி பார்த்தபடி முழங்கால்களை மடக்கி அமர்ந்து விடுவான். அவனைத் தொடர்ந்து ஏனையோரும் அப்படியே செய்வார்கள்.

எனக்கு வேடிக்கையாகவும் இருந்தது. பிரமிப்பாகவும் இருந்தது.

இப்போது பொலிஸ்காரர்கள் திடுமென்று வந்துவிட்டால் இவர்கள் என்ன செய்வார்கள்? சண்டை நடக்குமா?

அப்படி நடந்து, இவர்கள் பொலிஸ் காரர்களைச் சுட்டால் நன்றாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டேன்.

ஏனோ தெரியாது; பொலிஸ்காரர்கள்மீது எனக்கிருந்த வெறுப்பு இவர்கள்மீது வர மாட்டேன் என்கிறது.

எங்கள் கிராமத்திலிருந்து பிரிந்து, புதர்களும், சேறும் சகதியுமான பாதை வழியாக அவர்கள் செல்லத் தொடங்கினார்கள்.

கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டிருந்ததால் சகதியில் கால்கள் புதைந்தபோது என்னால் நடக்க முடியவில்லை.

சதக், சதக் என்று கால்கள் புதைந்து கொண்டிருந்தன. பின்னால் வந்தவன் துப்பாக்கியால் முதுகில் தள்ளினான்.

நிலை தடுமாறி சகதியில் குப்புறவிழுந்து விட்டேன். ஒருத்தன் என்னைப் பிடித்து தூக்கிவிட்டான்.

"கால்களை ஊன்றி வைக்காதே. இலேசாக வைத்து நட," என்றான் என்னைத் தூக்கிவிட்டவன். அவன் சொன்ன விதம் கட்டளையாக இல்லாமல் பரிவோடு சொன்



பூலான்

னதுபோல் ஒலித்தது.

இந்தக் குரலை- இதே குரலை இதற்கு முன் எங்கோ கேட்டிருக்கிறேன்.

அவன் முகத்தைப் பார்க்க நிமிர்ந்த போது அவன் எனக்கு முதுகைக் காட்டிக் கொண்டு பாபுசிங் குஜாரின் பின்னால் சென்று கொண்டிருந்தான்.

அடர்த்தியாக இருள் சூழ்ந்திருந்தது. அதனால் அவன் உருவம் தெளிவாகத் தெரியவில்லை.

புதர்களில் நீட்டிக் கொண்டிருந்த முட்கள் என் கால்களையும், தொடைகளையும் கீறிக் கிழித்தன. சுள் சுள்ளென்று வலித்தது.

அவர்கள் எல்லோரும் சப்பாத்துப் போட்டிருந்தார்கள். அந்தப் பாதைகளும் அவர்களுக்கு பழக்கப்பட்டவை. அதனால் எந்தத் தடங்கலும் இல்லாமல் நடந்துவந்தார்கள்.

ஒரு முட்புதரில் வசமாகச் சிக்கிக் கொண்டேன். என் தொடைப் பகுதியில் முள் ஒன்று குத்திக்கொண்டு நின்றது. அந்த வலியோடு நடக்க முடியவில்லை.

"என்னடி நிற்கிறாய்?" என்று துப்பாக்கி முனையால் இடித்தான் பின்னால் வந்தவன்.

அவனிடம் சொல்லக் கூச்சமாக இருந்தது. "நடவடி." என்று மீண்டும் இடித்தான்.

"முள்ளுக் குத்திவிட்டது!"

"எங்கேயடி?" என்றான். பதில் சொல்லாமல் முள் குத்திய இடத்தை குனிந்து பார்த்தேன்.

அவன் குனிந்து முள்ளை இழுத்தான். வேண்டுமென்றே தொடையில் விரல்களால் வருடினான். கிள்ளிப்பார்த்தான்.

"இன்னும் இருக்கிறதா?" என்று கேட்டுக் கொண்டே முள்ளைத் தேடுவதுபோல தொடைகளை வருடி வருடி.. எனக்கு கோபம் வந்தது. அப்படியே ஒரு உதை விட்டால் நாய் சேற்றில் புரளுவான்.

அதற்கெல்லாம் இது சமயமில்லை. அதனால் அடக்கிக் கொண்டேன்.

"அங்கே என்னடா செய்கிறீர்கள்? மளமளவென்று வரவேண்டியதுதானே!" என்று பாபுசிங் குஜார் குரல் கொடுத்தான். அதனால் முள்ளைத் தேடும் முயற்சியை அந்த மூதேவி நிறுத்திக் கொண்டான்.

"முள்ளுக் குத்தினால் என்னிடம் சொல்லு- என்ன?", என்று சொல்லி இளித்துவிட்டு என்னை நடக்கச் சொல்லிக்கொண்டு என் பின்னால் வந்தான் அந்தப் பரதேசி.

பொழுது மெல்ல மெல்லப் புலரத் தொடங்கியது.

எங்கள் எதிரே ஒரு ஆறு தெரிந்தது. ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டோடியது.

கரையில் பெரிய வள்ளங்கள் சில காணப்பட்டன.

பாபுசிங் குஜார் தன் அருகில் நின்றவனை பெயர் சொல்லி அழைத்தான்.

"விக்ரம் மல்லா! அந்த வள்ளங்களுக்குள் யாராவது மறைந்திருக்கிறார்களா என்று பார்த்துவிட்டு வா! ஜாக்கிரதை! துப்பாக்கியை-தயாராக வைத்துக்கொண்டு போ!" என்றான்.

விக்கரம் மல்லா.. விக்ரம் மல்லா.. விக்.. இப்போது அவனை தெளிவாகப் பார்க்க முடிந்தது. நான் நினைத்தது சரி. இவனை நான் முன்னர் சந்தித்திருக்கிறேன்.

கான்பூரில் அந்தச் கைலாசுடன் நான் சென்றபோது என்னிடம் தவறாக நடக்க முற்பட்ட கொள்ளைக் கோஷ்டி ஆள் ஒருவனை அடித்தானே! அவன்தான் இவன்.

'விக்ரம் மல்லா! உன்னைத்தான் நானும் சந்திக்க நினைத்தேன்' என்று கத்தவேண்டும் போல இருந்தது.

அதேநேரம் நான் எதிர்பார்க்காத சம்பவம் ஒன்று நடந்தது.

வள்ளத்தை நோக்கிச் சென்ற விக்ரம் மல்லாவின் முதுகை நோக்கி தன் துப்பாக்கியை நீட்டிக் குறிவைத்தான் பாபுசிங் குஜார்.

**(தொடர்ந்து வரும்)**

# இன்னொரு வாரிசு இளவரசர் வில்லியம்ஸ்



சாள்ஸ்-டயானா தம்பதியினர் பிரிந்து விட்டனர். சாள்ஸ் இப்போது தன் காதலி கமீலாவுடன் பொழுதை உபயோகமாக கழித்துக் கொண்டிருக்கிறார்.

டயானா லேட்டஸ்டாக பாகிஸ்தான் டாக்டர் ஒருவரை காதலித்துக் கொண்டிருக்கிறார்.

சாள்ஸ்-டயானா பற்றிய செய்திகள் வெளியிட்டுக் கொண்டிருந்தால் பத்திரிகையாளர்களுக்கு அலுத்துவிடும். படித்துப் படித்து வாசகர்களுக்கும் சலித்துவிடும் என்று நினைத்து களத்தில் இறங்கியிருக்கிறார் இளவரசர் வில்லியம்ஸ்.

சாள்ஸ்-டயானா தம்பதியின் மூத்த புதல்வர்தான் இளவரசர் வில்லியம்ஸ். பொடிப்பயலாக இருந்த வில்லியம் இப்போது ஓரளவு விபரம் தெரிந்த 14 வயதுப் பையனாகிவிட்டார். வயதுக்கு மீறிய தோற்றத்துடன் மிடுக்காக இருக்கிறார்.

இளவரசர் வில்லியம்ஸின் அறையில் 'பே வாட்ச்' தொலைக்காட்சித் தொடரில் கலக்கிக் கொண்டிருக்கும் கவர்ச்சிக் கன்னி பமீலாவின் படம் மாட்டப்பட்டிருக்கிறதாம்.

டயானா எவ்வளவோ சொல்லியும் கேட்காமல் பமீலாவின் படத்தை மாட்டி வைத்து அழகு பார்க்கிறார் வில்லியம்.

இந்த விடயம் எப்படியோ இலண்டன் பத்திரிகைகளுக்கு கசிந்து விட்டது. விடுவார்களா அவர்கள்? இங்கிலாந்தில் உள்ள பெண்கள் மத்தியில் ஒரு கருத்துக் கணிப்பையே நடத்தி முடித்துவிட்டார்கள்.

அது ஒரு விவஸ்த்தை கெட்ட கருத்துக் கணிப்பு.

இளவரசர் வில்லியம்சை முத்தமிடதாம்- 'முத்தம் கொடுக்க விரும்பும்' பையனாக- இங்கிலாந்தில் உள்ள இளம் பெண்கள் தெரிவு செய்திருக்கிறார்கள் என்று அக் கருத்துக் கணிப்பின் முடிவு கூறுகிறது. (இதற்கெல்லாம் ஒரு கணிப்பா?)

இந்தக் கருத்துக் கணிப்பு வெளியான பின்னர் அம்மா டயானா உஷாராகிவிட்டார். கண்கொத்திப் பாம்பாக வில்லியம்சைக் கவனித்து வருகிறார்.

பிரபல மொடல் அழகி சிண்டி கிராஃபோர்டை நேரில் சந்திக்க விரும்பினாராம் இளவரசர் வில்லியம்ஸ். சிண்டியை போன் செய்து வரவழைத்தார் டயானா.

சிண்டியும், வில்லியம்ஸும் பேசிக் கொண்டிருந்தபோது கூடவே இருந்து காவல் காத்தாராம் டயானா.

எப்படியோ எதிர்காலக் கிசுகிசுக்களுக்கு வசதியாக இங்கிலாந்து அரச பரம்பரையின் மற்றொரு வாரிசு உருவாகி விட்டது.

# காதல் இளவரசன்

இளவரசர்கள் என்றாலே காதல் விடயத்திலும் இளவரசர்களாகத்தான் இருப்பார்கள்



போலிருக்கிறது.

மொனோக்கோ நாட்டின் இளவரசர் டேனியல் டக்ரட். அவருக்கு திருமணமாகி மனைவியும், ஒரு பிள்ளையும் இருக்கிறார்கள்.

ஆனால் டேனியலின் பார்வை பிரபல பாடகி ஹாட்மன் பீலியின்மீது சூடாகத் திரும்பியிருக்கிறது.

டேனியலும், ஹாட்மனும் நீச்சல் குளத்தில் தம்மை மறந்திருந்தபோது இத்தாலிய பத்திரிகை ஒன்று 'கிளிக்' 'கிளிக்' என்று அக் காட்சிகளை சுட்டுத் தள்ளிவிட்டது. 12 பக்கங்களில் அப் படங்களை பிரசுரித்தது.

டேனியலும், ஹாட்மனும் மட்டும் அசரவில்லை. இனிமேல் தங்கள் காதலை அடக்கமாக நாலு சுவர்களுக்குள் மட்டும் தொடரலாம் என்று முடிவு செய்துள்ளார்களாம்.

# இமெல்டாவின் 70 கோடி ரூபாய்

ஜெயலலிதா-சசிகலா கூட்டுக் கொள்ளை நாளும் பொழுதும் புதிது புதிதான தகவலோடு நம்மை அசத்துகிறது.



பிலிப்பைன்சிலும் ஒரு பெண்மணி அசத்திக் கொண்டிருக்கிறார்.

பிலிப்பைன்ஸ் சர்வாதிகாரியாக இருந்து செத்துப்போன மாக்கோஸின் மனைவி இமெல்டா தான் அவர். மாக்கோஸ் ஆட்சியில் இருந்தபோது இமெல்டா வாங்கிச் சேர்த்து வைத்த ஆயிரம் ஜோடி செருப்புக்கள் மட்டுமே பல கோடி பெறுமதிதேறும். (ஜெயலலிதாவிடம் 300 ஜோடி செருப்புக்கள் மட்டுமே இருந்தன.)

இமெல்டாவிடம் இருந்த நகை களின் பெறுமதி மட்டும் 70 கோடிரூபாய்க்கு மேல் தேறும். இதெல்லாம் இமெல்டாவிடம் குவிந்துள்ள சொத்துக்களோடு ஒப்பிடும்போது ஒரு துளிதானாம்.

ஊழல் குற்றச்சாட்டுக் காரணமாக விசாரிக்கப்பட்டு வருகிறார் இமெல்டா. வழக்கை விசாரித்துவரும் நீதிமன்றம் சமீபத்தில் ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

அதன்படி இமெல்டாவிடம் இருந்து மீட்கப்பட்ட 70 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட நகைகளை அரசாங்கச் சொத்தாகிவிட்டன.

நூறா, ஆயிரமா? 70 கோடி ரூபாய் போய்விட்டது. இமெல்டா மட்டும் கலங்கவில்லை. அலுங்காமல், குலுங்காமல் இமெல்டா சொல்லும் தத்துவம் என்ன தெரியுமா? "என் தந்தை அடிக்கடி சொல்லுவார், எதை நீ அதிகம் விரும்புகிறாயோ அது உன்னை விரும்பாது," என்றார் இமெல்டா. அது சரி, அவருக்கென்ன கவலை? ஊர்ச் சொத்துத்தானே!

# உருமாறும் அழகுகள்

'பிளாஸ்டிக் சேர்ஜரி' மூலம் தன் முகம் மற்றும் உடலின் பல பாகங்களை உருமாற்றியவர் பொப் இசைப் புயல் மைக்கேல் ஜாக்சன். அவரது புகழுக்குக் காரணம் பிளாஸ்டிக் சேர்ஜரிதான் என்று நினைத்து விட்டார்கள் பிரபல புள்ளிகள்.

உலகில் வசதி படைத்த ஆண்களும், பெண்களும் தங்கள் உடலில் அழகாக இல்லை என்று கருதப்படும் உறுப்புக்களை பிளாஸ்டிக் சேர்ஜரி மூலம் அழகுபடுத்தத் தொடங்கிவிட்டார்கள்.

நமது பக்கத்து நாடான இந்தியாவிலும் பிளாஸ்டிக் சேர்ஜரி மோகம் அதிகமாகிவிட்டது.

அந்த மோகத்தைத் தூண்டிவிட்டவர்கள் சினிமா நட்சத்திரங்கள்தான். ஸ்ரீதேவி முதல் ஊர்மிளா வரை பிளாஸ்டிக் சேர்ஜரி மூலம் தேவையான பகுதிகளை மெருகூட்டியிருந்தனர். இப்போது மனிஷா கொய்ராலாவும் கழுத்துக்குக் கீழே மெருகூட்டியிருக்கிறாராம்.



நடிகர்களில் அமிதாப்பச்சன் பிளாஸ்டிக் சேர்ஜரி மூலம் தனது கன்னத்தை உப்ப வைத்துள்ளாராம்.

பிளாஸ்டிக் சேர்ஜரி மூலம் கண்ட கண்ட இடங்களில் மாற்றம் செய்ய முற்பட்டு, உள்ளதும் போச்சுடா என்ற நிலைக்கு சென்றவர்களும் இருக்கிறார்கள்.



## அவுஸ்திரேலியாவில் ஒரு அவ்வை சண்முகி

இந்தியாவில் நடைபெற்ற அழகிப்போட்டி சர்ச்சைகளை கிளப்பிவிட்டு நடந்து முடிந்துவிட்டது.

இப்போது அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற அழகிப் போட்டி சர்ச்சையை கிளப்பியிருக்கிறது. ஆனால் இது சுவையான சர்ச்சை.

மிஸ் அவுஸ்திரேலியாவை தெரிவு செய்யும் அழகிப் போட்டியில் நூற்றுக்கணக்கான பெண்கள் கலந்து கொண்டனர். போட்டியில் கலந்து கொண்ட அழகிகளையெல்லாம் தனது நளினத்தால் ஓரம்கட்டிவிட்டு இரண்டாம் இடத்துக்கு வந்தார் பிராட்ரோஜர்ஸ். இதிலென்ன ஆச்சரியம் என்கிறீர்களா?

பிராட் ரோஜர்ஸ் ஒரு பெண்ணே அல்ல. ஆண்மகன்! என்ன நம்பமுடியவில்லையா? நீங்கள் மட்டுமல்ல உலகமே வியந்துபோய் நிற்கிறது.

'மிஸ் அவுஸ்திரேலியா' போட்டி சுமார் 42 வருடங்களாக நடைபெற்று வருகிறது. முன்னர் ஆண்கள் கலந்துகொள்ள தடைவிதிக்கப்பட்டிருந்தது. இப்போது அந்தத் தடை விலக்கப்பட்டு விட்டது. அசப்பில் பெண்களைப் போலவே உள்ள பிராட்ரோஜர்ஸ் விட்டேனா பார் என்று களத்தில் இறங்கினார்.

எந்தப் பெண்களிடமும் இல்லாத ஒன்று, அது ஏதோ பிராட்ரோஜர்ஸிடம் இருப்பதாக நினைத்தார்களோ என்னவோ, அவரை இரண்டாவது அழகியாக இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்து விட்டனர் நடுவர்கள்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் இறுதிப் போட்டி நடைபெறப்போகிறது. அவுஸ்திரேலியாவின் 'அவ்வை சண்முகி'யான ரோஜருடன் சுமார் ஒரு டசின் அழகிகள் மோதுகிறார்கள். அதிலும் வெற்றி பெற்றுவிட்டார் என்றால் ஆணழகிகள் புகழ் கிடு கிடுவென்று உயர்ந்துவிடும். ஆண்மயில் ரோஜரை வாழ்த்துவோம்.

சிவபூஜைக்குள் கரடிதான் நுழையக்கூடாது. அழகிப் போட்டியில் ஆண்கள் நுழையலாம். காலம் கலிகாலம்!

## சுவரில்லாத சித்திரங்கள்

தகவல் பெட்டி



சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம் என்றில்லை. முல்லைக்கு தேர் கொடுத்த பாரிமன்னன் போல, சித்திரம் வரையத் தங்கள் தேகத்தையே கொடுக்கும் வள்ளல்கள் பெருகிவருகிறார்கள்.

உடலில் பச்சை குத்திக்கொள்வது மேல் நாடுகளில் ஒரு மோகமாகி வருகிறது. அதனை ஆங்கிலத்தில் நுனிநாக்கால் 'ஃபாஷன்' என்கிறார்கள்.


உடலில் பச்சை குத்திக் கொள்பவர்கள் இடையே போட்டிகளும் நடக்கின்றன. படத்தில் முதுகைக் காட்டுபவர் ராஸ்மன் நியெல்சென். அமெரிக்காவைச் சேர்ந்தவர். பச்சை குத்திய அழகர் போட்டியில் இவரே பரிசு பெற்றார்.

எல்லோரும் அழகிகள், நடிகைகள், பாடகிகள் ஆகியோரின் படங்களை பச்சை குத்தி இருந்தாராம். இவர் மட்டும் புராதனப் படங்களை பச்சை குத்தியிருந்தாராம். புதுமையிலும் பழமையை மறக்காத இவரது செயல் நடுவர்களைக் கவர்ந்து விட்டதாம்.

## வாசமான பிரமிடு

பிரமிட்டுக்கள் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள். படத்தில் இருப்பது வித்தியாசமான பிரமிட். மலர்களைக் கொண்டே இந்த பிரமிட்டை உருவாக்கியிருக்கிறார்கள். 45 சதுர மீட்டர் பரப்பில் மூன்று இலட்சம் மலர்களைப் பயன்படுத்தி இதனை உருவாக்கியுள்ளனர். இதுவரை உலகில் மலர்களால் உருவான பூங்கொத்துக்களில் மிகப் பெரியது என்ற பெருமையையும் இது பெற்றுவிட்டது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் அதிபர் சேயன் இபின் சுல்தான் அல்-நஹியான் அமெரிக்காவில் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டு நலமாக நாடு திரும்பினார். அவரை வரவேற்பதற்காக பிரமிட் வடிவில் இப் பூங்கொத்தை உருவாக்கி அபிதாபி நகரில் வைத்திருந்தனர். ஒரு கல்லில் இரண்டு மாங்காய். வாழ்த்துமாச்சு. சாதனையுமாச்சு.





## வானில் பயங்கரம்


விமானப்பயணம் என்றால் 'அய்..ஜாலி' என்ற உற்சாகம் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. விமானப் பயணம் என்றாலே கிலி பிடிக்கத் தொடங்கிவிட்டது. அடுத்தடுத்து நடைபெற்ற விமான விபத்துக்கள் உலகையே ஒரு உலுக்கு உலுக்கிவிட்டன.

காரிலோ, பஸ்லிலோ போகும்போது விபத்து ஏற்பட்டால்கூட தப்பிவிடலாம். கப்பலில் என்றாலும் நீச்சல் தெரிந்தால் தப்பிக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. ஆனால் விமானப் பயணத்தில் திடீர் விபத்து நேர்ந்தால் மரணம் நூறுசதவீத உத்தரவாதம்!

விண்வெளிவரை விஞ்ஞானம் பாதை காட்டுகிறது. ஆனால் விமானப் பயணம் பாதுகாப்பாக நடக்க மட்டும் ஒரு வழி கண்டுபிடிக்க முடியவில்லை.

கடந்தமாதம் இந்தியாவில் டில்லியில் நடந்த விமான விபத்தில் 300க்கு மேற்பட்ட மனித உயிர்கள் மடிந்துபோயின. சிதைந்த விமானத்தையும், அருகில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் உடல்களையுமே படத்தில் காண்கிறீர்கள்.

விமானநிலையத் தவறுதான் இந்த மாபெரும் மனித இழப்புக்கு காரணம்! வடக்கு-கிழக்கு மக்கள் மட்டுமல்ல உலக மக்களும் விமானங்கள் என்றால் பயப்படத் தொடங்கி விட்டார்கள். காரணங்கள் வேறாக இருந்தாலும் பயம் ஒன்றுதான்.



## உருக்குலைந்த நினைவுச் சின்னம்

ஷாஜகான் மட்டும்தான் தன் காதலிக்காக தாஜ்மஹால் கட்ட முடியுமா என்ன? படத்தில் பாருங்கள் தன் உயிர்த்தோழியும், உடன்பிறவா சகோதரியுமான சசிகலாவுக்காக ஜெயலலிதா கட்டிய அழகு மாளிகைதான் இது.

ஆனாலும் ஜெயலிதாவுடன் ஒப்பிடும்போது மன்னன் ஷாஜகான் ஏழைதான். அவர் கட்டியது ஒரே ஒரு தாஜ்மஹால். ஜெயலலிதா கட்டியது இதுபோல் நூற்றுக்கணக்கான மாளிகைகள்!

சென்னை மாமல்லபுரம் என்ற இடத்தில்தான் இந்த மாளிகை இருக்கிறது. இதே மாமல்லபுரம் பகுதியில் மட்டும் ஜெயலலிதா மற்றும் சசிகலா குடும்பத்தினருக்கு 40 பங்களாக்கள் இருப்பதை தமிழக முதல்வர் கருணாநிதி புகைப்பட ஆதாரங்களுடன் பிரதமர் தேவகவுடாவுக்கு நிரூபித்திருக்கிறார். வெல வெலத்துப்போன தேவகவுடா அதன் பின்னரே ஜெயாவை கைதுசெய்ய சம்மதம் அளித்தாராம்.

இந்த அழகு மாளிகையைப் பார்த்து பெருமூச்சு விடாதீர்கள். ஏனெனில் இப்போது இதனை தலைகீழாகப் புரட்டிவிட்டார்கள் கிராம மக்கள்.

ஜெயலலிதா-சசிகலா வீடுகளில் தோண்டத் தோண்டப் பணமும், நகையுமாக வருகின்றன என்று செய்திகள் வெளியாகின. இந்த பங்களாவிலும் வருமானவரித் துறையினர் 500 ரூபா கட்டுக்களாக பல கோடி ரூபாய்களை தோண்டி எடுத்தார்கள்.

வருமானவரி அதிகாரிகள் சென்றதும் இந்த மாளிகைக்குள் புகுந்த கிராமமக்கள் கண்ட இடமெல்லாம் ஒரே தோண்டாக தோண்டிப் பார்த்தனர். பணமோ நகையோ சிக்கவில்லை. சரி விடுவானேன் என்று விலை உயர்ந்த கதவுகள், தரைக்குப் போடப்பட்ட கிரனேட்கற்கள், மற்றும் ஜன்னல்கள் என்று ஆளாளுக்குப் பிடுங்கிக் கொண்டு போய்விட்டார்கள்.

இப்போது உருக்குலைந்து, ஜெயலலிதா-சசிகலா போல வாடிப்போய்க் கிடக்கிறது இந்த காதல் மாளிகை. எல்லாம் நேரம்தான்!

# மினி சினி

* 'காலாபாணி' படம் மூலம் மலையாளத்திரையுலகில் நுழைந்த பிரபு, விரைவில் மலையாளப்படம் ஒன்றில் கதாநாயகனாக நடிக்கவுள்ளார். இந்தப்படத்தை பிரபல மலையாள இயக்குநர் கமல் இயக்கவுள்ளார்.

* 'கோகுலத்தில் சீதை' படத்திற்குப் பின் அகத்தியன், இயக்குநர் சிகரம் கோபாலசந்தர் தயாரிக்கும் படமொன்றை இயக்குகிறார். இப்படத்திற்கு 'காதலே நிம்மதி' என்று பெயரிடப்பட்டுள்ளது.

* இந்திப் படவுலகில் நம்பர் வன் பாடகராக இருப்பவர் குமார் சானு. சுமார் 7500 இந்திப் பாடல்களைப் பாடியுள்ள இவர் முதல் முறையாக தமிழில் பிரசாந்த் நடிக்கும் 'மன்னவா' படத்திற்காக தேவாவின் இசையில் 'எம்மா எம்மா...' என்ற பாடலைப் பாடியுள்ளார்.

* பவித்ரனின் 'மூக்குத்தி காசி' படத்தில் முதலில் சரத்குமார் நடிப்பதாக இருந்தது. பின்னர் பிரகாஷ்ராஜ், டாக்டர். ராஜசேகர் ஆகியோரின் பெயர்கள் அடிபட்டன. தற்போது பாண்கராராஜ் என்ற புதுமுகம் 'மூக்குத்தி காசி'யாக நடிக்கிறார். இவர் பிரபுதேவாவின் நடனக்குழுவில் நடனக் கலைஞராக இருந்தவர்.

* தமிழ்நாட்டில் ராமர்பிள்ளை என்பவர் மூலிகை பெட்றோல் தயாரிப்பதாக இப்போது செய்திகள் அடிபடுகின்றன. சரி இப்போ அதற்கென்ன என்கிறீர்களா? விரைவில் 'ராமர்பிள்ளை' என்ற பெயரில் படம் ஒன்று வரப்போகிறது.

* தெய்போலியனை அறிமுகப்படுத்திய இயக்குநர் இமயம் பாரதிராஜா, தற்போது நெப்போலியனின் 50வது படமான 'சிறகுகள் முறிவதில்லை' என்ற படத்தை இயக்கி வருகிறார். விரைவில் இவர் இயக்கும் படமொன்றின் பெயர் 'மயில்'.

* கே.டி.குஞ்சுமோனின் 'சக்தி' படத்தின் இயக்குநர் ரகுராஜ் முன்பு கோகுல கிருஷ்ணாவிடம் உதவி இயக்குநராகப் பணிபுரிந்தவர். கோகுல கிருஷ்ணா 'முத்துக்காளை', 'பூவரசன்' போன்ற படங்களை இயக்கியுள்ளார்.

* சிற்பி, சௌந்தர்யன் போன்ற புதிய இசையமைப்பாளர்களுக்கு வாய்ப்புக் கொடுத்தவர் தயாரிப்பாளர் ஆர்.பி.சௌத்ரி. இப்போது இவர்கள் இருவரும் பிரபலமானபிறகே சிவா என்ற புதிய இசையமைப்பாளரை அறிமுகப்படுத்தவுள்ளார் சௌத்ரி.

* 'பொன்னு விளையிற பூமி' படத்திற்காக முதல் முறையாக பாடல் ஒன்றை எழுதியுள்ளார் ராஜ்கிரண். அந்தப் பாடலை இவரே பாடவுள்ளாராம்.

* 'மின்சாரக் கனவு' படத்தைத் தொடர்ந்து ஏ.வி.எம். நிறுவனம் விஜய் நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கவுள்ளது. இப்படத்தை கே.எஸ். ரவிக்குமார் இயக்கப் போகிறார்.

## அமிதாப் தயாரிப்பில் அப்பாஸ்

இந்தி நடிகர் அமிதாப்பச்சன் நடிப்பில் மட்டுமல்ல, வியாபார நுணுக்கத்திலும் கைதேர்ந்தவர்.

உலக அழகிப் போட்டியை எதிர்ப்புக்கள் மத்தியிலும் நடத்திக் காட்டியவரல்லவா. அழகிப் போட்டி பரபரப்பில் இருந்து மீண்டுவிட்ட அமிதாப் தான் நடிக்கும் படங்களில் கவனம் செலுத்தத் தொடங்கிவிட்டார். நடிப்பதோடு படத் தயாரிப்பிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்.

அஜித்குமார்-மகேஸ்வரி நடிக்கும் 'உல்லாசம்' படம் அமிதாப் தயாரிப்பில் வளர்ந்து வருகிறது. அதனையடுத்து அப்பாஸ் கதாநாயகனாக நடிக்கும் தெலுங்குப் படமொன்றைத் தயாரிக்கிறார் அமிதாப். 'ராஜஹம்சா' என்று அப்படத்திற்கு பெயர் சூட்டப்பட்டுள்ளது. அப்பாஸ் ஜோடியாக சாக்ஷி நடிக்கவுள்ளார். பிரபல இயக்குநர் சிங்கீதம் சீனிவாசராவ் இயக்கவுள்ளார்.

மார்க்கெட் உள்ள இளம் ஹீரோக்களை பிடித்து காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்கிறார் அமிதாப். 'காதல் தேசம்' படம் தெலுங்கில் 'பிரேம தேசம்' என்ற பெயரில் சூப்பர் ஹிட். அதுதான் அப்பாஸைப் பிடித்திருக்கிறார் அமிதாப்.

## இரு ஜோடிகளால் இலாபம்

'நிலா', 'சந்திரலேகா' ஆகிய படங்களை இயக்கியவர் நம்பிராஜ் இப்போது அவரே கதாநாயகனாக களத்தில் குதித்து வெளுத்துக் கட்டுகிறார்.

'ருக்குமணி' படத்தின் கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் ஆகிய பொறுப்புக்களையும் நம்பிராஜ் ஏற்றுள்ளார்.

நம்பிராஜும் லேசுப்பட்டவரல்ல. இரண்டு ஜோடிகளுடன் நடிக்கிறார். சிந்தியா, ஸ்ரீ கன்யா ஆகியோர் ஜோடிகளாக நடிக்கிறார்கள்.

இரண்டு கதாநாயகிகள் இருந்தால்தான் போட்டி காரணமாக துணிந்து நடிப்பார்களாம்.

நம்பிராஜின் கணக்குச் சரிதான். சமீபத்தில் நம்பிராஜ் சிந்தியா சம்பந்தப்பட்ட காதல் காட்சி படமானது. நம்பிராஜ் எதிர்பார்த்ததுக்கும் மேலாக நெருங்கி நடித்து அசத்தினாராம் சிந்தியா.

"சின்ன சின்ன வயது
சிக்கிக் கிச்சு மனசு
சிக்கி முக்கி கல்லைப்போல
தீய மூட்டி சின்னப் பொண்ணு
பத்த வச்சா ஊரும் காட்டி."

என்று தொடங்கும் பாடல் காட்சியில்தான் இருவரும் நடித்தனர். பாடலை வைத்தே காட்சி எப்படியிருந்திருக்கும் என்று ஊகித்துக் கொள்ளுங்கள்.



பிரபு-நக்மா
படம்: பெரியதம்பி

## ரோஜாவுக்கு வாழ்த்து!

நடிகை ரோஜாவின் பிறந்தநாள் நவம்பர் பதினேழாம் திகதி. இது எத்தனையாவது பிறந்த நாள் என்பது மட்டும் வழக்கம்போல இரகசியம்.

சென்றமாதம் கொண்டாடிய பிறந்தநாள் செய்தியை இந்த மாதம் வெளியிடுவானேன்? காரணம்: ஒரு கலையான தகவல்.

ரோஜாவின் பிறந்தநாளுக்கு வாழ்த்துத் தெரிவித்து சென்னையில் ஒரு பெரிய விளம்பரப் பலகை வைக்கப்பட்டிருந்தது. சுப்ரீம் ஸ்டார் ரோஜா ரசிகர் மன்றம் சார்பாக என்று அதில் போடப்பட்டிருந்தது.

ரோஜாவின் மார்க்கெட் டல்லாகிவிட்டாலும் அவருக்கு இப்படியொரு ரசிகர் மன்றமா? என்று பலருக்கும் ஆச்சரியம். சமீபத்தில்தான் உண்மை தெரிந்தது.

ரோஜாவின் இதயத்தை லபக்கென்று திருடிய இயக்குநர் செல்வமணி தனது செலவில் கட்டிய விளம்பரப் பலகை தானாம் அது.

## மீனா செய்த தாஜா

'என்ராசாவின் மனசிலே' படம் மூலமாக நடிகை மீனாவை தமிழில் பிரபலமாக்கியவர் ராஜ்கிரண். அதன் பின்னர் மீனா முன்னணி நடிகையாகிவிட்டார்.

'பொன்னு விளையுற பூமி' படத்தில் மீனாவை நடிக்கக் கூப்பிட்டார் ராஜ்கிரண். ஆனால் மீனாவுக்கு ராஜ்கிரண் கூப்பிட்ட திகதிகள் ஒத்துவரவில்லை. வேறு திகதிகள் மாற்றச் சொன்னார். ராஜ்கிரணுக்கு வந்த கோபத்தில் கதாநாயகியையே மாற்றினார். குஷ்பு ஜோடியாக நடித்துவருகிறார்.

பின்னர் எப்படியோ ராஜ்கிரணைச் சந்தித்து தாஜா செய்துவிட்டார் மீனா.

இப்போது ராஜ்கிரண் ஜோடியாக மீனா ஒரு படத்தில் நடிக்கப்போகிறார்.

அப்படத்திற்கு 'பாசமுள்ள பாண்டியரே' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

ராஜ்கிரணுக்குப் பொருத்தமான கிராமியக் கதை. டி.பி. கஜேந்திரன் இயக்குகிறார்.

கதை, வசனம் பி.கலைமணி.

இசை: தேவா.



பிரபு-மந்த்ரா
படம்: தேடினேன் வந்தது

## "என் குரு அக்காதான்"
## நக்மாவின் தங்கை ரோஷினி

நக்மாவின் தங்கை ரோஷினி 'சிஷ்யா' படத்தில் கார்த்திக்கின் ஜோடியாக நடித்து வருகிறார். (முகப்பில் இருப்பவர்தான் ரோஷினி)

"ரோஷினி எப்படி?" என்று ஒரு திருப்பர் கேட்டதும் முறைத்தாராம் கார்த்திக். "நடிப்பு எப்படி?" என்று திருப்பர் விடாமல் கேட்டதும்தான் முறைப்பைத் தளர்த்தினாராம். "பரவாயில்லை ஒத்துழைக்கிறார்" என்றார் கார்த்திக். "என்ன?" என்றாராம் திருப்பர் நமட்டுச் சிரிப்புடன். "நடிப்பைப் பற்றித்தானே கேட்டீர்கள். அதைத்தான் சொன்னேன்" என்றாராம் கார்த்திக் குறும்பாக.

'கார்த்திக் எப்படி?' என்று ரோஷினியிடம் கேட்டிருக்கிறார் திருப்பர். தமிழ் தெரியாத ரோஷினி ஆங்கிலத்தில் கார்த்திக்கைப் புகழ்ந்தாராம். "பழக இனியவர். புது நடிகைதானே என்று நினைக்காமல் சொல்லித் தருகிறார் நடிப்பு" என்றாராம்.

அக்கா நக்மாவை வார்த்தைக்கு வார்த்தை புகழ்கிறார் ரோஷினி. "அக்கா எனக்குக் குரு மாதிரி. அவர் மட்டும் இல்லாவிட்டால் நான் இந்த சினிமா உலகுக்கு வந்திருக்கவே மாட்டேன். சினிமா உலகில் நிலைத்து நிற்க எப்படியெல்லாம் நடந்துகொள்ள வேண்டும் என்று அக்காதான் சொல்லித் தந்தார்" என்கிறார் ரோஷினி.

'எப்படியெல்லாம் நடந்து கொள்ளச் சொன்னார்?' என்று கேட்டதும் உஷாரான ரோஷினி, "பண்பாக, சக நடிகையுடன் அனுசரித்து அன்பாக நடந்துகொள்ளச் சொன்னார்" என்கிறார்.

## நடுத்தர நாயகனின் காதல்
## "இருவர்" படத்தில் பாடல்

'இருவர்' படத்தில் வைரமுத்து எழுதி இந்திப் பாடகி ஆஷா போன்ஸ்லே பாடிய பாடல் இது.

வெண்ணிலா வெண்ணிலா
வெண்ணிலாவே
வந்ததே முதற்காதல்
கண்ணிலே கண்ணிலே
மதுச்சாரல்
கண்டதும் முதற்காதல்
தூண்டிலில் மீனாய்
தூயவா ஆனாய்
காரணம் நானா?
நீயே நீயே சொல்!

எனவா! எனவா!
எது கண்டு மையல் ஆனாய்?
எதனால் எதனால்
இமை கழித்த கண்ணாய்ப் போனாய்?

நீ எங்கோ பிறந்தாய்
நான் எங்கோ பிறந்தேன்
ஒரே ஒரு பார்வையால்
உயிரைக் குடித்தாய்!

கண்களை மூடினால்
கனவுகள் வந்து உள்ளம் கிள்ளும்
கட்டிலை நாடினால்
இரவு இங்கு நீளம் கொள்ளும்
வேரோடு துடிக்க
யாரோடு உரைக்க?
கனாக் கண்ட காட்சிகள்
கையில் வருமா?

நடுத்தர வயது நாயகனுக்கு இளம் பெண்மீது காதல் வருகிறது. அவன் அவளை நோக்கிப் பாடும் பாடலாக இது அமைகிறது.

'அடிமைப் பெண்' படத்தில் 'ஆயிரம் நிலவே வா' என்ற பாடலை எம்.ஜி.ஆர் ஜெயலலிதாவை நினைத்துப் பாடுவதாக ஒரு காட்சி இருக்கிறது.

## ஸ்ரீதேவி விரும்பும் கணவன்

சமீபத்தில் ஜீ.ரிவன் தொலைக்காட்சியில் 'தேவராகம்' படம் ஒளிபரப்பானது. படத்தைப் பார்த்தவர்களுக்கு உறுத்தலாக இருந்த ஒரு விஷயம் ஸ்ரீதேவியின் வயது. அவரது முகத்தில் தெரியும் முதிர்ச்சியை 'மேக் அப்' மறைக்க முயன்று தோற்றுவிட்டது.

ஸ்ரீதேவிக்கு வயதாகிவிட்டது என்று தெரிந்துவிட்டதால், ஸ்ரீதேவியைச் சந்திக்கும் நிருபர்கள் கேட்கும் பொதுக் கேள்வி, "எப்போது திருமணம்?" அதற்கு மட்டும் பதில் சொல்லாமல் மழுப்புகிறார்.

"எப்படியான கணவர் தேவை?" என்ற கேள்விக்கு மட்டும் ஏ.கே. 47 போல படபடவென்று ஸ்ரீதேவி சொன்ன இலட்சணங்கள் இதோ:

"ஆண் மகனுக்கே உரிய தைரியம், நிமிர்ந்த நடை, நேர் கொண்ட பார்வை, அளவோடு, அறிவோடு நகைச்சுவை கலந்து பேசுகிற சாமர்த்தியம், நாகரிகமாக நடந்து கொள்ளும் விதம், ஆத்மார்த்தமான சிரிப்பு, செயற்கைத்தனமில்லாத நடை, உடை, மனதில் சுத்தம்" இவை அனைத்தும் இருந்தால் ஓ.கேயாம். இந்த இலட்சணங்கள் இருப்பவர்கள் மனுப்போடலாம்.



ஜெயராம்-உதயகுமார்
படம்: பெரியராமசாமி சின்னராமசாமி

## அப்பாசுக்கு போட்...
## புதிய நாயகன் அறிமு...

அஜித்குமாருக்குப் போட்டியாக அப்பாஸ் ... இப்போது அப்பாசுக்கு போட்டியாக ஒருவர் ... கொண்டிருக்கிறார்.

'காதல் தேசம்' படம் மூலம் அப்பாஸை ... செய்தவர் தயாரிப்பாளர் குஞ்சுமோன். 'சூரியன்', '... 'காதல்தேசம்' என்று பிரமாண்டமான படங்களைத் ... பணம் குவித்து வைத்திருக்கிறார்.

இப்போது தனது மகனையே கதாநாயகனா... படம் தயாரிக்கிறார்.

குஞ்சுமோனின் மகனது பெயர் எபி. ... என்ற பெயரில் பிரமாண்டமாகத் தயாராகப்போகி... எபியுடன் மும்பாய் அழகி ஒருவர் ... நடிக்கப்போகிறார். அசப்பில் அப்பாஸ் போலவே ... எபி 3 வயதில் நடனம் கற்கத் தொடங்கிவிட்டார். சி... தேவையான சகல கலைகளையும் மகனுக்குக் கற்... ஏற்பாடு செய்திருந்தாராம் குஞ்சுமோன்.

'கோடீஸ்வரன்' படத்தில் முதலில் அப்பாஸ்தா... நடிப்பதாக இருந்தது. 'காதல் தேசம்' ... நடிக்கவைத்தபோது தொடர்ந்து ஒரு வருடம் ... நடிக்க வேண்டும் என்று ஒப்பந்தம் செய்திருந்... ஒப்பந்தத்தை அப்பாஸ் மீறிவிட்டதால் தனது ... போட்டியாக நிறுத்தப் போகிறார் மீசைக்கார...

## நடித்த காட்சி

'அருணாச்சலம்' படப்பிடிப்புக்கள்
நடைபெற்று வருகின்றன.
படமாக்கப்பட்ட காட்சி ஒன்றை
றாம். ரஜினி எப்படி நடித்திருப்பார்
நுக்கொண்டு படியுங்கள். பின்னர்
ரவர் பார்த்து ரசிக்கலாம்.
ரபோட்ட வேஷ்டி, வெள்ளைநிற
டை. தோளில் ஜரிகை போட்ட
யில் விபூதி பட்டை குங்குமம். காதில்
என்று அமர்க்களமாக நடந்து
னி.
வதைக் கண்டதும் வீட்டு வேலைக்
தலையில் கட்டி இருந்த துண்டை
கவரைத் துடைக்கிறான்.
த் துடை, பார்த்ததும் துடைக்காதே!
வண்ணிற ஆடை நிர்மலாவும், ஜெய்
ர்ந்திருக்கிறார்கள். ரஜினி வெ.ஆ.
கேட்கிறார். 'ஓ.. அத்தை, நீங்க எப்ப
தே?
தாம்மா.
ங்களைக் காட்டி) இவங்க யாரு?
ப்பா
க மாமாவா.
அவன் மாமா இல்லே உன் மாமா.
மாமாவா.. ஆமா.. அத்தை வரவா?
சொல்லி நிறுத்தினார் இயக்குநர்

## ஏ.ஆர். ரகுமான் பழைய பாணியில்

மணிரத்னத்தின் 'ஆனந்தம்' படம் 'இருவர்' என்று பெயர் மாற்றப்பட்டது சினிவிசிட் வாசகர்கள் அறிந்த செய்தி.

இருவர் படத்தின் கதையைப் போலவே பாடல்களையும் மிக இரகசியமாக வைத்திருக்கிறார் மணிரத்னம்.

ஆனாலும் படத்தின் கதை மெல்லக் கசிந்ததுபோலவே பாடல்களின் இரகசியமும் கசிந்துவிட்டது.

எட்டுப் பாடல்களுக்கு இசையமைத்துள்ளார் ஏ.ஆர்.ரகுமான். படத்தின் கதை 35 ஆண்டுகளுக்கு முற்பட்ட கதை. அதனால் பாடல்களையும் இசையையும் பழைய காலப் பாணியிலேயே அமைத்திருக்கிறார்கள்.

'நான் ஆயிரத்தில் ஒருவன்', 'சிறு மூகையே நகை மூகையே' போன்ற பாடல்களை எம்.ஜி.ஆரை நினைவூட்டும் பாத்திரத்துக்காக எழுதியுள்ளனர். ஜெயலலிதாவை நினைவூட்டும் பாத்திரத்திற்காக 'ஹலோ மிஸ்டர் எதிர்க்கட்சி', 'பூங்கொடியின் புன்னகை' ஆகிய போன்ற பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. பாடல்களை வைரமுத்து எழுதியிருக்கிறார்.

முக்காப்புலா ஸ்டைலில் கலக்கிய ஏ.ஆர்.ரகுமான் பழைய பாணியிலும் புகுந்து விளையாடியிருக்கிறாராம். எம்.எஸ். விஸ்வநாதன் பாணியையும் ஆங்காங்கே 'டச்' பண்ணியிருக்கிறாராம் ஏ.ஆர்.ரகுமான்.

## பனித்துளி சுடுமா?

தமிழ்ப் படவுலகில் பிரபலமாகிவரும் பாடலாசிரியர் பழனி பாரதி. 'நாட்டரசன் கோட்டை' படத்திற்காக பழனி பாரதி எழுதியுள்ள பாடல் ஒன்றின் ஆரம்பவரிகள் இவை:

தென்றல் தீலவிங்கு
நானா காண வருமோ?
பனித்துளி என்ன
ரோஜாவைச் சுடுமோ?
பாடலுக்கு இசை: தேவா.

# சினி விசிட்



ரோஜா படம்: வள்ளல்

## 'வளமான' பாடகர்

பிரபல கதாநாயகர்களை விட சத்தமில்லாமல் அதிகம் சம்பாதிப்பவர் யார் தெரியுமா? பின்னணிப் பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம்தான்.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி என்று பல மொழிப் படங்களில் பாடுகிறார். நடிக்கிறார். அது மட்டுமல்லாமல் படத் தயாரிப்பாளராகவும் இருக்கிறார்.


'அன்னை சண்முகி' படத்தில் தெலுங்கு டப்பிங் உரிமையை வாங்கியிருப்பதும் எஸ்.பி.பாலசுப்பிரமணியம்தான்.

சென்னையில் பாடல் பதிவு தியேட்டர் ஒன்று சொந்தமாக இருக்கிறது. பல பங்களாக்கள் இருக்கின்றன. சமீபத்தில் இந்திய மதிப்பில் 80 இலட்சம் ரூபாய்க்கு பென்ஸ் கார் ஒன்றையும் வாங்கியிருக்கிறார்.

## அப்பாகூடன் ரம்பா

சத்யராஜுடன் 'பகைவன்' படத்தில் அஜித்குமார் நடிக்கிறார். 'உன்னை விடமாட்டேன்' படத்தில் சத்யராஜுடன் அப்பாவாக நடிக்கிறார்.

இந்தியில் நானா படேகரும் ஜாக்கி ஷெராப்பும் இணைந்து நடித்த 'அக்னி சாட்சி' படக்கதைதான் தமிழில் 'உன்னை விடமாட்டேன்' படத்தின் கதை. நானா படேகர் நடித்த பாத்திரத்தில் சத்யராஜும், ஜாக்கி ஷெராப் நடித்த பாத்திரத்தில் அப்பாசும் நடிக்கின்றனர். சத்யராஜுக்கு ஜோடி கிடையாது. அப்பாசுக்கு ஜோடி ரம்பா.



## காமீதாடு சொல்லுகிறோம்

'ஆசை' படம் மூலம் அறிமுகமாகிய 'கவ...' நாயகியை கோகுலமான படத்தில் வழக்கமான ... அனுகினாராம் 'கார்' நடிகர். நடிகை சீறிவிட்டாராம். 'கோகுலமான' படம் வெளியாகி நன்றாக ஓடுவதால் அதே ... மீண்டும் ஒரு படத்தில் நடிக்கவைக்க அனுகினார்களாம். 'கார்' நடிகர் நடிகையை மாற்றினால்தான் ...ன் என்று சொல்லிவிட்டாராம்.

அழகிப் போட்டிக்கு தன்னையும் விசேஷ விருந்தினராக அழைப்பார்கள் என்று வழி மேல் விழி வைத்துக் ...திருந்தாராம் கஸ்தூரமான நடிகை. போட்டியை நடத்தியவர்கள் கடைசிவரை அழைக்கவேயில்லையாம். ...த்துப்போய் இருக்கிறார் கஸ்தூர நடிகை. 'மிஸ் மெட்ராஸ்' போட்டியில் முன்னர் வெற்றி பெற்றதைச் ...சொல்லி திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டியதுதான்.

'இந்தியன்' இயக்குநருக்கு தூதுவிட்டிருக்கிறார் அடிதடி நாயகியான சாந்தி. இயக்குநருக்கும் சாந்திமீது அபிமானமாம். அதனால் ஜீன்னை முடித்துவிட்டு சாந்தியை வைத்து ஒரு படம் செய்ய ...கே சொல்லிவிட்டாராம். பூரித்துப்போன சாந்தி இயக்குநரை அழைத்து விசேஷ நன்றி சொல்லி அனுப்பினாராம்.

புது நடிகை ஒருவர் 'மீன்' நடிகையை அக்கா என்றழைத்தாராம். அவ்வளவுதான் 'மீன்' நடிகையின் தாய்க்குலத்திற்கு வந்ததே கோபம். வாய்க்கு வந்தபடி ஒரு கிழி கிழித்துவிட்டாராம் அந்தப் புது நடிகையை. விஷயம் அறிந்த நடிகைகள் தாய்க்குலம் முன்பாக 'மீன்' நடிகையுடன் பேசவே பயப்படுகிறார்களாம்.



சக்தி-ஒவியா படம்: மனக்...

### முகப்பில்

பிரசாந்த்
ரோஷினி
படம்:- சிஷ்யா



கார்த்திக்-சுவலட்சுமி
படம்: கோகுலத்தில் சீதை

## சுவலட்சுமியின் பதில்கள்
## 143 சொன்னால் என்ன செய்வார்?

'ஆசை' படத்தில் அறிமுகமாகி இப்போது 'கோகுலத்தில் சீதை' படம் மூலமும் ரசிகர்களின் மனதில் சிம்மாசனம் தேடிக்கொண்டவர் சுவலட்சுமி. அவரிடம் கேட்கப்பட்ட சில கேள்விகளுக்கு அவர் சொன்ன பதில்கள்.

**கே: 'ஆசை' நாயகன் அஜித்குமார் எப்படிப்பட்டவர்? நல்லவரா? கெட்டவரா?**

ப: இந்தக் கேள்வியை ஏன் என்னிடம் கேட்கிறீர்கள்? நான் அவரை ஒரு நடிகராகவும், அவர் என்னை ஒரு நடிகையாகவும் மட்டுமே பார்த்திருக்கிறோம்.

**கே: நீங்களும் தேவயானியும் அக்கா, தங்கை போல் இருக்கிறீர்களே?**

ப: ரொம்பச் சந்தோசம்! இருவருமே குடும்பப் பாங்கான வேடங்களில் நடிப்பதால் அப்படித் தெரியலாம்.

**கே: அன்புக்கும், காதலுக்கும் இடையே உள்ள வித்தியாசம் என்ன?**

ப: பெரிய வித்தியாசம் ஒன்றும் கிடையாது.

**கே: உங்களை திடீரென்று 70 வயது தாத்தா ஒருவர் கட்டியணைத்து முத்தம் தந்தால் என்ன செய்வீர்கள்?**

ப: 'தாங்ஸ்' தாத்தா என்று சொல்லுவேன்.

**கே: உங்களிடம் '143' சொன்னால் என்ன சொல்வீர்கள்?**

ப: நன்றி சொல்வேன். ரசிகர்களின் அன்பை நான் இழக்க விரும்பவில்லை.

**கே: உங்களுக்குப் பிடித்த உடை எது?**

ப: 'கோகுலத்தில் சீதை' பாருங்கள் தெரியும்.

**கே: 'கல்கி' படத்தில் 'தொட்டுக்க ஊறுகாய்' மாதிரி வந்து போகிறீர்களே, ஏன்?**

ப: தமிழில் பிரபல இயக்குநர் மதிப்புக்குரிய பாலச்சந்தர் கேட்டுக்கொண்டதற்காக அப்படி நடித்தேன். இனிமேல் அப்படித் தோன்ற மாட்டேன்.

கே: உங்கள் முகவரி?

ப: சுவலட்சுமி -
நீலகிரி அப்பார்ட்மெண்ட்,
மயிலாப்பூர், சென்னை-04.

## 'காதல் மன்னன்'

நடிகர்களில 'காதல் மன்னன்' என்று அழைக்கப்பட்டவர் ஜெமினி கணேசன். 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஜெமினி கணேசனின் பட்டமாக இருந்த 'காதல் மன்னன்' இப்போது ஒரு திரைப்படத்தின் பெயராக சூட்டப்பட்டுள்ளது.

'காதல் மன்னன்' படத்தின் கதாநாயகன் யார் தெரியுமா? அஜித்குமார். அவருக்கு ஜோடியாக புதுமுகம் ஒருவரை நடிக்கவைக்கப் போகிறார்கள்.

கே.பாலசந்தரின் உதவியாளரான சரண் முதன் முதலாக இயக்கப்போகிறார். கதை, திரைக்கதை, வசனமும் அவர்தான்.

இசையமைப்பாளரும் புதியவர்தானாம். பாடல்கள்: வைரமுத்து.

மோட்டார் சைக்கிள் மெக்கானிக் வேடத்தில் தோன்றப்போகிறார் அஜித்குமார். காதல் விவகாரங்களில் கைதேர்ந்தவரான அஜித்குமாரை காதல் கதைப் படங்கள்தான் தேடிப்போகின்றன.

## குஷ்பு அண்ணி

ரஜினி ரசிகர்கள் குஷ்புவை அண்ணி என்று கூப்பிடுகிறார்களாம். இதென்ன புது வம்பு? என்று நினைக்கவேண்டாம்.

'அருணாச்சலம்' படத்தை இயக்கும் சி.சுந்தர் எங்களுக்கு அண்ணன் என்றால் நீங்கள் அண்ணிதானே என்று பாசமழை பொழிகிறார்களாம்.

# ஆடைகளைப் பாதுகாக்க....

ஆடைகளைத் துவைப்பதற்கு முன் குறைந்தது அரைமணி நேரமாவது சலவைத் தூளை நீரில் கலந்து அல்லது சோப்புப் போட்டு ஊறவைக்க வேண்டும். வெள்ளை ஆடை களைத் தனியாக வெந்நீரிலும் வர்ண ஆடை களைக் குளிர்ந்த நீரிலும் ஊறவைப்பது நல்லது.

வர்ண ஆடைகளை எக்காரணத்தைக் கொண்டும் கடும் வெய்யிலில் உலர்த்தக் கூடாது. ஏனெனில் வர்ண ஆடைகள் வெளிறிப் போகும்.

ஆடைகள் சாயம் போகும் என்ற பயம் இருந்தால், அதை முதலில் உப்புக் கலந்த நீரில் நனைத்துப் பின்னர் துவைத்தால் சாயம் போகாது.

பட்டுத்துணிகளை நாம் வீட்டிலேயே துவைத்துக் கொள்ளலாம். நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும் பூந்திக் கொட்டையை தண்ணீரில் ஊறவைத்துக் கலந்து, அக் கலவையில் பட்டுத் துணிகளைத் துவைத்து, சிறிது எலுமிச்சைச் சாறு கலந்து குளிர்ந்த நீரில் அலசினால், பட்டுத் துணி பளபள வென்று மின்னும்.

ஆடைகள் சாயம் போகுமா? என்பதை அறிய ஒரு எளிய வழி. ஆடையின் உட்புறத்தில் ஒரு பகுதியை மட்டும் நனைத்து அதன் மேல் ஒரு உபயோகித்த வெள்ளைத் துணியை வைத்துத் தேய்த்துப் பார்த்தால், ஆடை சாயம் போகுமா இல்லையா? என்பது தெரிந்துவிடும். பின்னர் அதற்குத் தகுந்தாற் போல ஆடையைத் துவைத்துக் கொள்ளலாம்.

வெள்ளைத் துணிகளுக்கு 15 நாட்களுக்கு ஒரு முறையாவது நீலம் போட்டுத் துவைக்க வேண்டும்.

எண்ணெய்ப் பசையுள்ள அழுக்குத் துணிகளைத் தூய்மையாக்க ஒரு சிறந்த வழி- சலவைத் தூளை தண்ணீரில் கலந்து



வைத்து கொதிக்க வைக்கவும்; பின்னர் சிறிது சலவைச் சோடாவைக் கலந்து அழுக்குத் துணிகளை போட்டு மறுபடி அரைமணி நேரம் கொதிக்க வைத்து துணிகளை எடுத்துக் கசக்கித் துவைத்தால் பளிச்...பளிச்.

வியர்வைத் துணிகளை உடனுக்குடன் துவைத்துவிட வேண்டும். அல்லது உடனே குளிர்ந்த நீரில் நனைத்துப் பிழிந்து உலர்த்தினால் வியர்வையினால் ஏற்படும் மஞ்சள் நிறக்கறை தோன்றாது.

ஈரத்துணிகளைக் காயவைக்க பிளாஸ்டிக்கிலான ஹங்கர்களையே பயன்படுத்த வேண்டும். மரத்தினால் செய்யப்பட்ட வற்றைப் பயன்படுத்தினால் துணிகளின் மேல் கறையை ஏற்படுத்திவிடும்.

வெண்பட்டு அல்லது நைலோன் துணிகளை வெய்யிலில் காயப் போட்டால் பழுப்பு நிறமாகிவிடும். எனவே அவற்றை நிழலில் உலர்த்தவும்

வெண்ணிற ஆடைகளைச் சிறிது பழுப்பு நிறமாக்க வேண்டுமா? கொஞ்சம் தேயிலை சாயத்தை தண்ணீரில் கலந்து அதில் துணிகளை ஊறவைத்து எடுத்தால் வெள்ளைத் துணி பழுப்பு நிறமாகிவிடும்.

அயர்ண் (இஸ்திரி) பண்ணுவதற்கு சரியான மேசை இல்லையென்றால் பழைய கம்பளி விரிப்புக்களை மடித்து வைத்துக் கொண்டு அயர்ண் பண்ணலாம்.

ரெயோன் போன்ற துணிகளை அயர்ண் பண்ணும்போது அதில் தண்ணீர் தெளிக்கக் கூடாது. ஏனெனில் தண்ணீர்க் கறை ஆடைகளில் தங்கிவிடும்.

பூவேலை (எம்ப்ரோய்டரி) செய்யப் பட்டுள்ள துணிகளை உட்புறமாக அயர்ண் பண்ணினால் அவற்றின் பளபளப்பு மங்காது.

துணிகளைக் காயப்போடுவதற்கு நைலோன் கயிற்றை வாங்கியவுடன் சிறிது சோப்பு நீரில் கொதிக்க விட்டால் அதன் ஆயுள் நீடிக்கும்.

# பெண்களைத் தாக்கும் நோய்கள்

இன்றைய பரபரப்பான சூழ்நிலையில் பொதுவாகப் பெண்களைத் தாக்கும் நோய்களையும், அவற்றினைத்தவிர்க்கும் முறைகளைப் பற்றியும் சில ஆலோசனைகள் இதோ:

**நாள்தோறும் தலைவலி**

குடும்பத் தலைவியானாலும் சரி வேலைக்குச் செல்லும் பெண்களானாலும் சரி நூற்றுக்குத் தொண்ணூறு சதவீதம் எதிர்நோக்கும் பிரச்சனை நாள்தோறும் தலைவலி.

இந்தத் தலைவலி எதனால் உண்டாகிறது? என்பதை முதலில் அறிந்து கொள்ளுங்கள்.

பரபரப்பான சூழ்நிலையில் தொடர்ச்சியான வேலை, இதனால் உண்டாகும் மன அழுத்தம், வேளை தவறி உணவருந்துதல் ஆகியவைதான் தலைவலி உண்டாவதற்கு முக்கிய காரணம்.

இதற்கு மருந்து, மாத்திரைகளால் மட்டும் சிகிச்சை அளிக்க முடியாது. பெண்கள் தங்களது வேலைப்பளுவைக் குறைத்துக்



கொண்டு, வாழ்க்கை முறையை மாற்றியமைப்பதே இதற்கான நிரந்தரத் தீர்வாகும்.

திருமணமான பெண்களுக்கு வெள்ளை படுவதினாலும் தொடர்ச்சியான தலைவலி உண்டாகின்றது. இதற்குத் தகுந்த விட்டமின் மாத்திரைகளை உட்கொள்வதன் மூலம் தலைவலியில் இருந்து தப்பிக்கலாம்.

**குதிக்கால் உயர செருப்பு அணியலாமா?**

இன்றைய நாகரிக உலகில் குட்டையான பெண்களும், உயரமான பெண்களும் குதிக்கால் உயர செருப்பு அணிவதை நாகரிகமாகக் கருதுகின்றனர். குதிக்கால் உயர செருப்பு அணிவதால் உண்டாகும் ஆபத்தை அவர்கள் அறிவதில்லை. இவ்வகை செருப்புக்களினால் முதுகுவலி, கழுத்துவலி, கணுக்கால் வலி போன்றவை ஏற்படுகின்றன.

குறிப்பாகக் கர்ப்பமாக இருக்கும் பெண்கள் இந்த வகைச் செருப்புக்கள் அணிவதால் இடுப்பு, கால்பகுதியில் சுளுக்கு போன்றவை உண்டாகின்றன. தொடர்ச்சியாகக் குதிக்கால் உயர செருப்பு அணியும் பெண்கள் 45 வயதைத் தாண்டியவுடன் நிரந்தர கணுக்கால், முதுகு, முழங்கால் வலியைப் பெறுகின்றனர்.

எனவே பின்னால் ஏற்படும் பக்க விளைவுகளை மனதில் கருதி பெண்கள் இந்த வகையான செருப்புக்கள் அணிவதைத் தவிர்க்க வேண்டும்.

# வாரம் ஒரு இயற்கை வைத்தியம்

## எலுமிச்சை இருக்க நோய் எதற்கு?

பெரும்பாலும் கடற்பயணம் செய்பவர்களுக்கு ஸ்கேவி நோய் ஏற்படும். இந்நோய்க்கு இலக்கானவர்கள் உயிர் பிழைப்பது மிகவும் கடினம் என்ற நிலை முன்பிருந்தது. இந்த நோய்க்கு மருந்தே கிடையாது என்ற கருத்தும் ஒரு காலத்தில் நிலவி வந்தது.

நீண்டகால மருத்துவ ஆராய்ச்சிக்குப்பின் ஸ்கேவி நோய்க்கு மிகவும் சரியான மருந்து எலுமிச்சம்பழம்தான் என்ற உண்மை கண்டு பிடிக்கப்பட்டது.

இப்போது கடற்பயணம் செய்வோர் பலவகையிலும் எலுமிச்சம்பழத்தைப் பயன் படுத்தி ஸ்கேவி நோயின் பாதிப்புக்கு இலக்காகாமல் நிம்மதியாக இருக்கிறார்கள்.

தற்போது கடற்பயணம் செய்வோர் நீண்டகாலம் கெடாதவாறு பக்குவம் செய்யப் பட்ட எலுமிச்சம்பழச்சாறு, எலுமிச்சம்பழம் மூலம் செய்யப்பட்ட உணவுப் பொருட்களையும் பயணம் செய்யும்போது எடுத்துச் செல்கிறார்கள்.

கடற்பிரயாணம் செய்யத் திட்டமிடுவோர் சில மாதங்களுக்கு முன்பிருந்தே தொடர்ந்து எலுமிச்சம்பழத்தை ஏதாவது ஒரு வகையில் தினசரி உணவில் சேர்த்து உடலைத் தயார் நிலையில் வைத்திருக்கவேண்டும் என்று பிரிட்டனில் ஒரு பழக்கமே நடைமுறையில் இருக்கிறது.

அதிக இரத்த அழுத்தத்திற்கு ஒரு குவளை மோரில் ஒரு எலுமிச்சம்பழத்தைப் பிழிந்து, நாள்தோறும் அருந்த வேண்டும்.



தொடர்ந்து எட்டுநாட்கள் அருந்தினால் நல்ல குணம் தெரியும்.

**மூலநோய்:**

எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து சாற்றை 1/4லீட்டர் பசும்பாலில் கலந்து குடித்து விட்டால் மூலநோயின் கடுப்பு வலி குறையும். விரைவில் முழுமையாக நின்றுவிடும்.

**முடக்குவாதம்:**

கை கால்களை மடக்க முடியாமல் கஷ்டப்படும் முடக்குவாத நோயாளிகள் எலுமிச்சம்பழத்தைப் பின்வரும் முறைகளில் பயன்படுத்துவதன் மூலம் முழுக்குணம் பெறமுடியும்:

★ எலுமிச்சம்பழச்சாற்றைத் தண்ணீரில் கலந்து தினமும் மூன்று தடவை குடிக்க வேண்டும்.

★ 20 முந்திரிகை வற்றல்களை இரவில் எலுமிச்சம் பழச்சாற்றில் ஊறப்போட்டுக் காலையில் எழுந்தவுடன் பழங்களை நன்றாகப் பிசைந்து கரைத்து அருந்தவேண்டும்.

★ வலி ஏற்படுகின்ற இடங்களில் எலுமிச்சம்பழச்சாற்றை நன்றாகத் தேய்த்து விட வேண்டும்.

★ எலுமிச்சம் பழச்சாற்றில் சுத்தமான மெல்லிய துணியை நனைத்து வலியுள்ள இடங்களில் பற்றுப் போல போட்டு வெய்யில் படும்படியாக பாதிக்கப்பட்ட உறுப்பைச் சிறிது நேரம் வைக்கவேண்டும்.

நாள்தோறும் இவ்வாறு செய்து வந்தால் படிப்படியாக முடக்குவாதம் குணமாகி விடும்.

**முகத்தில் பருக்கள்:**

முகத்தில் பருக்கள் ஏற்பட்டிருந்தால் நாள்தோறும் அதிகாலையில் ஒரு எலுமிச்சம் பழத்தை தண்ணீர் அல்லது வெந்நீரில் பிழிந்து குடித்து வந்தால் முகப்பருக்கள் முற்றிலுமாக அகன்று முகம் அழகும், வளர்ச்சியும் அடையும்.

சிலருக்கு முகப்பருக்கள் புண்ணாக மாறியிருக்கும். இதனை உடனடியாகக் குணமாக்காவிட்டால் புண் பெரிதாகி விரைவில் ஆறாமல் தொல்லை கொடுக்கும். ஆறிவிட்டாலும் முகத்தில் பெரிய தழும்புகள் ஏற்பட்டு முகம் விகாரமாகிவிடும்.

எலுமிச்சம்பழத்தின் சாற்றைப் பசுநெய் அல்லது கிளிசரினுடன் கலந்து, தொடர்ந்து புண்மீது தடவிவந்தால் புண்ணாகிவிட்ட முகப்பரு ஆறிவிடும். தழும்பு கூடத் தெரியாது.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** AV

பெயர்:.............................

முகவரி:.............................

.............................

கையொப்பம்:.............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 28-12-1996**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? கொழும்பு வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான். | **திருமதி தவேஸ்வரி நல்லலிங்கம்**<br>38, பெனடிக்ற் மாவத்தை, கொட்டாஞ்சேனை, கொழு-13. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


# லேடீஸ் ஸ்பெஷல்

## விடுமுறையும் குழந்தைகளும்

### பெற்றோரின் கடமை

குழந்தைகள் பெற்றோரிடம் எதிர் பார்ப்பது என்ன தெரியுமோ? விடுமுறை நாட்களில் அவர்களை, அவர்களின் இஷ்டப் படி இருக்க விடுவதைத்தான்.

பாடசாலை விடுமுறை நாட்களில்கூட ரியூஷன் வகுப்புக்கள், வீட்டுப்பாடங்கள்; அதுவும் இல்லை என்றால் ஏதாவது பாட சாலை வேலை என்று நிறைய இருக்கின்றன. குழந்தைகளுக்கு லீவு நாட்கள் என்றால் கொண்டாட்டம்தான். அதை அனுபவிக்கவிடாமல் பெற்றோர்கள் 'தொணதொண'ப்பார்கள்.

"லீவு ஏண்டா விடுகிறார்கள் என்றிருக்கிறது. இதுங்க தொல்லை தாங்க முடியவில்லை. எப்பபார்த்தாலும் விளையாட்டு. அதைச் செய் இதைச் செய் என்று நச்சரிப்பு. பள்ளிக் கூடம் தொடங்கும்போதுதான் ஹோம் வேர்க் நினைப்பு வருது. இவங்களை என்ன செய்யுறதின்னே தெரியவில்லை," என்று பக்கத்து வீட்டுக்காரியுடன் அங்கலாய்ப்பார்கள்.

சில பெற்றோர்கள் குழந்தைகளுக்கு லீவு என்றால் வீட்டிற்குள்ளேயே முடக்கி வைத்து ஓயாமல் படிக்கச் சொல்வார்கள்.

இந்த இரண்டு விதமான பெற்றோர்களாக இல்லாமல் நீங்கள் கொஞ்சம் வித்தியாசமானவராக இருங்களேன்!

"ஷைலஜா, இன்றைக்கு உனக்கு ஸ்கூல் லீவு இல்லையா? நீ நன்றாக நித்திரை கொண்டு, உன் விருப்பப்படி எழுந்து, ரீ.வி. பார்த்து, பக்கத்து வீட்டு மைதிலியுடன் விளையாடலாம்," என்று சொல்லுங்கள்.

உங்கள் மகளின் முகத்தில் ஆனந்தம் கூத்தாடும்.

"நல்ல அம்மா" என்று கட்டிக்கொள்வாள்.

காலையில் யாரும் எழுப்பாமலே எழுந்து கொள்வாள். விளையாடப் போவாள். குளிப்பாள், சாப்பிடுவாள்.

யாரும் எதையும் தட்டிக் கேட்காமல், கட்டுப்படுத்தாமல் இருந்தால் சுதந்திரத்தை குழந்தைகள் விரும்பி அனுபவிப்பார்கள்.

"அம்மா இன்றைக்கு ஒரே ஜொலிதான். இனி ஹோம்வேர்க்கை செய்து முடித்து விட்டுத்தான் நித்திரை கொள்ள வேண்டும்!" என்று அவர்களாகவே படிக்க ஆரம்பிப்பார்கள்.

மணிக்கணக்காகப் போராடினாலும் செய்யாத வேலைகளை அரைமணி நேரத்தில் செய்து முடித்துவிடுவார்கள். இந்த வேலைகளை அவர்கள் எப்படி எளிதாகச் செய்ய முடிந்தது என்று பெற்றோர்கள் சற்றுச் சிந்திக்க வேண்டும்.

காலை முதல் அவர்கள் மனதில் இருந்த விடுதலை உணர்வுகள் சந்தோஷ உணர்வுகளாகி, அவர்களுக்குப் புத்துணர்ச்சியும், சுறுசுறுப்பும் அளித்தன.

இந்த மனோதத்துவ அடிப்படையைக் கொண்டுதான் வெளிநாட்டினர் ஐந்து நாட்கள் அயராத வேலைக்குப் பின்பு



இரண்டு நாட்கள் உற்சாகமான ஓய்வை விரும்புகிறார்கள். 'ரிலாக்ஸ்' செய்து கொள்வதன் மூலம் உடம்பும், மனமும் நல்ல நிலையை அடைகின்றன.

ஆக, பெற்றோர்கள் குழந்தைகளுக்கு வாரத்தில் வரும் பள்ளி விடுமுறை நாட்களில் அவர்களை தாம் விரும்புவது போல ரிலாக்ஸ் செய்து கொள்ள அனுமதிக்கவேண்டும்.

அவர்களை வெளியிடங்களுக்குக் கூட்டிக் கொண்டும் போகலாம்.

குழந்தைகளின் மனவளர்ச்சி ஆரோக்கியமானதாக இருக்க, இவையெல்லாம் மிகவும் அவசியமானவையாகும். நீங்கள் குழந்தைகளை ஆரோக்கியமானவர்களாக வளர்த்தால், பெரியவர்களாகும்போதும் அவர்களின் மன நிலை நல்ல முறையில் அமைவதைக் காணலாம்.

ஒருவர் தன்னுடைய குழந்தையைக் காலையில் எழுப்பும்போது,

"காலை வணக்கம். இன்றைய பொழுது இனியதாகட்டும்!" என்று கூறுகிறார். அந்தக் குழந்தையினுள் பொழுது புலரும் பொழுதே புதிய நம்பிக்கைகளை இந்த இனிய வார்த்தைகள் ஏற்படுத்துகின்றன.

"சரியான கும்பகர்ணன். இன்னும் நித்திரை கொள்ளுறதைப் பாரேன் சனியன். இதை எழுப்பி எழுப்பி என் தொண்டைத் தண்ணியே வற்றிப்போகுது," என்று பூபாளம் பாடினால் குழந்தைகளின் மன ஆரோக்கியம் எப்படி இருக்கும்?

இதுநாள் வரை எப்படியோ; இனி மேலாவது இப்படிச் சொல்லிப் பார்க்கலாம் அல்லவா?

# சமைப்போம் சுவைப்போம்

**தொகுத்துத் தருவது சுகந்தினி**

## கரட் ஸ்பொஞ்ச்

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| கரட்- | 250 கிராம். |
| கோதுமை மாவு- | 1 கப் |
| ஆட்டாமாவு- | 1 கப் |
| அப்பச் சோடா- | 1 தேக்கரண்டி |
| ஏலக்காய்தூள்- | 1/4 தேக்கரண்டி |
| தேன்- | 1/4 கப் |
| பால்- | 1/2 கப் |
| மார்ஜரீன்- | 1 கப் |
| வெல்லத்தூள்- | 1 கப் |

**செய்முறை:**

கரட்டைக் கழுவி, துருவிக்கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் தேன், பால், வெல்லத் தூள், மார்ஜரீன் போட்டுக் கலந்து மிதமான தீயில் வைத்துக் கிளறவும். வெல்லம் கரைந்ததும் அடுப்பிலிருந்து இறக்கி குளிர வைக்கவும்.

பிறகு அதில் கரட் துருவல், கோதுமை மாவு, ஆட்டாமாவு, அப்பச் சோடா, ஏலக்காய்த்தூள் ஆகியவற்றை ஒவ்வொன்றாகப் போட்டு மெதுவாகக் கலக்கவும். வேறொரு பாத்திரத்தில் மார்ஜரீன் தடவி அதில் இந்த மாவுக்கலவையை பரவலாகப் போட்டு மேலே ஒரு தட்டுப்போட்டு மூடி, இட்லிப் பானையில் வைத்து ஆவியில் வேகவிடவும். கரட் ஸ்பொஞ்ச் சாப்பிட மிருதுவாகவும், உருசியாகவும் இருக்கும்.

# தேனில் கலப்படம்

மருந்திற்காக நாம் தேனை வாங்குகிறோம். அநேகமான தேன்கள் கலப்படமாகத்தான் இருக்கின்றது. தேனில் சர்க்கரை நீரைக் கலந்து விற்பனை செய்கிறார்கள்.

தேன் சுத்தமாக, கலப்படமில்லாமல் இருக்கிறதா என்று கண்டறிய வேண்டுமா?

தேனில் தீக்குச்சி ஒன்றை தோய்த்து பின்பு தீக்குச்சியை உரசிப் பாருங்கள் தீக்குச்சி எரிந்தால் அது சுத்தமான தேன்தான். இன்னொரு வழியும் இருக்கிறது. ஒரு கடதாசியில் ஒரு துளி தேனை ஊற்றிப் பாருங்கள். அது கடதாசியில் ஊறினால் அது கலப்படமான தேனாகும். நல்ல சுத்தமான தேன் கடதாசியில் ஊறாது.

# பலகாரம் பதமாக

நல்லெண்ணையை வைத்துப் பலகாரம் செய்யும் பொழுது, எவ்வளவு எச்சரிக்கையாக இருந்தாலும் பொங்கிவிடுவதுண்டு.

இதனால் பலகாரம் வெந்துவிட்டதா அல்லது வேகவில்லையா என்று தெரியாது. இதற்கு, எண்ணெய் கொதித்தவுடன் சிறிய வாழைப்பழத்தோல் எண்ணெயில் போட்டுப் பொரியுங்கள்.

பின் வாழைப்பழத்தோல் நன்றாகப் பொரிந்ததும், தோலை எடுத்து எறிந்து விட்டுப் பலகாரம் செய்தால் எண்ணெய் பொங்கவே பொங்காது.

## தடை செய்யப்பட்ட கனி...!

1948-02.04
♠♠
பாடமாக்கி வைத்துக்கொள்!
இந்தத் திகதியை-
பரீட்சைக்கு உதவும்...!
♠♠
அன்று என்ன நடந்தது?
நம் நாட்டுக்கு
'சுதந்திரம்' கிடைத்ததாம்!
♠♠
நம் நாட்டுக்கென்றால்....?
நமக்கு...?
♠♠
அதற்கு முன்
சுதந்திரம் இருக்கவில்லையா...?
♠♠
இல்லையாம்;
நாம் எல்லாம்
'வெள்ளைக்கார'ரின் அடிமைகளாய்
வியர்வை சிந்தி உழைத்தோமாம்...!
♠♠
வியர்வைதானே சிந்தினோம்;
இரத்தம் இல்லையே...?
உண்மைதான்...!
♠♠
'சுதந்திரம்'-
யார் வாங்கித் தந்தார்கள்....?
♠♠
'அவர்க'ளிடமிருந்து
'இவர்கள்'
வாங்கிக் கொண்டார்கள்...!
♠♠
'சுதந்திரம்' என்றால்...?
♠♠
இது-
தடை செய்யப்பட்ட கேள்வி....!
♠♠
அப்படியென்றால்...?
♠♠
'சுதந்திரம்'-
உன்னிடமும் இருக்கிறது;
உனக்குத் தெரியாமல்,
உன்னுள்ளேயே 'சிறிதாய்...!'
♠♠
ஆனாலும்
நீ அதை அனுபவிக்க முடியாது;
ஏனெனில்-
அது தடை செய்யப்பட்ட கனி...!
♠♠

சிந்தனைப்பித்தன்.

## வாழ்வதற்கு ஆசை

கனாக்களற்ற
என், உறக்கத்தில்
இப்போ
கனாக்களையே,
அறுவடை செய்கிறேன்
நீ
போட்ட-காதல்
விதைகளால்!
***
உணர்வுகள்
மழுங்கிய -என்
உடலும்!
மெல்ல...
சிலிர்த்து கொள்கிறது-உன்
காதல் எனும்
ஸ்பரிசத்தால்.....!
***
இதுவரை-என்
இருண்டதான
வாழ்க்கையிலும்-இன்று
மெல்ல...
தெரிகிறது-உன்
முகம் எனும்
விடிவெள்ளி!
***
அர்த்தமற்ற
பொழுதுகளாக
காலாவதி ஆகிய
நாட்களை எண்ணி
கவலை கொள்கிறேன்;
உன்
உறவின் பின்.
***
உன்
உறவுகள் தரும்
உந்துதலால்-என்
பேனையின்
மையும்
விரைவாக
முடிவடைகிறது....
காதல் மடல் எழுதி.
***
இது வரை
என்
பிடிப்பற்ற
வாழ்க்கையையும்
தூசி தட்டி
சுத்தம் செய்கிறேன்;
நிரந்தரமாக,- உன்
உறவு எனும்
சாயம் பூசி
மகிழ்வதற்கு....!

உன்னவன்- வட்டவளை.

## அந்த நாள் ஞாபகம்



↑ 'ஏசுநாதர்' மேக்கப்பில் எம்.ஜி.ஆர். அருகில் கலைஞர் கருணாநிதி. நத்தார் தினத்திற்கு முதல் நாள்தான் எம்.ஜி.ஆர். மரணமானார்.



→ அந்த அழகான நவ நாகரீகப் பெண்மீது கண்போட்டு விடாதீர்கள். என்ன கண்டு பிடித்து விட்டீர்களா? எம்.ஜி.ஆரேதான். 'காதல் வாகனம்' படத்தில் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, அசோகன்.

↓ பேரறிஞர் அண்ணாவை வழியனுப்பி வைக்கிறார் மக்கள் திலகம். கண்ணாடி, தொப்பி, மேக்கப் இல்லாத எம்.ஜி.ஆர். அழகுதான்.



## ஊமைக் காதல்

வினாடிகளிலும் வேகமாக
சத்தமிட்டு துடிக்கும்
என் ஹிருதயத்துக்கு
தரிசாய் கிடப்பதற்கு
விருப்பமே கிடையாது.
-0-
உன்னைக் காண்பதை
நோக்காக கொண்டு
காத வழி தூரம் கடந்து,
நடந்து சலித்திருக்கும்
பாதங்களுடன் மனதும்.
-0-
உன்னைக் கண்ட பின்பு..
விளை நிலம் போல
மாற்றமானது ஹிருதயம்.
முளை விடத் தொடங்கியது,
உன் மீதான காதல்.
-0-
என் வினாக்களெல்லாம்
விடை பெற்றது மௌனமே!
ஊமையாகவாவது நீ..
பிறந்திருக்கலாம்;
மௌனம் சிறந்ததாகயிருக்கும்.
-0-
சில நிமிடங்களிலான
உன் சந்திப்புக்களெல்லாம்,
என் வாலிப வனாந்தரத்தில்
முற்றுப் பெற முன்னரே
விடுகதையாய் போவதா!
-0-
வார்த்தைகளுக்கு பஞ்சம்..
வளங்கொழிக்கும் தமிழிலா
வஞ்சனை செய்யாதே! ஒரே ஒரு..
வார்த்தை பேசு-! உனக்காக..
ஒரு ஜீவன் சுவாசிக்கும்.
-0-
உன் நினைவுகளையும்
என் கவிதைகளையும்
கருக்கலைப்பு செய்ய
கட்டாயப்படுத்தாதே!
பேசு கண்மணி பேசு...!
-0-

என்.சஹாப்தீன்-ஒட்டமாவடி.

## மறக்கமுடியாத ஞாபகங்கள்

என் பிஞ்சு விரல்களால்
அளைந்து ஒழுகிய
என் தேசத்து மண்ணை
எண்ணி எண்ணியே
என்
வினாடிகள்
கருகியழிகின்றன!
**
அரிச்சுவடிகள் கூட
வெட்டியழித்துப்
புதைக்கப்படும்
இக்காலத்தின் கொடூரத்தில்
இருந்து
நான் சாக வேண்டும்!
வாழ்தலில் என்ன
மிச்சம்?
**
என் மழலை மொழி
வீச்சில்
ஓங்கி அலையடித்த
முத்தையன்கட்டு
வாய்க்காலும்
அந்தக் குருவிச்சை ஆற்றின்
தீரமும்......
இன்னும் "கனகாம்பரம்"
பூத்தா இருக்கும்?
**
அமைதிப் படைக்கால
அன்னியப் படுத்தலில்
குடும்பம் மீதான
என்பிரிவு
நீளும் கொடூரம்!
யார் இந்த
முகாமில் என்னைச்
சேர்த்தது?
**
பூவரச இலை இணுங்கி
மேரியும் நானும்
ஊதுகுழல் ஊர்வலம்
போனது
இன்றும் நேற்றும் போல
மறக்க முடியவில்லை!
**
அன்னியோன்யம்
தவிர்ந்த
அன்னியப் படுத்தலில்
எல்லாம் சிதறுப்பட்டு
இன்னும் எத்தனை
காலங்கள்
என் 'தேக்கடி வயலை'ப்
பிரிந்து கொண்டு
அலைவது?
**
வெங்காய வயல்
இடுக்கில்
ஆழமான துலாக்
கிணற்றில்
நீர் இறைப்பதும்
மகிழ்ந்து
விதைப்பதும்.....
**
என் பிஞ்சு விரல்கள்
அளைந்து ஒழுகிய
என் பூமி மாதாவை
எப்போது தான் நான்
கண்ணாரக் காண்பதும்...
அள்ளி மகிழ்வதும்...?
வாழ்ந்து இனிப்பதும்...?

மானுடபுத்ரன்.

## தேன் கிண்ணம்

### வடக்கில்...!

பொது மக்கள்
அகதி முகாம்களில்!
அரசாங்கம்--
இராணுவ முகாமில்!

### 'சமாதானம்'

பரபரப்பான
விளம்பரங்களுடன்
தயாராகியும்-
'திரை'க்கு வராத
திரைப்படம்!

### 'தமிழ்!'

புல்லு வெட்டும்
எனக்கு
'புலி'த் தோல்
போர்த்திடும் தாய்!

கோவுஸ்ஸ-ராம்ஜீ, எல்ல.

## வேண்டாம்.....

வாருங்கள்...
♠♠
இலங்கையை யார்
முழுதாய் பார்த்தவர்
கூறுங்கள்!
♠♠
சின்னப் பெண்ணின்
குறும்பு துள்ளலாய்
அலையின் ஓசை.
♠♠
நெளிந்து வளைந்து
ஓடும்
ஆறின் நளினம்
♠♠
ஓங்கி வளர்ந்த
பனையின்
சிறப்பு-இனிக்கும்
நீரின் நிலைப்பு.
♠♠
பாடித் திரியும்
மீனின் மிதப்பு
தேனின் இனிப்பு.
♠♠
வெம்மை கலந்த
நீரின் கதப்பு
இராவணன் சிறப்பு.
♠♠
நீண்டு தொடரும்
மலையின் வனப்பு
மரங்களின் சிறப்பு-
♠♠
இப்படி பலப்பல
பார்த்ததுண்டா நீ?
♠♠
பார்க்காவிட்டால்
வா
♠♠
இங்கு
♠♠
போரைத் தவிர
அனைத்தும்
அழகுதான்
வா.

சுபா வரதன், கண்டி.

## இந்த வாரம் உங்கள் பலன்

(22.12.96 தொடக்கம் 28.12.96 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | |
|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, பலவித பேறு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- கௌரவக் குறைவு, மனக்கலக்கம். | பி.ப. 2 மணி |
| புதன்- காரியசித்தி, பயனுள்ள செயல். | பி.ப. 3 மணி |
| வியாழன்- தொழில் மந்தம், அந்நியர் சகவாசம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, செலவதிகம். | பி.ப. 12 மணி |
| சனி- உறவினர் தொல்லை, பெருள் நட்டம். | மு.ப. 9 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் நஷ்டம், மனக் கவலை. | பி.ப. 4 மணி |
| திங்கள்- இனசன நன்மை, காரியசித்தி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், பொருள் வரவு. | பகல் 12 மணி |
| புதன்- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பி.ப. 3 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், உயர்ந்த வாழ்க்கை. | பகல் 12 மணி |
| வெள்ளி- காரியசித்தி, கௌரவக் குறைவு. | பி.ப. 2 மணி |
| சனி- தொழில் நஷ்டம், பொருள் இழப்பு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- கடன் தொல்லை, மனக் குழப்பம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- காரியானுகூலம், பெரியோர் உதவி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- மனக்கலக்கம், உயர்ந்த நிலை. | மு.ப. 10 மணி |
| புதன்- அந்நியர் சகவாசம், பொருள் பேறு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, காரிய சித்தி. | பி.ப. 3 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பயனற்ற செயல். | பகல் 12 மணி |
| சனி- பெரியோர் பகை, காரியக்கேடு. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- வீண் முயற்சி, கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- மனக் கலக்கம், இனசனப் பகை. | பி.ப. 1 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் மந்தம், வீண் செலவு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |
| சனி- சுபகாரிய மகிழ்ச்சி, உறவினர் உதவி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் 12 மணி |
| திங்கள்- காரியசித்தி, கடன் தொல்லை நீங்கும். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| புதன்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பகல் 12 மணி |
| வியாழன்- உயர்ந்த நட்பு, மன மகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, காரியசித்தி. | பி.ப. 2 மணி |
| சனி- இனசன நன்மை, பயனுள்ள செயல். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| விருச்சிகம் | - வெள்ளி. |
| தனு | - சூரியன், புதன். |
| மகரம் | - வியாழன். (23.12.96முதல்) |
| கும்பம் | - சனி. |
| மீனம் | - கேது. |
| சிம்மம் | - செவ்வாய். |
| கன்னி | - இராகு. |

★ சந்திரன்- இடபம், மிதுனம், கற்கடகம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | |
|---|---|
| ஞாயிறு- பணச் செலவு, ஆடம்பர வாழ்க்கை. | பி.ப. 1 மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- தொழில் உயர்ச்சி, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், இனசன நன்மை. | மு.ப. 10 மணி |
| வியாழன்- வீண் பிரயாணம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வெள்ளி- கடன் தொல்லை, கௌரவக் குறைவு. | பி.ப. 2 மணி |
| சனி- தொழில் மந்தம், காரியசித்தி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| திங்கள்- உறவினர் உதவி, தொழில் விருத்தி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| புதன் - தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| வியாழன்- காரிய சித்தி, இடர் நீங்கும். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- வீண்குறை கேட்டல், அந்நியர் பகை. | பி.ப. 1 மணி |
| சனி- மனக் கலக்கம், செலவு அதிகம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-8

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | பி.ப. 3 மணி |
| புதன்- வீண்குறை கேட்டல், அந்நியர் உதவி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- தொழில் மந்தம், காரியத்தடை. | பி.ப. 4 மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| சனி- எதிர்பார்த்த நன்மை, காரியானுகூலம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| திங்கள்- உயர்ந்த நட்பு, வெளியிட வாழ்க்கை. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- காரியசித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| புதன்- உறவினர் உதவி, பிரயாண மிகுதி. | பி.ப. 2 மணி |
| வியாழன்-பொருள் நஷ்டம், வீண் மனஸ்தாபம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- கடன் தொல்லை, மனக் கவலை. | பி.ப. 2 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, அந்நியர் பகை. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | |
|---|---|
| ஞாயிறு- செய்தொழில் விருத்தி, பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- கடன் தொல்லை, உறவினர் உதவி. | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், தொழில் சிறப்பு. | பி.ப. 3 மணி |
| புதன்- காரியசித்தி, அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- எதிர்பார்த்த நன்மை, பணக் கஷ்டம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- வீண் குறை கேட்டல், மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| சனி- தொழில் மந்தம், செலவதிகம். | மு.ப. 9 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் பகை, மனக் கலக்கம். | பி.ப. 3 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண் குறை கேட்டல், உயர்ந்த நட்பு. | பி.ப. 1 மணி |
| புதன்- அந்நியர் சகவாசம், மனக்கவலை நீங்கும். | மு.ப. 10 மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, பிரயாண மிகுதி. | பி.ப. 1 மணி |
| சனி- வீண் தொல்லை, உயர்ந்த நட்பு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6


### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், இனசன நன்மை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, காரியசித்தி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| புதன்- தொழில் விருத்தி, அந்நியர் உதவி. | பி.ப. 3 மணி |
| வியாழன்- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 4 மணி |
| வெள்ளி- மனக் கலக்கம், தெய்வானுகூலம். | பி.ப. 2 மணி |
| சனி- இனசன நன்மை, புதிய முயற்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5





# இரவில் ஒரு நாள்......

இரவில் ஒரு நாள் வெளியினிலே
எழுந்து வந்தே நான் பார்த்தேன்!
பகல் போல் வெளிச்சம் தோன்றியதால்
வானைப் பார்த்துத் தலை நிமிர்ந்தேன்!

கண்ணைப் பறிக்கும் வைர மணி
சிதறியிருக்க நான் கண்டேன்!
நடுவில் வெள்ளி ஓடமொன்று
மெல்ல நகர நான் பார்த்தேன்!

ஓடிச் சென்றே அம்மாவை
வெளியில் கூட்டி நான் வந்தேன்!
வானில் தோன்றும் காட்சியதைக்
காட்டிக் கேள்விகள் பல கேட்டேன்!

அருமை மகனே இது தாண்டா
மின்னி மறையும் தாரகைகள்;
நடுவில் தோன்றும் வெள்ளியது
நிலவு என்றும் உரைத்திட்டார்.

மிருதுபாஷினி-பதுளை.

வயிற்றிற்குச் சோறுண்டு கண்டீர்! - இங்கு
வாழும் மனிதரெல் லோர்க்கும்;
பயிற்றி உழுதுண்டு வாழ்வீர்!-பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்.
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# காட்டில் பள்ளிக்கூடம்

மிருகங்களும், பறவைகளும் படிக்கும் பள்ளிக்கூடம் ஒன்று காட்டில் இருந்தது. அந்தப் பள்ளிக் கூடத்தில் ஒட்டகச் சிவிங்கியார் பாடம் சொல்லிக் கொடுப்பார்.

ஒரு நாள் ஒட்டகச் சிவிங்கியார் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். தனது நீண்ட கழுத்தை நீட்டி எதேச்சையாகத் திரும்பிப் பார்த்தார். தொலைவில் கல்வி அதிகாரியான கரடியார் வந்து கொண்டிருந்தார்.

அவரைப் பார்த்த சிவிங்கியாருக்கு நடுக்கம் வந்தது. கரடியார் வந்தால் மாணவர்களை அழைத்துக் கேள்வி கேட்பாரே! என்ன செய்வது? என்று யோசித்தார் ஒட்டகச் சிவிங்கியார்.

உடனே முன் வரிசையில் இருந்த மாணவர்களைப் பின் வரிசைக்கு அனுப்பி விட்டு, காகம், கிளி, குயில், குரங்கு, சேவல், வாத்து ஆகிய மாணவர்களை முன் வரிசையில் அமரச் செய்தார்.

கல்வி அதிகாரி கரடியார் உள்ளே வந்ததும் மாணவர்களும், சிவிங்கியாரும் எழுந்து வணக்கம் சொன்னார்கள்.

அவர்களை அமரச் செய்த கரடியார், ஒட்டகச் சிவிங்கியாரைப் பார்த்து,



"இப்போது என்ன பாடம் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"தமிழ் எழுத்துக்கள் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன்." என்று கொஞ்சம் தயக்கத்தோடு சொன்னார் சிவிங்கியார்.

"அப்படியானால் சில மாணவர்களைக் கேள்வி கேட்கலாமா?" என்று கேட்டார் கரடியார்.

"ம்.. கேளுங்கள்," என்று சொன்ன சிவிங்கியார், தானே முந்திக்கொண்டு, முன்வரிசையில் இருந்த மாணவர்களைப் பார்த்து, "ஒவ்வொருவரும் வரிசையாகத் தமிழ் எழுத்துக்களைச் சொல்லுங்கள்." என்றார்.

முதலில் காகம் எழுந்தது,
"க..கா..கா.." என்று கரைந்தது.
அடுத்ததாக இருந்த கிளி,
"கி...கீ...கீ..." என்று கத்தியது.
பக்கத்தில் இருந்த குயில்,
"கு..கூ...கூ...." என்று கூவியது.

குரங்கு தான் அமர்ந்திருந்த இடத்திலிருந்து துள்ளி எழும்பி,

"கெ.க்.கே..கே.." என்று கெக்கலித்தது.

இதைப்பார்த்த சேவல்,
"கொ...க்.க்.கர..கோ" என்று கூவியது.

பக்கத்தில் இருந்த வாத்து மெல்லத் தன் அலகால்,

'கௌ...கௌ...க்," எனக் கத்தியது.

தமிழ் எழுத்துக்களை அழகாகச் சொன்ன மாணவர்களின் திறமையைக் கண்ட கரடியார்,

"நன்றாகப் பாடம் சொல்லிக் கொடுக்கிறீர்கள்," என்று ஒட்டகச் சிவிங்கியாரைப் பாராட்டி விட்டு அங்கிருந்து அகன்றார்.

தன் புத்திசாலித்தனத்தால் இன்று தப்பினோம் என எண்ணிய ஒட்டகச் சிவிங்கியார், தன் நீண்ட கழுத்தை நிமிர்த்தி நின்றார்.

# வாரம் ஒரு நாடு

## சுரினாம்



தலைநகர்- பரமரியோ
பரப்பு- 1,63,820 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை- 4.1 இலட்சம்
மொழி- டச்சு, இந்தி, ஆங்கிலம், சுரினாமிஸ், ஜவானிஸ்
எழுத்தறிவு-65%
சமயம்-கிறிஸ்தவம், இந்து, இஸ்லாம்
நாணயம்-சுரினாம் கில்டர்
தனிநபர் வருமானம்-3700 டொலர்

**அமைவிடம்:**

தென் அமெரிக்காவின் வடகிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ள சுரினாம், முன்னர் டச்சு கயானாவாக இருந்தது.

**வரலாறு:**

நெதர்லாந்தின் பிடியில் இருந்த சுரினாம் 1975ம் ஆண்டு சுதந்திரமடைந்தது. இராணுவ ஆட்சி நடைபெறுகிறது. இந்நாட்டின் மக்கள் தொகை பல இன மக்களின் கூட்டாகும். இதில் முக்கிய இனங்கள் நீக்ரோக்கள், மூலட்டோஸ், கிழக்கிந்தியர்கள் ஆகியன. இந்திய, சீன, இந்தோனேசிய, லெபனான், அமெரிக்க நாட்டினரும் இங்குள்ளனர்.

**பொருளாதாரம்:**

இந்நாட்டின் பொருளாதாரம் ஏற்றுமதி, இறக்குமதியில் தங்கியுள்ளது. நெல்பயிரிடுதல் முக்கிய தொழில். பொக்சைட், அலுமினியம் ஆகியன முக்கிய உற்பத்திப் பொருட்கள்.


# கிறிஸ்துமஸ் தாத்தா



இங்கிலாந்தில் குருமார்களில் ஒருவராக இருந்தவர் சென்ட் நிக்கலஸ். இவரைத்தான் கிறிஸ்துமஸ் தாத்தா என்று குழந்தைகள் பிரியமாக அழைக்கிறார்கள்.

இங்கிலாந்தில் கிறிஸ்துமஸ் தாத்தா நீண்ட வெள்ளைத்தாடி, சிவப்புக் கோட், சகிதமாக ரெயின்டீர் எனப்படும் கலைமான் இழுத்து வரும் பனிச்சறுக்கு வண்டியில்- பரிசு மூட்டையுடன் பவனி வருவார். குழந்தைகள் தங்கள் கட்டில் கால்மாட்டில் காலுறைகளைத் தொங்க விட்டிருப்பார்கள். கிறிஸ்துமஸ் தாத்தா புகைபோக்கி வழியாக இறங்கி வந்து இதற்குள் பரிசுப் பொருட்களைப் போட்டுவிட்டுப் போவார். இது இங்கிலாந்து நாட்டுக் குழந்தைகளின் நம்பிக்கையாகும்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 28.12.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 172
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 170

**பரிசுக்குரியவர்:**
செல்வி நஸீரா இக்பால்,
60, கல்பிட்டி வீதி, புத்தளம்.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ஜெ. சியாம் சுஜிதாஸ், விநாயகர் மகா வித். கோளாவில், அக்கரைப்பற்று | விஜயரெத்தினம் யசோதரன், பாண்டாரிகுளம், வவுனியா. |
| மதிவதனி பரமசிவம், த.மகா வித். டில்லரி,ப.கனக்கு,டிக்-ஓயா. | செல்வி பாத்திமா றிப்கா, புனித கப்றியல் ம.ம.வி., ஹட்டன். |
| எ.ஃப். ஃபய்ஹா ஃபாரீஸ், கேம்பிரிட்ஜ் ஆங்கிலப் பாடசாலை, மாத்தளை. | சு. ஜெறோம், புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. |
| இ. ஜெனிட்டா, இந்து மகா வித். பாண்டிருப்பு-01, கல்முனை. | செல்வன் வசந்த் நாகேந்திரன், ரணபிம ரோயல் கல்லூரி, கெட்டம்பே, பேராதனை. |
| எம்.இஸட். ஸஹ்ரா பர்ஹத், 41, போல்ஸ் வீதி, புத்தளம். | செல்வி. ரு. சரண்யா, வின்சன்ற் மகளிர் தேசிய பாடசாலை, மட்டக்களப்பு. |

# சுதந்திர சிலை

உலகில் உள்ள மிகப் பெரிய சிலைகளில் ஒன்று அமெரிக்காவின் சுதந்திரச் சிலை. பெண் வடிவம் போன்று இச்சிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுதந்திரச்சிலை அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்தில் உள்ள துறைமுகத்தின் முன் அமைந்துள்ளது. சிலையின் வலக் கையில் தீப்பந்தமும் இடக்கையில் சுதந்திரப் பிரகடன நாளைக் குறிக்கும் பலகையும் உள்ளது. காலடியில் அறுந்த சங்கிலி ஒன்றும் உள்ளது.

சுதந்திர சிலையுள்ள பீடத்தின் உயரம் 45 மீட்டர். பீடத்தின் உச்சிவரை உயர்த்தி (லிஃப்ட்)யில் செல்லலாம். இதற்கு மேலுள்ள சிலையின் உயரம் 45 மீட்டர்.

சிலையின் உச்சி (தலை) வரை செல்லச் சுழல் படிக்கட்டுக்கள் இரண்டு உள்ளன. சிலையின் தலையில் உள்ள கிரீடத்தைச் சுற்றி 25 ஜன்னல்கள் உள்ளன.

ஒரே சமயத்தில் 50 பேர் இதன் தலைப் பகுதியில் நிற்கப்போதுமான இடம் உண்டு. கிரீடத்தைச் சுற்றி உள்ள ஜன்னல்களின் மூலம் நியூயோர்க், நியூஜெர்சி ஆகிய பகுதிகளைப் பார்க்கலாம்.



சிலையின் வலது கைக்குள் மற்றொரு படிக்கட்டு தீப்பந்த விளக்கிற்குச் செல்கிறது. இங்கு பொதுமக்கள் செல்ல அனுமதிப்பதில்லை. தீப்பந்தம் இரவில் ஒளி வீசுகிறது.

சுதந்திரத்தையும், சகோதரத்துவத்தையும் குறிக்கும் இந்தச் சிலை இரும்புச் சட்டங்களின் மீது செப்புத் தகடுகளை வைத்து அடித்துச் செய்யப்பட்டது.

# விடுகதைகளும் விடைகளும்

1. சின்னச் சின்னச் சிட்டுக் குருவிக்கு எட்டு முழச்சேலை.
அது என்ன?

◀ வானம், ◀ வெங்காயம்.

2. தாடிக்காரன், மீசைக்காரன் கோயிலுக்குள் போனால் வெள்ளைக்காரன்.
அது என்ன?

◀ தேங்காய், ◀ வாழைப்பழம்.

3. அண்ணன், தம்பி அடுத்த வீட்டுக்காரர்கள், ஒருவர் வீட்டுக்கு மற்றவர் போகமாட்டார்.
அது என்ன?

◀ தண்டவாளம், ◀ நாக்கு.

4. இறக்கை இல்லாதவன் ஊர் ஊரூராய்ப் பறப்பான்.
அது என்ன?

◀ ஆகாயவிமானம், ◀ தபால்.

5. உச்சாணிக் கொம்பிலே உரல் கட்டித் தொங்குது.
அது என்ன?

◀ கல், ◀ பலாப்பழம்

6. மூடாத தொட்டியில் எடுக்க எடுக்க நீர் இருக்கும்.
அது என்ன?

◀ கிணறு, ◀ ஆறு

**விடைகள்**

1. வெங்காயம் 2. வாழைப்பழம்
3. தண்டவாளம் 4. தபால்
5. பலாப்பழம் 6. கிணறு.

தொகுப்பு:- ஏ.அகல்யா.

# ஹென்றி ருதர் ஃபோர்ட்

இன்று வீதிகளில் எத்தனையோ விதமான மோட்டார் வண்டிகளைப் (கார்) பார்க்கிறோம்.

இந்த மோட்டார் வண்டியை முதன் முதலில் தயாரித்தவர் யார் தெரியுமா? ஹென்றி ருதர் ஃபோர்ட்.



1863ம் வருடம் அமெரிக்காவில் உள்ள மிச்சிக்கன் என்ற இடத்தில் பிறந்தார் ஹென்றி ஃபோர்ட். இவர் சிறுவயது முதல் எந்திரங்களைப் பழுது பார்ப்பதில் ஆர்வம் காட்டினார். முதலில் இவர் கடிகாரங்களைப் பழுதுபார்த்தார்.

எந்திரங்களைப் பற்றி அறிய வேண்டும் என்ற ஆர்வத்தால் இவர் தம் 16ம் வயதில் ஒரு தொழிற்சாலையில் சேர்ந்தார். அங்கு எந்திரங்களைப் பற்றி ஆராய்ந்து 1893ல் முதல் மோட்டார் எஞ்சினைத் தயாரித்தார். அடுத்த மூன்று ஆண்டுகளில் முதல் மோட்டார் காரைத் தயாரித்து அதைத் தாமே ஓடியும் காண்பித்தார்.

1903ம் ஆண்டில் ஒரு மோட்டார் வண்டி தயாரிக்கும் நிறுவனத்தைத் தொடங்கினார். அப்போது மோட்டார் வண்டியின் விலை அதிகமாக இருந்தது. அதைக் குறைக்க விரும்பிய ஹென்றி ஃபோர்ட், உற்பத்தி முறையை மாற்றினார். அதாவது காரின் ஒவ்வொரு பாகங்களையும் பெருமளவில் தயாரித்து, பிறகு அவற்றை இணைத்துக் கார்களைத் தயாரித்தார். இம் முறையினால் கார்களை வேகமாகவும், பெருமளவிலும், விலை குறைவாகவும் தயாரிக்க முடிந்தது.

சில வருடங்களுக்குள்ளேயே இவர் பெரும் செல்வந்தரானார். தொழிலாளர்களிடம் அன்பு மிகுந்த இவர், தம் நிறுவனத்தின் இலாபத்தில் தொழிலாளர்களுக்கும் பங்கு வழங்கி ஊக்குவித்தார். ஏழைப் பிள்ளைகளுக்காக டெட்ரோயிட் நகரில் ஒரு தொழிற் கல்விக் கூடத்தை நிறுவினார். 1947ல் இவர் காலமானார்.

**இதுவரை** அவர்கள் இளம் காதலர்கள்- ஆனந்த்-மல்லிகா.

இருவரும் சந்தோஷமாக இருக்க தனியான மலைப்பகுதிக்குச் சென்றனர்.

அங்கே புதர் ஒன்றுக்குள் ஒரு பிணம் கிடக்கிறது. ஆனந்த் பொலிசாருக்கு அறிவிக்கிறான். பொலிசார் வருகின்றனர். அது ஓர் ஆண் பிணம். கொல்லப்பட்டவர் ஷர்மா என்று கண்டறிந்து அவரது வீட்டுக்குச்சென்று அவர் மனைவியிடம் விசாரிக்கிறார்கள். மனைவி பெயர் அனிதா. ஷர்மாவின் இரண்டாவது மனைவி. கொலையான ஷர்மாவின் முதல் மனைவியின் மகள் மோனிக்கா. சட்டத்தரணி கணேஷின் உதவியை நாடுகிறாள் மோனிக்கா.

அனிதாதான் தன் அப்பாவை சொத்துக்காக கொலை செய்திருக்கிறாள் என்று சந்தேகிக்கிறாள் மேனிக்கா.

கணேஷ் அனிதாவிடம் விசாணை நடத்துகிறான்.

அனிதாவின் இளமையும், அழகும் கணேஷையும் கலவரப்படுத்துகின்றன.

விசாரணையை முடித்துவிட்டுச் சென்ற கணேசுக்கு அவரசமாக போன் செய்கிறாள் அனிதா.

**இனி......**

# 06

# அனிதா இளம் மனைவி

**“எ**ன்னாயிற்று மிஸஸ் ஷர்மா?”

“என்னைக் கொல்ல யாரோ முயற்சித்தார்கள்,” என்றாள் அனிதா.

கணேஷ் அந்த வீட்டை அடைந்த போது இரவு மணி பத்திருக்கும்.

வீட்டு வாசலில் வெளிச்சம் தெரிந்தது. போர்ட்டிக்கோவின் அருகிலேயே அனிதா ஒரு ஸ்டூலின் மேல் உட்கார்ந்திருந்தாள். அவள் மிகவும் கலங்கியிருந்தாள்.

“என்ன ஆயிற்று அனிதா?”

பக்கத்தில் வெள்ளை நாய் குரைத்துக் கொண்டிருந்தது. மற்றவர்கள் ஒருவருமில்லை. மோனிக்கா சினிமாவுக்குப் போயிருக்கிறாள். பாஸ்கர் வீட்டுக்குப் போய்விட்டான். வாசலில் இருந்த சௌகிதாரும் இல்லை என்று தெரிந்து கொண்டான்.

அனிதாவின் கழுத்தருகில் சிவப்பாக இருந்தது. ரத்தமில்லை. ஆனால் விரல் அழுத்திய அடையாளம். அவளால் சரியாகப் பேச முடியவில்லை. “நான் உள்ளே- இந்த வீட்டுக்கு உள்ளே போகமாட்டேன். கணேஷ், என்னை வெளியே அழைத்துச் செல்லுங்கள். நான் ஏதாவது ஹோட்டலில் தங்கிக் கொள்கிறேன். நான் வீட்டுக்கு உள்ளே போக மாட்டேன்.”

“என்ன ஆயிற்று சொல்லுங்களேன்?”

அவள் இரைந்தாள். அவள் பேச்சு சீராக இல்லை. வீட்டில் ஒருவரும் இல்லை. மீனாட்சியையும் அனுப்பி விட்டேன். படித்துக்கொண்டிருக்கிறேன். ஜன்னல் திறக்கிறது. காற்று என்று தாமதமாகவே திரும்பினேன். அது அது....அவன் அவன்...நிற்கிறான்!

“யார்?”

“யாரோ, நேராக என்னை நோக்கி வருகிறான். நான் அப்படியே செயலற்றுப் போய்க் கொஞ்சம் தாமதித்து விட்டேன். உடனே ஓட முடியவில்லை. அதற்குள் அவன் என்னை நோக்கி ஓடி வந்து அப்படியே என்தோளில் கை வைத்து அழுத்தினான். நான் அவனைத் தள்ளினேன். கடித்தேன்.”

அவள் சற்று நேரம் பேசாதிருந்தாள். அவள் கைகளில் வளையல் உடைந்து கீறின காயங்கள் தென்பட்டன. பிறகு தொடர்ந்தாள்:

“நான் ஓர் அசுரப்பிரயத்தனமாக நழுவ முயன்றேன். என் உடை கிழிந்தது, என்னை மாடிப்படியில் துரத்தினான். ‘உதவி உதவி!’ என்று கத்தினேன். படிகளில் உருண்டேன். படிகளில் கீழே கிடந்தேன். அவன் அவன்....அவன் படியிறங்கி வரவில்லை. நான் அப்படியே சற்று மயக்கமாகக் கிடந்து சற்று நேரத்தில் விழித்தேன். என் நிலை புரிந்ததும் உடனே உனக்கு டெலிபோன் செய்தேன். வெளியே வந்து இங்கேயே உட்கார்ந்திருக்கிறேன்.”

“அனிதா, அவன் முகத்தை நீங்கள் பார்த்தீர்களா?”

“சரியாகப் பார்க்க முடியவில்லை. என்பிரமையும் காரணமாக இருக்கலாம்- அவன் கோவிந்த்தை ஞாபகப்படுத்தினான்.”

“கோவிந்த்!”

“என் பிரமையும் காரணமாக இருக்கலாம் கணேஷ், எனக்கு இந்த வீடு வேண்டாம். இந்தச் சொத்து வேண்டாம். நிம்மதி வேண்டும்.”

“நீங்கள் தனியாக இருப்பது தப்பு. இனி தனியாக இருக்கக்கூடாது. உங்கள் கைக்கீறல்களுக்கு மருந்து போட்டுக் கொள்ள வேண்டும். வாருங்கள் உள்ளே போகலாம்.”

அவள் மறுத்தாள்.

“மற்றொரு விஷயம் அனிதா. அவன் உங்களைக் கொல்ல வந்தானா? அல்லது உங்களை...” என்றான்.

“தெரியவில்லை.” அவள் முதுகு தெரிந்தது. முதுகில் அவள் ரவிக்கை கிழிந்திருந்தது.

“வாருங்கள், அங்கு போகலாம்.”

“எங்கே?”

“உங்கள் அறைக்கு.”

“நான் வரவில்லை.”

“சரி, நான் போகிறேன்,” என்று மேலே சென்றான்.

அவள் கூப்பிட்டாள். “நானும் வருகிறேன். எனக்குக் கீழே தனியாக இருக்கப் பயமாக இருக்கிறது.”

மேலே ஒரு ஸ்டூல் உருண்டோடியிருந்தது. ஒரு கண்ணாடி டம்ளர் உடைந்திருந்தது. ஒரு முத்துமாலை சிதறி இருந்தது. எல்லா விளக்குகளையும் போட்டான், தேடினான், திறந்திருந்த ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான். திரைகளை விலக்கிப்பார்த்தான்.

வெளியே இருட்டாக இருந்தது. தூரத்தில் பாலம்விமான நிலையத்தில் இறங்கும் முஸ்தீபாக ஒரு விமானத்தின் வால் விளக்கு பளிச் பளிச் என்று சிவப்புக்காட்டியது. இறக்கை நுனியில் பச்சை விளக்கு, வயிற்றில் இருந்த விளக்குக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தது.

இருள். வந்தவன் யார்? திரும்பினான். அனிதா தன் கைக் காயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“மருந்து அலமாரி எங்கே இருக்கிறது?” என்றான்.

அவள் காட்டினாள். அதை அடைந்து பஞ்செடுத்தான். ஸாவ்லான் எடுத்தான்.

அவளை உட்கார வைத்துப் பஞ்சை மருந்தில் நனைத்து, அந்தக் கீறல்களைச் சுத்தம் செய்தான். எவ்வளவு பரிதாபத்துக்குரியவள் இவள்.

அவள் தலை குனிந்திருந்தது. மிகவும் பிரயத்தனத்துடன் அழுகையை அடக்கிக் கொண்டிருக்கிறாள். ஓர் உபசார வார்த்தையில் மடை திறந்தாற்போல் அழுதுவிடுவாள், ஜாக்கிரதை! கணேஷ் பேசவில்லை.

“நீங்கள் நிச்சயம் அது கோவிந்தாக இருக்க முடியும் என நம்புகிறீர்களா?”

“இல்லை. எனக்கு என்னவோ அப்படித்தோன்றியது அவ்வளவுதான். என் பயத்தில்- பதற்றத்தில் எனக்குச் சரியாக ஒன்றுமே தெரியவில்லை.”

“உங்களை ஏன் அவன் விட்டுவிட்டான்?”

“என் நாய் கன்னாபின்னா என்று குரைத்தது காரணமாக இருக்கலாம்!”

கணேஷ் மறுபடி ஜன்னலருகில் சென்றான். எதிரே இருட்டில் சலசலக்கிறதே அது என்ன? அல்லது யார்? அல்லது அது என் மனப்பிரமையா? இப்பொழுது என்ன செய்வது?

“மோனிக்கா எப்பொழுது வருவாள்?”

“என்னிடம் சொல்லவில்லை. எனக்குத் தெரியாது.”

“நீங்கள் சில தினங்களுக்காவது அந்த மீனாட்சியை அருகில் வைத்துக் கொள்வது நல்லது.”

“இல்லை. நான் இந்த வீட்டை விட்டு விடப்போகிறேன்! இன்றே இப்பொழுதே!”

“இப்பொழுது நீங்கள் செல்வதற்கு ஒரு இடமும் கிடையாது. மோனிக்கா வரும் வரை நான் இருக்கிறேன். சாப்பிட்டீர்களா?”

“இல்லை. நீங்கள்?”

“நான் சாப்பிட்டுவிட்டேன்.”

“எனக்குப் பசியில்லை.” பயப்பட்டிருக்கிறாள்.

“உட்காருங்கள்,” என்றான்.

உட்கார்ந்தாள், “நீங்கள் உடை மாற்றிக் கொள்ள வேண்டும்,” என்றான்.

“அந்த அறைக்குப் போக எனக்குப் பயம்.”

அவன் பதில் சொல்லவில்லை. அவர்கள் பார்த்துக் கொண்டார்கள். அதில் கேள்வி பதில் விளக்கம் எல்லாம் இருந்தது.

“கணேஷ், அந்தக் கதவைச் சாத்துங்கள்,” என்றாள்.

ஜன்னல் கதவை மூடினான்.

“அதில்லை அறைக்கதவு.”

“கணேஷ், அந்த விளக்குகளை அணையுங்கள். எல்லா விளக்குகளையும்....”

உடன்பட்டான்.

☆☆☆



## நாவல் உலகின் நவீன எழுத்து வேந்தன் -சுஜாதா-

**மோ**னிக்கா வந்தபோது கணேஷ் ஒரு ஹாலில் உட்கார்ந்து ஒரு பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான். இரவுதான். அதே இரவுதான்.

“ஸர்ப்ரைஸ்! வாட் ப்ரிங்ஸ் யூ ஹியர்?”

“உனக்காக எத்தனை நேரம் காத்திருப்பது? என்ன சினிமா?”

“ஸம் ஸில்லி மூவி. அதிருக்கட்டும். நீ என்னைத் தேடிக்கொண்டா வந்தாய்?”

“ஆம்!”

மோனிக்கா, “அனிதா எங்கே?” என்றாள்.

“நான் பார்க்கவில்லை. நான் வந்த பொழுது இங்கு உட்கார்ந்திருந்தாள். உன்னைக் கேட்டேன். ‘வெளியே போயிருக்கிறாள் உட்கார்,’ என்று சொல்லி எழுந்து போய் விட்டாள். அவளுக்கு உடம்பு சரியில்லையா?”

“யார் கண்டார்கள்? என் மேல் கோபமெல்லாம் போய்விட்டதா?”

“உன் மேல் எனக்குக் கோபமில்லை.”

“அதுதான் காரிலிருந்து இறங்கி ஓடினாயா?”

கணேஷுக்குப் பதில் சொல்லும் சிரத்தையில்லை. அவன் ஒருவித மயக்கத்தில் இருந் தான். மயக்கத்துடன் ஒருவித குற்ற உணர்ச்சியும் இருந்தது. சற்றுமுன் நடந்ததை அவன் நினைத்துப் பார்க்கும்போது சந்தோஷத்தின் ஓரத்தில் அந்தக் குற்றம் ஜரிகையிட்டது.

‘அனிதா எப்படிப்பட்டவள்? பயப்பட்டவள். என்னை நாடும்கொடி. எவ்வளவு அழகான கொடி! என்னை எதற்காக நாடினாள்? எவ்வளவு இயல்பாக ஒரு மலர் மலர்வது போல விரிந்தது அந்த அனுபவம்! அனிதா, உன்னை என் வாழ்நாள் முழுவதும் காப்பாற்றுவேன். உன்னைக் கரம் பற்றுகிறேன். உன்னை நான் மணக்கப்போகிறேன். அனிதா என்னை நீ மணப்பாயா?’

“கணேஷ்! கணேஷ்!”

“எஸ், மோனிக்கா.”

“நீ சாப்பிட்டாகிவிட்டதா?”

“ஆம்.”

“அப்படி என்றால் வா, நேருபார்க் வரை போகலாம்.”

“எதற்கு?”

“தனியாகப் பேசுவதற்கு.”

கணேஷ் தனிமையை விரும்பவில்லை. தனிமைக்கு அவன் பயந்தான், மோனிக்காவிடம் பொய் சொல்லுகிறேன். மோனிக்காவிடம் தப்பிக்க விரும்புகிறேன். எப்படித் தப்பிக்கப்போகிறேன்? அந்த ரகசியம் மார்பில் ஒடுகிறது. அனிதா மேலே இருக்கிறாள். தனியாக. அவளைத் தனியாக விடக்கூடாது. “மோனி, நான் ஒன்று கேட்பேன், தப்பாக எடுத்துக்கொள்ள மாட்டாயே?”

“சொல்.”

“இரவு வெகு நேரமாகிவிட்டது. நான் இரவு இங்கேயே / படுத்திருந்துவிட்டுப் போகிறேன். இதோ, இந்தச் சோபாவிலேயே ஒரு புத்தகம் கொடு. எனக்கென்னவோ உன் மாதிரிப் பெண் இந்த வீட்டில் தனியாக இருப்பதில் அபாயம் இருக்கிறது என்று படுகிறது. அதுவும் உன் அப்பா இறந்துபோன வினோத சூழ்நிலையில். நீ என் க்ளையண்ட் என்கிற ரீதியில் உன் பத்திரமும் எனக்கு முக்கியம். அதனால்தான் உன்னைத் தேடி வந்தேன். நீ இம்மாதிரித் தனியாகச் சுற்றுவது சில நாள்களுக்கு நல்லதல்ல. நான் சொல்வதைச் சில நாள்களுக்காவது கேட்க வேண்டும். கேட்டு அதன்படி நடக்க வேண்டும். வித்தியாசமாக எண்ணிக் கொள்ளாதே.”

எவ்வளவு பொய்கள்!

மேனிக்கா, “கணேஷ், நீ நிஜமாகவே ஒரு ஜெம்.” என்றாள். “இரு, உனக்கு ஒரு படுக்கை கொண்டுவந்து தருகிறேன். நீ இருக்கும்வரை இரு. எனக்குக் கவலை கிடையாது. ஆயிரம் அனிதாவைச் சமாளிப்பேன்.”

என்னால் ஒரு அனிதாவைச் சமாளிக்க முடியவில்லை.

புத்தகங்கள் கொண்டு வந்தாள். படுக்கை கொண்டு வந்தாள். ஒரு கண்ணாடி ஜாடியில் தண்ணீர் கொண்டு வந்தாள். பாத்ரூமுக்கு வழி சொன்னாள். ஏதாவது வேண்டுமென்றால் கேட்கச் சொன்னாள். அவன் வந்தனம் சொன்னான். அவள் ஆவலுடன் பேசவிரும்பினாள். கணேஷ் தூக்கத்தைக் காட்டினான். அவள் என்ன என்னவோ பேசிவிட்டு ஒரு வழியாக அவனை விட்டாள்.

அனிதாவுக்கு இதெல்லாம் கேட்டிருக்குமா? கணேஷ் படிக்க முயன்றான். விளக்கை அணைத்தான். படுத்தான்.

மோனிக்கா தன் அறையில் பல் தேய்ப்பது கேட்டது. பாடுவது கேட்டது. பாட்டை நிறுத்துவது கேட்டது. நடப்பது, நிற்பது, ஜன்னலைத் திறப்பது, தயங்குவது, யோசிப்பது, தைரியம் பெறுவது, “கணேஷ்!” என்று கூப்பிடுவது.

கணேஷ் பதில் எதுவும் சொல்லாமல் கண்ணை மூடிக்கொண்டிருந்தான். ஏனென்றால் அவள் கூப்பிட்டவிதம் சற்று அபாயம் கலந்திருந்தது. அவனுக்கு அபாயம்!

இரவு ஏன் விழித்தான்? அதைப்பற்றி அவன் பிற்பாடு யோசித்ததில் கடவுள்தான் அவனை எழுப்பியிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான்.

எழுந்தவுடன் அவன் உடம்பு முழுவதும் பரபரத்தது. மிக அருகே ஒருவன் நின்றுகொண்டிருந்தான். இருட்டில் அவனைத் தெரியவில்லை. அவன் நல்ல உயரமாக இருந்தான்.

கணேஷ் தன் மூச்சை அடக்கிக் கொண்டான். அவன் நிதானமாகக் கணேஷை அணுகி நிதானமாக வலது கையைத்தூக்கி....

என்ன வைத்திருந்தான் கையில்? ஒரே போடு.....

கணேஷ் உருண்டு தப்பித்துவிட்டான். உடனே அவன் கால்களைப் பற்றி இழுத்தான். இருவரும் இருளில் தரையில் விரித்திருந்த கம்பளத்தில் மௌனமாக உருண்டார்கள். குத்து மதிப்பான சண்டை. அவன் மூச்சு கேட்டது. கிடைத்த ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் கணேஷ் விட்ட குத்து ஒழுங்காக அவன்மேல் பட்டுக் கணேஷின் முட்டி மிக வலித்தது. அவன் தப்பியோடப் பார்த்தான், கணேஷ் அதற்குள் அவனை மிதித்தான். மெல்ல அருகில் அவன் தென்பட, கணேஷ் ஸ்விட்சை நோக்கி உடனே ஓட, அவன் தடுத்து அவனை வீழ்த்தினான். வீழ்த்தி பூட்ஸ் காலால் அவனை உதைத்தான். கணேஷ் அடுத்த உதையில் அவன் பூட்ஸைப் பற்றிக் கொண்டு ஆக்ரோஷமாகத் திருப்பினான்.

அவனுக்கு வலித்திருக்கவேண்டும். ஆனால் கத்தவில்லை. ஒரு கடைசி முயற்சியாக அந்த ஆயுதத்தை மறுபடி கீழ்நோக்கி அடித்தான். பட்டது நாற்காலி யில் கணேஷ் விலகிவிட்டான். அவன் யார்? அவன் யார்? விளக்கைப் போட வேண்டும். கணேஷ் ஓடிப்போய் விளக்கைப் போட்டபோது அவன் இல்லை. கீழே ஒற்றைப் பூட்ஸ் கிடந்தது.

மிகவும் மௌனமாக இருந்தது. அவன் சட்டையில் ரத்தக்கறை தெரிந்தது. தன் முகத்தைத்தடவி அடிபட்ட இடத்தைத் தேடினான்.

அவர்கள் இருவரும் காத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தூக்கம் கலையவில்லை. ஏர்கண்டிஷனருக்காக அடைத்திருந்த அந்தப் படுக்கை அறைகளில் சப்தம் கேட்டிருக்காது.

நான் என்ன காவலாளி?

அனிதாவைப் பற்றி மிகவும் கவலைப்பட்டான். மெதுவாக மாடி ஏறிச்சென்று மெதுவாக அந்த அறையைத் தட்டினான், “அனிதா!” என்று கூப்பிட்டான்.

இரு தடவைகள் தட்டியும் பதில் வரவில்லை.

**(தொடர்ந்து வரும்)**


## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: எஸ். குமார்.
வயது: 20
முகவரி: 294, தேவனம்பிய திஸ்ஸபுர, அநுராதபுரம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, நண்பர் தொடர்பு.



பெயர்: எஸ். ராணி.
வயது: 21
முகவரி: HOUSE NO.1449, BLOCK NO.4. STREET NO.2, AL-WAHA, AL-JAHARA, KUWAIT.
பொழுதுபோக்கு: பத்திரிகை.




பெயர்: எஸ். சிவகுமார்.
வயது: 23
முகவரி: P.O.BOX-40426, DOHA, QATAR.
பொழுதுபோக்கு: உதைபந்து, பேனாநட்பு.



பெயர்: எம். லாபீர்.
வயது: 19
முகவரி: தக்வா நகர், 1ம் வட்டாரம், புல்மோட்டை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கிரிக்கெட்.



பெயர்: எச்.ரெசீனா.
வயது: 24
முகவரி: HOUSE NO.1, BLOCK NO.7, STREET NO.1, JADAH NO.8, BAYAN 14367, KUWAIT.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: எம்.முகமட் ஜிப்ரி.
வயது: 26
முகவரி: SV. CAT, P.O.BOX-456, DHARAN AIRPORT-31932, K.S.A.
பொழுதுபோக்கு: ரீ.வி., பேனாநட்பு.

பெயர்: எம்.பைசர்
வயது: 17
முகவரி: செல்வநகர் -9, தோப்பூர்.
பொழுது போக்கு: கிரிக்கெட், பத்திரிகை.


பெயர்: எம்.இல்ஹாம்.
வயது: 18
முகவரி: 387, சிலாபம் வீதி, நீர்கொழும்பு.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம்.

பெயர்: கே.ஜெயதாசன்.
வயது: 20
முகவரி: தேவாலய வீதி, திருகோணமலை.
பொழுது போக்கு: பத்திரிகை, நண்பர் தொடர்பு.

பெயர்: சி.கணேசன்.
வயது: 24
முகவரி: நாகர் இலுப்பைக்குளம், கண்டி வீதி, வவுனியா.
பொழுது போக்கு: பத்திரிகை.

பெயர்: ரி.தேவேந்திரன்.
வயது: 27
முகவரி: 22/22, ஆர்.எச்.குணவர்த்தன மாவத்தை, பதுளை.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எம்.றம்சான்.
வயது: 23
முகவரி: 23, பெலஸ்பாத், பேருவளை.
பொழுது போக்கு: கிரிக்கெட், வானொலி.



# தூக்கு மேடைக் குறிப்பு

**ஜூலிஸ் பூசிக்**

**08**

**இதுவரை**

செக்கோஸ்லாவாக்கிய நாட்டின் போராளிகளின் தலைவர் ஜூலிஸ் பூசிக். ஜெர்மன் படைகளின் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடியவர். ஜெர்மன் இரகசியப் பொலிசாரால் அவர் கைதுசெய்யப்படுகிறார். தான் ஜூலிஸ் பூசிக் அல்ல என்கிறார். அவரது மனைவியும் கைதாகிறார். பூசிக் சித்திரவதை செய்யப்படுகிறார். அவர் இறந்துவிட்டதாக சிறையில் உள்ள மனைவிக்கு தவறான தகவல் கிடைக்கிறது. பின்னர் அது வதந்தி என்று அறிகிறாள். அவளை மட்டும் போலந்துக்கு கடினவேலைகள் செய்யும் தண்டனைக்காக அழைத்துப் போகிறார்கள். தனது இயக்கத்தின் துணிச்சலான உறுப்பினர்களை பற்றிய குறிப்புக்களை தொடர்கிறார் ஜூலிஸ் பூசிக். இனி...

கணவன் கைதுசெய்யப்பட்ட பின்னரும் அவள் எங்கள் இரகசிய இயக்க வேலைகளை வெளியே செய்து கொண்டிருந்தாள். தலைமறைவாக இருக்கும் உறுப்பினர்கள் இடையே தகவல்களை பரிமாறுவது அவள்தான்.

1943ம் வருடப் பிறப்பின்போது அவள் தனது வீட்டில் தன்னந் தனியாக அமர்ந்திருந்தாள்.

தனது கணவன் இருக்கும் கதிரை மீது அவனுடைய படத்தை வைத்து விட்டு பார்த்துக் கொண்டிருந்தாள்.

இரவு பன்னிரண்டு மணி அடித்ததும் அவள் தனது கையிலிருந்த கண்ணாடி தம்ளரை கணவன் அமர்ந்திருக்கும் காலி இடத்தில் தட்டிவிட்டு அவன் சுகமாக இருக்க வேண்டும் என்றும் விரைவில் வீடு திரும்ப வேண்டும் என்றும் பிரார்த்தித்துக் குடித்தாள்.

சுதந்திரநாள்வரை அவன் உயிருடன் இருக்க வேண்டும். ஜெர்மன் படைகளை விரட்டி நாடு புத்தாக்கத்துடன் எழும் நாள் வரை அவன் வாழ வேண்டும் என்று அவள் விரும்பினாள்.

அவளது விருப்பம் நிறைவேறவில்லை. ஒரு மாதத்தின் பின்னர் அவளையும் கைது செய்து கொண்டுவந்தார்கள்.

அந்தச் செய்தி அறிந்ததும் 400ம் இலக்க சிறையறையில் இருந்த நம்மில் பலர் பயந்து நடுங்கிவிட்டோம்.

ஏனெனில் வெளியே உள்ள முக்கியமானவர்களின் பலரது மறைவிடங்கள் அவளுக்குத்தான் தெரியும்.

ஆனால், அவள் ஒரு வார்த்தைகூட வெளியிடவில்லை.

அவளை அவர்கள் அடிக்கவில்லை. அவள் நோயுற்று இருந்தாள். அடித்தால் அங்கேயே செத்துப்போயிருப்பாள்.

ஆனால் அவளை சித்திரவதை செய்த அவர்கள் ஒரு வழியைக் கையாண்டனர். அது மிக மோசமான சித்திரவதை.

அவள் கைதாவதற்குச் சில நாட்களுக்கு முன்பு அவளுடைய கணவன் ஜோவை கடின வேலைக்காகப் போலந்துக்குத்தள்ளிச் சென்றனர்.

அவளிடம் அவர்கள் அதை மறைக்கவில்லை. அதைச் சொல்லியே அவளை கலங்க வைக்கவும், அவளிடம் இருந்து இரகசியங்களைக் கறக்கவும் முயன்றார்கள்.

"உன் கணவன் போலந்துக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறான். அது மிகவும் கொடுமையான இடம். கடுமையான வேலை. திடகாத்திரமாக இருப்பவனால்கூட அங்கே சமாளிக்க முடியாது. உன் கணவன் நொண்டி. ஒருநாள்கூட அவனால் தாக்குப்பிடிக்க முடியாது. அங்கேயே செத்து மடிவான்."

அவர்கள் சொன்னதைக் கேட்டதும் அவளின் கண்கள் கசிந்தன. அதனைப் பார்த்ததும் அவர்களுக்கு மேலும் நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது.

"உன்னால் அவனை இனிப் பார்க்கவே முடியாது. நீ மட்டும் புத்திசாலித்தனமாக நடந்தால் உன் கணவனை மீட்கமுடியும்."

அவள் நம்பிக்கையின்றி அவர்களைப் பார்த்தாள். அவள் மனம் ஊசலாடத் தொடங்கிவிட்டது என்று நினைத்தார்கள்.

"ஆம், நீ நினைத்தால் உன் கணவனைக் காப்பாற்ற முடியும். உனக்குத் தெரிந்த இரகசியங்களை சொல்லிவிடு. இப்போதே அவனை அழைத்துவந்து உன்னிடம் விட்டுவிடுகிறோம்!"

அவள் மௌனமாக அவர்களைப் பார்த்தாள். மிக மிக உறுதியான குரலில் சொன்னாள்:

"எனக்குத்தான் எதுவும் தெரியாதே!"

அவர்கள் வெறுத்துப் போனார்கள். எரித்துவிடுவதுபோல அவளைப் பார்த்தார்கள்.

அவள் தன் மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்: "அவர் என் அருமை ஜோ, அங்கு எங்கேயோ சாவார். எப்படிப்பட்ட சாவு என்பது யாருக்குத் தெரியும்?

அவர்கள் என் சகோதரியைக் கொன்றார்கள். என் கணவனையும் கொல்வார்கள். நான் தன்னந்தனியாய் விடப்படுவேன், சாகும் வரையில் தன்னம் தனியாய்!

அவரை நான் காப்பாற்ற முடியும். அவரை அவர்கள் திரும்ப அழைத்து வருவார்கள். அதற்கு ஒரு விலை இருக்கிறது. அந்த விலையைக் கொடுத்து அவரை மீட்டாலும், அவர் அவராக இருக்கமாட்டார்.'

அவள் இறுதி வரை ஒரு இரகசியத்தையும் சொல்லவேயில்லை.

அவளையும் ஒருநாள் வெளியே அழைத்துப் போனார்கள். அதன்பின்னர் அவளைக் காணவில்லை.

அவளை, அந்த இனிய பெண்ணை, நெஞ்சுரம் கொண்ட புரட்சிக்காரியை அவர்கள் கொன்றிருப்பார்கள். அவள் மறைந்து போனாள்.

அவளுடைய 'ஜோ' போலந்தில் மரணமானான் என்ற செய்தியும் விரைவில் வந்தது.

## லிடா

எங்கள் இயக்க உறுப்பினனான பாக்ஸாஸ் வீட்டுக்கு நான் முதன் முதலில் போனது ஒரு மாலையில். அந்த மாலை நேரம் இன்னமும் நினைவில் இருக்கிறது.

பாக்ஸாஸ் வீட்டில் இல்லை. அவன் மனைவி ஜோசேதான் வீட்டில் இருந்தாள்.

ஜீவகளை ததும்பிய கண்களால் துருதுருவென்று பார்த்த ஒரு சின்னஞ்சிறிய பாவையும் இருந்தாள். அவளை லிடா என்று கூப்பிட்டனர்.

என் மீசையை அவள் ஆச்சரியத்துடன் பார்த்தாள். நாங்கள் சிறிது நேரத்திற்குள் நண்பர்களானோம்.

அந்தச் சிறுமி பத்தொன்பது வயதுடைய பெண் என்று தெரிந்தபோது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

லிடா ஜோசேயின் ஒன்றுவிட்ட சகோதரி. அவளுடைய குடும்பப் பெயர் பிளாச்சா. கூச்சப்படுபவள் என்று அர்த்தம். ஆனால் அவளிடம் அந்த குணவிசேஷம் சிறிதும் இல்லை.

நான் அவளுடைய நம்பிக்கைக்கு உரியவனாகிவிட்டேன். தன் வாலிபக் கவலைகளையும், துயரங்களையும், கதைகளையும் என்னிடம் மனம்விட்டுக் கூறினாள். அது, நான் வயதானவனாகிவிட்டேன் என்று என்னை உணரும்படி செய்தது.

தனது அக்காவுடனோ, அக்கா புருஷனிடமோ ஏதாவது தகராறு ஏற்பட்டால் தீர்ப்புக் கேட்க என்னிடம் ஓடிவருவாள்.

அவள் இளம் பெண்களைப் போல முன்கோபி. வெகுகாலம் பிள்ளையில்லாமல் கடைசியாகப் பிறக்கும் குழந்தைகள் போல அதிக செல்லத்தினால் வீணானவள்.

சரியாகப் பயிற்றுவித்தால் அவள் இரகசிய வேலைகளுக்கு தேர்ந்தவள் ஆகிவிடுவாள் என்று நினைத்தேன்.

அப்போது நான் நொண்டிக் கிழவன் போல வேடமிட்டுக்கொண்டு நடமாடினேன்.

எதிரிகள் என் படத்தை வைத்துக் கொண்டு தேடியலைந்தார்கள். அவர்கள் முன்பாகவே நொண்டிக் கிழவன் கடந்து போனான்.

ஒருநாள் நான் பாக்ஸாஸின் வீட்டில் இருந்தபோது, பாக்ஸாஸ் வெளியே இருந்து வியர்க்க விறுவிறுக்க ஓடிவந்தான்.

"அவர்கள் அங்குள்ள வீடுகளை சோதனை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இங்கேயும் வந்துவிடுவார்கள்" என்று சொன்னான்.

நான் அங்கிருந்து புறப்பட ஆயத்தமானேன். "நானும் வருகிறேன்" என்றாள் லிடா.

நொண்டிக் கிழவனுடன் ஒரு அழகான பெண் சென்றால், எல்லோர் பார்வையும் அவள்மீதுதான் செல்லும். அவள் கூட வருவதும் நல்லதுதான். நான் சம்மதித்தேன்.

அப்போதுதான் என்னுடன் முதன் முதலாக அவள் வெளியே வந்தாள்.

நொண்டிக் கிழவனும், அவன் மகளும் செல்கிறார்கள் என்று அவர்களும் நினைத்து விட்டார்கள். வீதியில் எதிரே நின்றவர்கள் அவளைத்தான் பார்த்தார்கள். என்னை அவர்கள் கூர்ந்து கவனித்திருந்தால் ஒரு வேளை அடையாளம் கண்டிருக்கக் கூடும்.

ஆனால் அவர்கள் பார்வை என்மீது நிலைக்க அவகாசமே இருக்கவில்லையே. அதனால்தான் அதன்பின்னர் நான் வெளியே போகும்போதெல்லாம் அவள் என்னுடன் வந்தாள். என்னுடைய முதல் இரகசியக் கூட்டத்திற்கும் வந்தாள். என்னுடைய இரகசிய இருப்பிடத்தில் அவளும் தங்கிக் கொண்டாள்.

குறிப் பத்திரிகையில் அவர்கள் குறிப்பிட்டிருப்பதுபோல, லிடா என்னுடைய இரகசியத் தபால்காரியாக மாறினாள்.

கொடுத்த வேலைகளை அவள் கவலைப்படாமல் சந்தோசத்துடன் செய்தாள். வீரச் செயல் புரியும் விருப்பம் அவளிடம் இருந்தது.

லிடா வெகு வேகமாக வளர்ச்சியடைந்தாள். செய்திகளை கொண்டுபோய்க் கொடுக்கும் வேலையைவிட பொறுப்புள்ள வேலைகளைச் செய்யுமளவுக்கு அவள் வளர்ந்து விட்டாள்.

ஆகவே, அவளுக்கு நான் வகுப்புகள் எடுக்கத் தொடங்கினேன்.

நாம் எதற்காகப் போராடுகிறோம். யாருக்கு எதிராகப் போராடுகிறோம். நமது இலட்சியங்கள் என்ன? என்றெல்லாம் போதிக்கத் தொடங்கினேன். அவள் ஆவலுடனும், சந்தோசத்துடனும் விஷயங்களைத் தெரிந்துகொண்டாள்.

இந்த வேளையில்தான் எங்கள் இயக்க உறுப்பினரான மிரேக்குடன் அவளுக்கு பரிச்சயம் ஏற்பட்டது. அவன் நிறைய வேலைகளைச் செய்திருந்தான். அதைப்பற்றியெல்லாம் அவளிடம் சாமர்த்தியமாகப் பேசினான். அவளிடம் நல்ல பெயர் வாங்கினான்.

அவனுடைய அடிப்படையான குண விசேஷங்களைத் தீர்மானிப்பதில் அவள் தவறிவிட்டாள். அது அவள் குற்றமல்ல.

நானும் அவன் விஷயத்தில் அதே தவறைச் செய்திருந்தேன்.

முக்கியமான விஷயம் என்னவென்றால், அவனுடைய வேலையும், கொள்கையில் அவன் காட்டிய உறுதியும், மற்ற வாலிபர்களைவிட அவன்பால் அவளை மிகவும் ஈர்த்தன.

லிடா உள்ளத்தில் காதல் முளைத்தது. ஆழமாக வேர்விட்டுத் தழைத்தது.

1942ம் வருடத்தில் தன்னைக் கட்சி உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று அவள் தயக்கத்துடன் கேட்கத் தொடங்கி விட்டாள்.

நான் யோசித்தேன். எனது போதனை வகுப்பைத் தொடர்ந்து நடத்தினேன். அவளை இன்னும் சோதிக்க விரும்பினேன்.

1942 பெப்ரவரியில் மத்திய கமிட்டி நேரடியாக கவனித்து அவளைக் கட்சி உறுப்பினராக சேர்த்தது.

நாங்கள் பனிப்படலத்தின் இடையே இருட்டில் வீட்டுக்கு நடந்துவந்தோம். சாதாரணமாக கலகலவென்று பேசக்கூடிய அவள் அப்போது மௌனமக நடந்தாள்.

வீட்டுக்கு அருகில் ஒரு திடலைத் தாண்டியபோது அவள் சட்டென்று நின்றாள். பனிப்படிகங்கள் தரையில் விழுவதுகூடக் காதில் கேட்கும் அளவுக்கு நிசப்தமாக இருந்த அந்தச் சமயத்தில் , அவள் நிதானமாகச் சொன்னாள்:

"என் வாழ்நாளில் இது தான் மிக மிக முக்கியமான தினம். ஏனெனில் இனி நான் எனக்கே சொந்தமானவள் அல்ல. கட்சிக்குச் சொந்தமானவள். என்ன நேர்ந்தாலும் சரி நான் ஒருபோதும் உங்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கமாட்டேன். இது சத்தியம்!"

அதன் பிறகு எவ்வளவோ நிகழ்ந்தது. அவள் ஒருபோதும் எங்களுக்கு ஏமாற்றம் அளிக்கவில்லை.

எங்களுக்கும் மேலிடத் தலைமைக்கும் இடையே மிக இரகசியமான தொடர்பை வைத்திருந்தவள் அவள்தான்.

அவள் மிகவும் அபாயகரமான, சாதுர்யமான வேலைகளைச் செய்ய வேண்டி இருந்தது.

தொடர்பு துண்டிக்கப்பட்டுத்தவித்த அணிகளைச் சந்தித்து தொடர்பு உண்டாக்க வேண்டியிருந்தது. எங்களிடம் தகவல்தொடர்பு சாதனங்கள் போதியளவில் கிடையாது. அவற்றின் வேலையையும் தொடர்பாளர்கள்தான் செய்ய வேண்டியிருந்தது.

அபாயத்தில் அகப்பட இருந்த தோழர்களை அவசரமாக ஓடி எச்சரிக்க வேண்டியிருந்தது.

மேல் கமிட்டிக்கு ஏதாவது கஷ்டம் நேர்ந்தால், அல்லது எங்களுடைய இரகசிய இருப்பிடத்திற்கு ஆபத்து ஏற்பட்டால் உடனே லிடா விலாங்கு மீனைப் போல நழுவிச் சென்று எல்லாவற்றையும் சரிப்படுத்தினாள்.

**அவளுக்கு மிரேக்குடன் பரிச்சயம் ஏற்பட்டது. அவனுடைய வேலையும் கொள்கை உறுதியும் அவன்பால் அவளை ஈர்த்தன.**



சிறிய காரியங்களைச் செய்தது போலவே அவள்மிக முக்கியமான காரியங்களையும் சந்தோஷத்துடன் மனதை அலட்டிக் கொள்ளாமல் செய்து முடித்தாள்.

நாங்கள் கைதாகி ஒரு மாதம் கழிந்த பின்னர் லிடா கைதுசெய்யப்பட்டாள்.

மிரேக் அவளுடைய பெயரைக் கூறி விட்டான். அவள் ஒரு பாவமும் அறியாத அப்பாவிபோல முகத்தை வைத்துக் கொண்டாள். அவளைப் பார்த்து எவனும் சந்தேகிக்க முடியாது.

அவளுக்கு பல தகவல்கள் தெரியும். ஆனால் ஒன்றையும் சொல்லவில்லை. முக்கியமானது என்னவென்றால் சிறையிலும் அவள் தன்னுடைய வேலைகளைச் செய்தாள்.

சிறையின் பெண்கள் பகுதியில் அதிகாரிகளின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஏவல் கைதியாக மாறினாள். அந்த நம்பிக்கையைப் பயன்படுத்திக் கொண்டு அவள் சாமர்த்தியமாக வெளியே அனுப்பிய செய்திகளினால் நூற்றுக்கணக்கான தோழர்கள் காப்பாற்றப்பட்டனர்.

இவ்வாறு ஒருவருடம் கழிந்தபிறகு அவள் வெளியே அனுப்பிய செய்தி ஒன்று, வழியில் கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன் அவளுடைய செய்திப் பரிமாற்ற வேலைக்கு முற்றுப் புள்ளியிடப்பட்டது.

இப்போது அவள் எங்களுடன் பேர்லினில் நடக்கும் வழக்கு விசாரணைக்கு வருகிறாள்.


எங்கள் கோஷ்டியில் சுதந்திரநாள் வரையில் தப்பிப்பிழைக்க சந்தர்ப்பம் பெற்றுள்ள நபர் அவள் ஒருத்திதான்.

அவள் இன்னும் எவ்வளவோ படிக்க வேண்டியிருக்கிறது. அவளை வளராமல் தேக்கமுடியாது விட்டுவிடாதீர்கள். ஆனால் தற்பெருமை கொண்டு தலைக்கனமாகும்படியோ, அல்லது தான் செய்தது போதும் என்ற திருப்தி மனப்பான்மை உண்டாகவோ அனுமதிக்காதீர்கள்.

அவள் உலைக்களத்தில் புகுந்து வந்துவிட்டாள். மிகவும் அபூர்வமானவள் என்று நிரூபித்திருக்கிறாள்.

(தொடர்ந்து வரும்)

# உபதேசம்



**யாழ் ஞானகணேசன்**

பெருமழை பெய்து ஓய்ந்தபின் தூறல்களின் நடுவில் துல்லியமாகத் தெரிந்தது அந்த அழகிய தேக்க மரம். தேக்கமரத்தின் கீழ் இருக்கையில் இரண்டு தேனீக்கள் கூடுகட்டும் குதூகலத்தில் குந்தியிருந்தன. தேக்கமரத்தின் ஒவ்வொரு இலையும் தங்கள் நரம்புகளூடாக மழை நீரை வடித்து மௌனத்தைப் புகுப்பித்துக் கொண்டிருந்தன.

மௌனமும் மகிழ்ச்சிக்குரியதுதான் என்பது குணசேகரத்துக்கும் சுஜாதாவுக்கும் தெரியாதா என்ன? குணசேகரம் சுஜாதாவை இடைவிடாது பார்த்துக் கொண்டேயிருந்தான். மனத்துக்குள் ஒரு ஏக்கப்பசி. பசிக்குரிய உணவு பரிமாறப்பட மாட்டாது என்பது அவனுக்குத் தெரியும். ஏன் என்றால், சுஜாதா, காதல் என்றாலும் களங்கம் இல்லாது இருக்கவேண்டும் என்று விரும்புபவள்.

கால்களால் ஈர நிலத்தின்மேல் குறுக்கும் நெடுக்குமாகக் கோடுகளை வரைந்து கொண்டிருந்த சுஜாதா மௌனத்தைக் கலைத்தாள்.

"போனகிழமை வந்த பேப்பரிலை, உங்கடை கதை நல்லாயிருந்தது."

"பரிசு!" கேட்டான் குணசேகரம்.

"பரிசா? உங்களை மாதிரி சமுதாயச் சீர்திருத்தவாதிகள் பரிசுகளை எதிர்பார்த்து தொண்டு செய்யக்கூடாது."

"நான் எந்தப் பரிசு கேட்டேன் என்று உமக்குத் தெரியும் தானே?"

அவள் முகம் நாணத்தால் சிவந்தது. திடீரென வேறு திசையில் பேச்சை மாற்றினாள்.

"அண்டைக்கு நகரசபை மண்டபத்திலை நடந்த மகளிர் தினவிழாவிலை உங்கடை கவிதை தான் நல்லாயிருந்ததாம். 'புதிய பாரதி' என்று என்ரை சிநேகிதிமார் எல்லாரும் உங்களுக்கு புனைபெயர் வைச்சிருக்கினம். ஆனால் நான் பார்க்கக் குடுத்து வைக்கேல்லை."

"அதுக்கென்ன இப்ப: உமக்காக இன்னொரு நிகழ்ச்சி நடத்தினால் போச்சு."

அவள் சிரித்தாள்.

"அப்பிடி இல்லை. உங்களை மாதிரி எல்லா ஆண்களும் சீதனம், பெண் அடிமை, சாதிப்பிரச்சனை எல்லாம் ஒழிய குரல் கொடுத்தால் எப்பிடியிருக்கும்!"

❋❋❋

"குணா, அம்மாவின்ரை கடிதம் வந்திருக்கு. எங்கடை காதலை யாரோ அங்கை போய்ச் சொல்லிப்போட்டினம். பேசி எழுதியிருக்கிறா." குணசேகரத்தின் அருகில் இருந்த சுஜாதா கடிதத்தை அவனிடம் நீட்டியவாறே கூறினாள்.

குணசேகரம் மௌனமாக இருந்தான்.

அவள் மீண்டும் தொடர்ந்தாள். "நான் எல்லாத்தையும் விபரமாக எழுதப்போறேன். உங்கடை படம் ஒன்றும் அனுப்பி விடுவோம்: என்ன?"

"சுஜாதா, உம்மட்டை நான் ஒண்டு சொல்ல வேணும்."

"உம்.., சொல்லுங்களேன்." என்றாள் சுஜாதா.

"இல்லை; எங்களுக்கு திருமணம் என்ரை புனிதமான நாள் வராது சுஜாதா."

"ஏன்? ஏன்?" அவசரப் படுத்தினாள் சுஜாதா.

"இல்லை, எங்கடை அம்மா, அப்பா எதிர்பாக்கிற சீதனத்தை உங்களாலை கொடுக்க ஏலாது. அதோடை அவை கௌரவம், அந்தஸ்து எண்டு பாப்பினம். அதாலை எங்களுக்கும் உங்களுக்கும் இடையிலை ஒரு பெரிய இடைவெளி இருக்கு."

"அதுக்கென்ன குணா, நீங்களும் நானும் சம்மதிச்சா –"

அவள் பேச்சை இடைமறித்தான் குணா.

"சுஜாதா, என்னாலை அவையின்ரை சொல்லை மீற ஏலாது."

சுஜாதாவின் தலையில் இடி வீழ்ந்தது. வார்த்தைகள் அழுகையையும் மீறி ஆவேசத்துடன் வெளிவந்தன.

"என்ன குணா? சமுதாயச்சீர்திருத்தம் எண்டு சொல்லிறதெல்லாம் வெறும் எழுத்தளவில் தானோ? ஊருக்கு மட்டும் உபதேசம்? உங்களுக்கு?"

குணாவின் முகத்தில் எந்தவித மாற்றமுமில்லை. மெதுவாக இடத்தை விட்டு நகர்ந்தான்.

# இதுவரை நீதானா...?

**ரூபராணி**



"இவனா என் காதலன்? இவனையா இது நாள்வரை என் இதயத்தில் வைத்துப் பூஜித்தேன்? இவனைப் போல் ஒருத்தன் கிடைக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்ற என் நம்பிக்கையெல்லாம் அவன்மேல் கொட்டி வை:த்திருந்தேன்! சை.. என்ன ஆளிவன்?

இவனுக்காக... இவன் குடும்பத்துக்காக... என்னென்னவெல்லாம் செய்தேன்? இவனுக்கு இதயம் இல்லையா?.'

"ஜானு... என் தங்..கைக்குப் பரீட்சை கிட்டுது ஸ்கூல்பீஸ் கட்டினாத்தான் பரீட்சை எழுதுவாள்."

கொடுத்தாள்.

"ஜானு... எங்கம்மாவுக்குக் கடுமையான நெஞ்சுவலி அடிக்கடி வருது. சரியான சிகிச்சை இல்லாட்டி அவ பிழக்கமாட்டா." அவன் வார்த்தைகளில் சோகம் அப்பிக்கிடந்தது.

உதவினாள்.

"ஜானு... நான் வேலைக்கு ட்றை பண்றேன், நல்லவேலை. கை நிறைஞ்ச சம்பளம். ரொக்கப் பணம் டிப்பாசிட் கட்டினாத்தான் அந்த வேலை கிடைக்கும். இந்த வேலைகிடைச்சிட்டா அப்புறம் என்ன? கலியாணந்தான். உன்னட்ட இருக்கா?"

இருந்தது.

'இப்படி எத்தனையோ உதவிகளைப் பெற்ற சங்கரா எனக்குத் துரோகியானான்...?'

சிறைக் கைதியாகிவிட்ட ஜானுவின் இதயத்தில் உக்கிப் போயிருந்த நினைவுகள் ஒவ்வொன்றாக உயிர்பெற்று அவளைச் சித்திரவதை செய்தன.

ஜானு வசதி வாய்ப்புள்ள ஒரு குடும்பத்தின் மூத்த மகள். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் படித்துக்கொண்டிருந்தபோதுதான் சங்கர் அவளுக்குப் பரிச்சயமானான்.

படிப்பில் கெட்டிக்காரன். பணமுடை உள்ளவன். கடன்பட்டுக் கஷ்டப்பட்டுப் படிப்பவன் என்பது பல்கலைக்கழகத்துக்குத் தெரிந்த உண்மை. அவனுடைய அம்மா மாவிடித்து இடியப்பம் அவித்துக் கடைகளுக்குக் கொடுப்பதைத் தொழிலாகக் கொண்டவள்.

பல்கலைக்கழகக் கலைவிழாவில் சங்கரும் ஜானுவும் ஜோடி சேர்ந்து நடித்ததிலிருந்து இருவருக்குமிடையே நெருக்க மேற்பட்டது. ஒருவரை ஒருவர் உயிராக நேசித்தனர்; இவர்கள் காதலுக்கு ஜானுவின் அப்பா பச்சைக் கொடி காட்டிவிட்டார். அவள் தாயில்லாப் பெண்; ஆனாலும் அவள் அப்பா அவளுக்கு எந்தக்குறையும் வைத்ததில்லை.

பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட பின்னரும் இவர்கள் நட்பு தொடர்ந்தது. ஜானு சங்கருக்காகச் செய்த உதவிகள் ஏராளம்.

**உடுக்கை இழந்தவன் கைபோலாங்கே**
**இடுக்கண் கழைவதாம் நட்பு**

வள்ளுவர் சொன்ன இந்தக் குறளுக்கு இலக்கணமாகி நின்றாள் ஜானு. சங்கர் இப்போது கொழும்பில் சுங்கத் திணைக்கள உத்தியோகத்தன்.

ஜானு யாழ்ப்பாணத்திலிருந்து பல சோதினைச் சாவடிகளையும் வேதனைகளையும் தாண்டி ஒருவழியாய் கொழும்பு வந்து சேர்ந்தாள். தங்குவதற்குக் கஷ்டப்பட்டு ஒரு விடுதியில் இடம்பிடித்தாள். அங்கிருந்தவாறே சங்கரோடு தொடர்பு கொண்டு அவனுக்காகக் காத்திருந்தாள்.

எண்ணங்களையும் ஆசைகளையும் மனசில் அழைந்து கொண்டிருந்தாள். சங்கரின் மடியில் முகம் புதைத்து தான் கடந்து வந்த பாதைகளில் நடந்த துயரங்களைச் சொல்லி ஆறுதல் பெற வேண்டுமென்று துடியாய்த் துடித்தாள். தானும் சங்கரும் திருமணம் செய்து வாழப்போகும் நாட்களை ஒத்திகை பார்த்தாள்.

மறுநாட்காலை சங்கர் ஜானுவைச் சந்திப்பதாய்ச் சொல்லியிருந்தான், எண்ணக் குவியல்களுக்குள் தன்னைப் புதைத்து கண்மூடிப் படுத்திருந்தாள் ஜானு.

அவளால் தூங்க முடியவில்லை. யுத்தம், போர் என்று புத்தகங்களில் படித்த காலம் அவள் கண்முன்னே விரிந்தது. அப்போது அதன் பயங்கரம் அவள் அறியாதது. இன்றோ.. அதன் அழிவுகளையும் கொடூரங்களையும் அனுபவத்தில் கண்ட உண்மை அவள் நெஞ்சில் வலித்தது.

> **சங்கரின் மடியில் முகம் புதைத்து, கடந்து வந்தபாதையில் நடந்த துயரங்களைச் சொல்ல வேண்டும்.**

பிஞ்சுகளும் இளசுகளும் கிழங்களும் ஆயிரக்கணக்கில் பலியாகிப்போனதை எண்ணிப் புலம்பினாள். வீடு வாசல்களை இழந்து அகதிகளாய் இடம்பெயரும் மனிதக் கும்பலை எண்ணி வேதனைப்பட்டாள். வளம் கொழித்த யாழ் பூமி விதவையான பரிதாபத்தை எண்ணிக் கண்ணீர் வடித்தாள்.

எது எப்படியோ- துன்பங்கள் தந்த துணிச்சலையும் ஜானுவால் வியக்காமல் இருக்க முடியவில்லை. கைக்கடிகாரத்தை அடிக்கடி பார்த்து விடியலுக்காகக் காத்திருந்த ஜானு அப்படியே கண்ணயர்ந்து போனாள்.

படபடவென்று கதவு தட்டும் சத்தம்.

ஜானுவின் இதயமும் அதிவேகமாய்த் துடித்தது. நேரம் அதிகாலை ஐந்தைக் கடந்து விட்டது. ஜானு கலக்கத்துடன் கதவைத் திறந்தாள்.

'பொலிஸ்!' காக்கிச்சட்டைகள் உஷாராகின. "யாப்பனத..?" அந்தக் கேள்வி அதிகாரத்துடன் வெளிவந்தது. விடுதியில் உள்ள தமிழர்களைச் சந்தேகத்தின் பேரில் விசாரணைக்குக் கொண்டு செல்வதாய்ச் சொன்னார்கள், வாகனம் அவளையும் உள்ளே திணித்துப் பறந்து சென்றது.

ஜானு விசாரணையின்போது தேவையான ஆவணங்களைக் காட்டினாள். தான் கஸ்ரம்ஸ் ஒஃபீசர் சங்கரைத் திருமணம் செய்வதற்காகவே யாழ்ப்பாணமிருந்து வந்த விபரத்தையும் சொன்னாள். ஆவணங்களும் அவள் சொன்ன செய்தியும் பலமிழந்து போயின.

சங்கரும் விசாரணைக்காக வரவழைக்கப் பட்டான். இந்தப் பெண்ணை உனக்குத் தெரியுமா?"

"எனக்குத் தெரியாது"

சொன்னவன் சங்கர்தான்.

"உன்னைக் கலியாணம் செய்ய யாழ்ப்பாணத்தில் இருந்து வந்ததாகச் சொல்றதெல்லாம் உண்மையா?" போலிசின் குரலில் அதிகாரம் தெறித்தது. "பொய்..." என்று... சொன்னவன் சங்கர்தான் ஜானுவின் இதயம் வெடித்துச் சிதறியது.

# தகுதியும் தவிப்பும்

**ஆத்மராஜா றூத் சந்திரிக்கா**



விடியலின் ஆகர்ஷிப்புகள். பாங்கொலி செவிதழுவ திடுக்கிட்டு விழித்த கலீல்நானா, சுபஹ் தொழுது விட்டு வெளியில் வந்தான்.

"அஸ்ஸலாமு அலைக்கும்"

"வலைக்கும் ஸலாம்!" இருவரும் சில்லென்றடித்த குளிர் காற்றில் மயிர்க்கால்கள் குத்திட்டு நிற்க வெண்மணல் முற்றத்தில் நின்றோம்.

அனெக்ஸில் குடியிருக்கும் ஸமீர்நானா, ஹீரோ ஹொண்டா உதைத்துக் காரியாலயம் புறப்படுவது கண்டு நானா பல்லை நறநற வென்று கடித்தான். "மெள்ளக்கடி.....நாக்கு துண்டாவப் போகுது" என்ற என்னை முறைத்தான்.

"நீ கூட நையாண்டி பண்றியா?"

"சே.....ஆலோசன- வருமுன் காப்போம்னுதான்."

"வெள்ளாப்ல உங்க உபத்திரவம் தொடங்கியாச்சா? இந்த அவஸ்த்த பொறுக்காம ஒருநாளைக்கு முழக்கயித்தில தொங்கிடலாம்னு கெடக்கு....சே எண்ட நஸீபு இதாய்ரிக்கும் வேற என்னத்தியன் செய்யேலும்....?"-சலித்தான்.

"மிடில் ஈஸ்ற் போகேலும்!"

"அங்க போய்க் கூலிக்கழுதையாட்டம் சவூதிக்காரன் வூட்டு கொத்தடிமையாப் போரடிக்க- நீயிஞ்ச சீவிச் சிங்காரிக்கணும்!"

"நானா உனக்குப் பொஸிற்டிவ்வா சிந்திக்கவே முடியாதா? உன் புத்தியே இப்போது மட்டமாய் சுருங்கிண்டு வருது."

"நீங்களெல்லாம் என்ன நெனச்சிட்டு வாழ்றீங்க? இந்தவூட்டு எச்சில் பிராணிங்கெற நெனப்பு- தண்டச்சோறுங்கிற அற்பம்"

"நானா....ஒங்கள நீங்களே தாழ்த்திக்கிறிங்க; தப்பாப் புரிஞ்சிட்டிங்க, நாம எடம்பெயர்ந்து வந்தப்புறம் எவ்ளோ கஷ்டப்பட்டும் உம்மாவும் வாப்பாவும் ஒங்கள படிப்புக்கு ஒழைச்சதெல்லாம் தண்ணியாட்டம் செலவு பண்ணினாங்கல்லியா? அதெல்லாம் பெரிஸ்ஸாத் தெரியல்ல. ரெண்டுவார்த்த சுட்டாப்ல பேசினா மௌத்தாகணும்கிற நெனப்பு வரணுமா?"

"எனக்கு கெடைக்க வேண்டிய வேலைக்கு ஸமீர் போறது பார்த்துண்டு கலங்காம சிரிச்சிருக்கேலுமா?"

"அல்லாஹ் இரிக்கான்லயா, எல்லா அக்கிரமத்தையும் பார்த்திண்டு!"

"நான் மௌத்தாகணும்!"

"த பாருங்க நானா! எடம் பெயர்ந்தப் போதே எத்தின பேர் யுத்த அனர்த்தத்தில சின்னாபின்னமாகி, அங்கவீனமான, அனாதையா ஆகிட்டாங்க. எவ்ளோ கஷ்டத்லயும் நம்மள அல்லாஹ் பாதுகாத்தான்லயா? படைச்ச ஆண்டவன் ஒங்களுக்கெண்டொரு திட்டம் வைச்சிரிப்பான். அறிவும் திறனும் பெலனும் தந்திரிக்கானே அல்லாஹ்- அது போதும் அல்ஹம்துலில்லாஹ்."

"தத்துவம் பேசிறியா? நேத்தைக்கு மௌச்சனீ- நெக்குப் போதிக்கிற?"

"யதார்த்தம் நானா, நிதர்சனத்தப் புரிஞ்சிக்குங்க- வந்த வாய்ப்ப நழுவ விடாம சவூதிக்கு பொறப்படுங்க."

"பாலை நிலத்ல தொலஞ்சி போகணுமா நான்?"

"நம்ம மண்ல தலைநிமிர்ந்து வாழணுமே?" மௌனம் இறுகியது. என்னோடு பேசுவதைத் தவிர்த்த கலீல் நானா ஆழ்ந்த சிந்தனை வயப்பட்டான். என்னுள்ளும் ஆழ்மனயாத்திரை அரங்கேறிற்று.

திருநெல்வேலி, முள்ளியவளை, உடுப்பிட்டி என்று வாழ்ந்த காலங்கள். வாப்பா திருநெல்வேலியில் இருந்த உத்தியோகத்துக்காக வந்து காத்தான்குடியில் இருந்த உம்மாவக் காதலிச்ச கண்றாவிக்கு நாங்கள் வடக்கும் கிழக்குமாய் பஸ்ஸேறி உறவு கொண்டாட வேண்டிய நிர்ப்பந்தம்.

நானும் நானாவும் காத்தான்குடியில் பிறந்தது மட்டும் தான். நானா தெல்லிப்பழையில் படிக்க, நான் கல்முனையில் படிக்க.... பால்யத்திலே துருவமாகிப் போனோம். தொண்ணூறில் வடக்கிலிருந்து ஓடிவந்து புத்தளத்தில் குடியேறிவிட்ட பின்னர்தான் அகதி அவஸ்த்தைக்குள்ளானோம்.

கலீல் ரஹ்மான்-எனது நானா நல்ல கெட்டிக்காரன். கணிதப்பிரிவில் பல்கலைக் கழகம் புகவேண்டிய நானா, யாழ்ப்பாணத்தில் படித்த துரதிஷ்டத்தால் மிகக்கூடிய புள்ளியிலும் தரப்படுத்தலில் தட்டுப்பட்டுப் போனான்.

இடம் பெயர்வு, தரப்படுத்தல், அகதி அந்தஸ்த்து, வேலைவாய்ப்பின்மை எல்லாமே நானாவில் ஒரு விசர்த்தன்மையை விதைத்துவிட்டிருக்கிறது சமீபகாலமாக.

உம்மாவும் வாப்பாவும் எவ்வளவோ சொல்லியும் நானா கேட்டபாடில்லை. சவூதிக்கு அல்லது கட்டாருக்குப் போகச் செல்லிய நச்சரிப்பு விட்டபாடில்லை. வாப்பாக்கு நானாவை சவூதிக்கனுப்பி நாலு சல்லி சேர்க்கவேணும்கிற அவசியமில்லை. நானாவோடு படிச்சு முட்டையடிச்சிக் கிடந்த பக்கத்துவீட்டு ஸமீர்நானா பேங்க் உத்தியோகம் பார்க்கிறதப் பார்த்துப் பார்த்து நானா தினமும் அவஸ்தைப் படுவதைப் பார்க்கச் சகிக்கவில்லை.

நேரம் நழுவிக்கொண்டிருந்தது. என்னெதிரேயிருந்த கலீல்நானா சிந்தனை கலைந்தான்.

"நான் சவூதி போறன்!"

ஆச்சரியம் தாளாமல் விழிவிரித்தேன்.

"நீ செல்றதும் நெஸம்தான்- அல்லாஹ் அறிவோட உடல்பெலனும் தந்திரிக்கான். அறிவால ஒழைச்சி உயரமுடியாட்டி ஒடம்பு பெலத்தில ஒழைக்கலாம்; உயரலாம்- பாதை தெளிவாயிடிச்சு என் மனமும் தெளிவாரிக்கி"

"ஓ...வெரிகுட்!"

"ராஸிப் சென்ன மாதிரி நாளைக்கி எல்லாம் ஓகே பண்ணச் செல்லப்போறன்."

"ஓல் தி பெஸ்ற்!"

"ஆனா....அந்தப் பாலை நிலத்தில தனிச்சுப் போய்க்கிடக்கணும்கிறது தான் மனசுக்கு கஷ்டமாயிரிக்கு, உன்னைய உம்மாவ வாப்பாவப் பிரிஞ்சிருந்து பழக்கமில்லையே நெக்கு" நானா சிறுபிள்ளையாய் அழுதான்.

"சே ஆண்பிள்ளை அழக்கூடாதுன்னு அல்லாமா அக்பால் தன் மகன் ஜாவீதுக்குச் சென்னாப்ல நானும் திருப்பிச் செல்றன் நானா. நாம ஒருநாளைக்கி நம்ம சாம்பல் திடல்ல போய்க்குடியிரிக்கேலும். அதுவரைக்கும் ஆனத உழைச்சி நல்லாரிக்கணும் இல்லியா- நீங்க திறமையும் அறிவுமுள்ளவங்க. படிச்சவனுக்கு சென்ற எடமெல்லாம் சிறப்புத்தான்- பயப்புடாமப் புறப்படுங்க நானா!"

தோளில் கரம் பதித்து ஆறுதல் பரிமாறினேன். ஸமீர் நானாவின் மோட்டார் சைக்கிள் ஒலி கேட்க நானா மீண்டும் சஞ்சலப்பட்டான். நாளைக்கு நானாக்கு விமான இரைச்சலில் இந்த ஒலி கேட்காது- சஞ்சலப்படமாட்டான், எதிர்காலக் கனவுகளோடு பறந்து கொண்டிருப்பான்.

# குறைகள்

**எம். சண்முகராஜா**

சாய்வு நாற்காலியில் அயர்வாக அமர்ந்திருந்தாள் கனகம். நாற்பத்திரண்டு வயதாகிவிட்டதை, முன் தலையில் இருந்த ஓரிரண்டு நரைகள் கோடிட்டுக் காட்டியது தவிர, அவளது உடல் இன்னும் இளமையாக- கட்டுக் குலையாமல் இருந்தது.

கனகத்தின் தோற்றத்தைக் கண்டு சமவயதுடைய பெண்கள் பொறாமை பட்டதுண்டு, அந்த பொறாமையை கனலாகக் கொட்டிய சந்தர்ப்பங்களும் பல உண்டு.

திருமண வீடுகள், வைபவங்கள் என்பவற்றில் கனகத்தைக் கண்டதும், பெண்கள் அவள் காது படும்படியாகவே "குழந்தை குட்டி இருந்தால் தானே! அதுதான் இல்லையே அதனால்தான் கட்டுக் குலையாமல் இருக்குது...." என்று பேசும்போது ஓட்டுக்குள் நத்தையாய் சுருண்டு போவாள் கனகம்.

கண்களில் திரண்டு, கன்னங்களைக் கண்ணீர் சுடும் முன் சட்டென வெளியில் சென்று ஓரமாக அமர்ந்து விடுவாள்.

குழந்தை பிறக்காதது அவள் செய்த பாவமா? எத்தனை டாக்டர்களை 'கன்சல்ட்' செய்திருப்பாள், எத்தனை அரசமரங்களை சுற்றியிருப்பாள்; ஆனால் பலன்தான் கிட்டவில்லை. டாக்டர்கள் கூறிய "உங்கள் இருவரிடமும் எந்தக் குறையும் இல்லை. குழந்தை பிறக்கும்" என்ற வார்த்தை தந்த நம்பிக்கையிலேயே இருபது ஆண்டுகளை ஓட்டிவிட்டாள்.

கனகத்தின் கணவன், அவளது உள்ளம் கருதி குழந்தை இல்லையே என்ற மனக் கவலையை வெளிக்காட்டுவதேயில்லை "எனக்கு நீ குழந்தை உனக்கு நான் குழந்தை இதில் இன்னுமொரு குழந்தை எதற்கு?" என்று அவளைத் தேற்றுவான்.

கணவன் மனதை முற்றாக அறிந்து கனகம், அவ்வார்த்தைகள் அடிமனதிலிருந்து வந்தவை அல்ல என்பதை உணர்ந்தும் உணராதவள் போல் நடித்தாள்.

கூடியவரை பொது இடங்கள், வைபவங்களுக்குச் செல்வதை குறைத்துக் கொண்டாள். தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் செல்வதுமுண்டு. அவ்வேளைகளில், பெண்களின் பார்வைகளையும் ஏளனச் சிரிப்புக்களையும் தாங்கமாட்டாமல் துவண்டு போவாள்.

'பொருட்செல்வத்தில் குறைவைக்காத இறைவன் குழந்தைச் செல்வத்தில் குறை வைத்து விட்டானே, ஒரு வாரிசு இல்லாமல் செய்து விட்டானே' என்று நித்தமும் கலங்கிக் கரைந்து போவாள் கனகம்.

எதிர்வீட்டில் இவளைவிட நாலைந்து வயது கூடிய ஜெயலக்ஷ்மி, கணவனை இழந்துவிட்ட போதும், ஆசைக்கொன்றும் ஆஸ்த்திக்கொன்றுமாய் இரண்டு செல்வங்களோடு வாழ்வதைக் கண்டு ஏக்கத்தில் தவித்துப் போவாள். 'இரண்டு வேண்டாம். ஒன்றே ஒன்று மட்டும் இருந்தால் போதும்' என ஆண்டவனை கேட்காத நாளே இல்லை. ஆனால் பலன்தான் இல்லை.

வாசல் கதவு தட்டப்படுவதை உணர்ந்தவள், கண்களில் வழிந்த நீரை துடைத்துவிட்ட வேகத்திலேயே கதவையும் திறந்தாள்; அங்கே! கலைந்த தலையும் சிவந்த கண்ணுமாக

> **கட்டுக்குலையாமல் இருந்த கனகத்தைப் பார்க்க சக பெண்களுக்குப் பொறாமையாக இருந்தது.**



ஜெயலக்ஷ்மி நின்றிருந்தாள்.

அவளை உள்ளே அழைத்து அமரச் செய்தபோது அடக்கமாட்டாமல் குமுறிக் குமுறி அழத்தொடங்கிவிட்டாள் ஜெயலக்ஷ்மி.

ஆதரவாக அவளது தோளைத்தட்டி அவளது அழுகையின் காரணம் வினவினாள் கனகம்.

"இன்று தன் மனைவி கோள்மூட்டி விட்டதை நம்பி என்மகன் என்னை அடிக்க வந்துவிட்டான். என்னால் தாங்க முடியவில்லை. அதனால் வீட்டைவிட்டு வந்து விட்டேன். சுமதியும் மணமாகி கனடா போனவள், போனவள்தான். எட்டு மாதமாகிறது. ஒரு கடிதம் கூடப் போடுவதில்லை. இரண்டு பிள்ளைகள் பெற்றும் இன்று அனாதையாகி நிற்கிறேன் கனகம்!" என கேவி, கேவி அழுதாள் ஜெயலக்ஷ்மி.

'ஆண்டவனே! பிள்ளை இல்லாதது மட்டும்தான் குறை என்று எண்ணி குறுகிப் போனேனே. பிள்ளை பெற்று வளர்த்தபின் இந்த நிலை வராது என்பதற்கு என்ன உத்தரவாதம். குறைகள்தான் எத்தனை வடிவில் எங்கெங்கே இருக்கின்றன!' ஆழ்ந்த பெருமூச்சுடன் தேநீர் தயாரிக்க சமையலறை நோக்கி நடத்தாள் கனகம்.

# இலக்கிய நயம்

# அச்சம் இரண்டு

தருவது ரசிகன்

"இயற்கையை கொஞ்சம் ரசித்தால் என்ன?
இனிமையில் நெஞ்சம் மிதந்தால் என்ன?"
இளவரசி அமுதா அழைத்தாள்.
இளவரசன் வல்லபன் இசைந்தான்.

இளமையை ரசிக்கலாம்-இந்த
இரவினை நாமும் ஜெயிக்கலாம்!
களமென சமரினில் குதிக்கலாம்-அந்த
கடலென்னும் இன்பத்தில் குளிக்கலாம்!
என்று நினைத்தவனை
நந்தவனத்துக்கு நகர்த்திச் சென்றுவிட்டாள்!

"நிலாவுக்கு இன்று சிவராத்திரியா
யாருக்காக கண்விழித்துக் காத்திருக்கிறது?"
அருகே அமர்ந்து அவளை ரசித்தவனின்
கனாவைத் தகர்த்து வினா வீசினாள்!

"தழுவிய மேகம் விலகிப்போனது,
தாகத்தோடு நிலா காத்திருக்கிறது!"
விடையில் பொடி தூவினான்.

"கொடுத்துவைத்த நிலா
அடுக்கு வரிசையாக
எத்தனை நட்சத்திரக் காதலர்கள்?"
பொய்யாகப் பெருமூச்செறிந்தாள்!

"நிலா பேரழகு- சில
பெண்களுக்கு பேர்தான் அழகு.
கனாக் கண்டு யாது பயன்?"
திருப்பி அடித்தான் வல்லபன்.

முத்தார முகத்தில் சத்தான கோபம்
முல்லை இதழில் வித்தானது சீற்றம்.
"பின்னால் பேயாய் அலைந்துதிரிந்ததும்
கண்ணால் சேயாய் இரங்கி நின்றதும்
முன்னால் நந்தியாய் குறுக்கே வந்ததும்
உன்னால் பித்தாய் ஆனேன் என்றதும்
இந்நாளில் எல்லாம் மறந்து போனதோ?"

"ஆலையில்லா ஊரில்
இலுப்பைப்பூவும் சர்க்கரைதானே!"
வேண்டுமென்றே சீண்டினான்.

"நீ தேன் நீ தேன்-உன்னை
நினைத்தேன், நினைத்தேன்.
உள்ளம் இனித்தேன்-காதலில்
ஜெயித்தேன் ஜெயித்தேன்.
பார்த்தேன் மனம் கலைந்தேன்-நீ
முகம் மலர்ந்ததும் மனம் தெளிந்தேன்.
தேன் தேன் நீ தேன்- இதழ்களில்
அதை நான் அறிந்தேன், அறிந்தேன்!
அரும்தேன் இதழ்களில் தரும்தேன்-இனி
மருந்தேன்? வேறு விருந்தேன்- நீர்
அன்று சொன்னதை மறந்தேன்?"
மூச்சு விடாமல் சொல்லி முடித்தாள்.
விம்மித் தணிந்தன நெஞ்சக எழில்கள்

"ஏனென்று சொல்லவா-நான்
எதற்கென்று சொல்லவா?"

"சொல்லுங்கள்- உங்கள்
சாயம் வெளுக்கட்டும்!"

"உன்பால் கொண்ட அன்பால்
நீ பால் என நினைத்தேன்-அந்த
நினைப்பால் எனை மறந்தேன்!
உயிர்த்துடிப்பால், காதல் நினைப்பால்
உன் பின் நான் அலைந்தேன்!



காதல் ஜெயிப்பால் உனை
அடைந்தேன்! பால்-தேன்
இரண்டும் பருகிக் களித்தேன்!"

"பொய்! பொய்!-நீங்கள்
சொல்வதெல்லாம் பொய்!"
பட்டு முகம் குத்தி முறைத்தது.

"பொய், பொய், பொய்
கண்டும் கண்ணால் எனை
நீ உண்டும் காணாததுபோல
நீ சென்றது பொய்!

நெஞ்சில் விதை விழுந்தும்
நினைப்பில் விடை தெரிந்தும்
கண்ணால் நீ சொன்னது பொய்!

புன்னகை வரத் துடித்தும்
உள்ளே அதைத் தடுத்து
உன் இதழ்கள் செய்தது பொய்!"

வல்லபன் அவள் பொய்களை
வல்லமையாக அடுக்கினான்.
குறும் சிரிப்போடு கள்ளி-அவன்
பெரும் தோள்களில் மயங்கினாள்.

தோளில் சரிந்த கொடி
வினா தொடுத்தது.
"மான் என்பீர், மயில் என்பீர்
நூலென்பீர் இடையை
எல்லாமும் பொய்தானே?
காதல் இனிது-அதற்கு
பொய் இனிது மெய்தானே!"

"யார் சொன்னார் பொய் என்று?
காற்றுப்பட்டால் நூல் அசையும்
என் கரங்கள் பட்டால் இடை நெளியும்
அரவம் கேட்டால் மான் மிரளும்-என்
உருவம் கண்டால் உன் விழி மிரளும்
மழை கண்டால் மயில் ஆடும்-நான்
வரக் கண்டால் உன் மனம் ஆடும்!"

"உங்கள் உருவம் கண்டால்
நான் மிரண்டது எக்காலம்?"

"காதல் தளிர்விட்ட காலம்
அது முற்காலம்!-இப்போது
உன்னைக் கண்டு நான் மிரள்வது
தற்காலம்! ஆனால் பொற்காலம்!"

"நான் எங்கே மிரட்டினேன்
எங்கிருந்து இப்பழியைத் திரட்டினீர்?"

"முகம் மிரட்டவில்லையடி
முன் எழில் மிரட்டுமே- மனம்
மிரட்டவில்லையடி
வேல் விழி மிரட்டுமே!-நான்
சரண் அடைய வேண்டுமடி
உன் எழில் களத்திலே!"
சொன்னவன் முகம் தாழ்ந்து புதைந்தது.
அன்னவள் மனம் விரும்பி அழைத்தது!

புதைந்தவன் செவியில்
அவள் இதய ஒலி புகுந்தது!

"இதயம் ஏனடி துடிக்கிறது
பயந்தது போல் ஏன் நடிக்கிறது?"
எழில்களின் நடுவே செவியைச் சாத்தினான்.

"அச்சத்தால்தான் துடிக்கிறது
என்மனம் கிடந்து தவிக்கிறது!"

"அச்சம் என்பது கொடுமையடி
அஞ்சாமைதான் காதலில் இனிமையடி!"

"அஞ்சுவதற்கு அஞ்சாமை முறையுமல்ல
நான் அஞ்சுவதில் ஒரு தவறுமில்லை!"

"கொஞ்சுவதற்கு அஞ்சாமை வேண்டுமடி
கெஞ்சவைக்கும் கஞ்சத்தனம் வேண்டாமடி"

"அச்சத்தின் காரணம் அறியாமல்
மனதில் பட்டதையெல்லாம் கொட்டாதீர்!"

"பேச்சை வளர்க்கும் நேரமல்ல
நினைப்பதை உடனே வீசிவிடு!"

"காதலில் வென்று முடிக்கும் வரை
வெற்றி நழுவுமோ- உம்கரம்
பற்றிக் கொள்ளுதல் முடியுமா
என்றொரு அச்சம்
இதயத்தில் புகுந்து ஒட்டிக்கொள்ளும்!"

"அதுதான் வென்றுவிட்டோமே-கரம்
பற்றிக் கொண்டோமே!"

"பற்றிக் கொண்டதும்-எங்கே
பிரிவு எட்டிப்பார்க்குமோ-நம்
இடையே குறுக்கே நீளுமோ
என்றொரு அச்சம்
இதயத்தில் ஏறி அமர்ந்துகொண்டது!"

வல்லபன் நகைத்தான்.
"போடி பைத்தியக்காரி!-நீ
அஞ்சுவதில் அர்த்தமில்லையடி!"

"ஏன் இல்லை? நான்
சொன்னதின் அர்த்தம் நம் வள்ளுவர்
சொன்ன குறளிலும் உண்டு!"
அமுதா அந்தக் குறள் சொன்னாள்.

"பெறா அமை அஞ்சும் பெறின் பிரிவு அஞ்சும்
அறா அ இடும்பைத்தென் நெஞ்சு"

குறள்-1295, அதிகாரம்-130

---

## ஸ்போர்ட்ஸ்

## டெண்டுல்கர் மகிழ்ச்சி

இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்த தென் ஆபிரிக்க அணி 1-2 என்ற முறையில் டெஸ்ட் தொடரில் தோல்வியடைந்தது. கல்கத்தாவில் நடந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்ற தென் ஆபிரிக்கா, அகமதாபாத்தில் நடந்த முதலாவது டெஸ்ட்டிலும் கான்பூரில் நடந்த மூன்றாவது டெஸ்ட்டிலும் இந்தியாவிடம் தோல்வியுற்றது.

இதுவரை நான்கு டெஸ்ட்களுக்குத் தலைமைதாங்கி மூன்று போட்டிகளில் வென்றும், ஒன்றில் தோற்றும் இருக்கிறார் கப்டன் சச்சின் டெண்டுல்கர். மூன்றாவது டெஸ்ட் போட்டி முடிந்த பின்னர் கான்பூரில் டெண்டுல்கர் அளித்த பேட்டியில்,

"உலகின் வலுமிக்க அணியான தென் ஆபிரிக்க அணியை டெஸ்ட் போட்டித் தொடரில் வென்றுள்ளோம். இந்திய அணியின் ஆட்டம் முழுத் திருப்தி அளிப்பதாக இருந்தது.

அசாருதீனின் அபார ரன் குவிப்பும், ஸ்ரீநாத், கும்ப்ளே ஆகியோரின் சிறப்பான பந்து வீச்சும் போன்ற கூட்டு முயற்சியால்



இந்த (கான்பூர்) போட்டியில் வெற்றி கிடைத்தது.

தென் ஆபிரிக்கா செல்லும் இந்திய அணியும் மகிழ்ச்சியுடன் உள்ளது. அங்கு நடைபெறும் டெஸ்ட் மற்றும் ஒருநாள் ஆட்டங்கள் சவால் மிக்கதாக இருக்கும்."
இவ்வாறு டெண்டுல்கர் கூறினார்.

## மாஸ்டர்ஸ் போட்டி ஒத்திவைப்பு

முன்னாள் முன்னணி கிரிக்கெட் வீரர்கள் பங்கேற்று வந்த சுவாரஸ்யமான போட்டி, மாஸ்டர்ஸ் போட்டி.

இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர் சுனில் கவாஸ்கரின் சிந்தனையில் உதித்த இந்தப்போட்டி கடந்த 2 வருடங்களாகத் தொடர்ந்து நடைபெற்றது.

மும்பாயில் நடைபெற்ற முதல் போட்டிக்கு 2.5 கோடி ரூபாய் ஸ்பொன்ஸர்ஷிப் கிடைத்தது. இரண்டாவது போட்டி சார்ஜாவில் நடைபெற்றது. இந்த வருடத்தில் நடைபெற வேண்டிய மூன்றாவது போட்டியில் பங்கேற்க 6 நாடுகளின் வீரர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

75 ஆயிரம் டொலர் பரிசுத்தொகை கொண்ட இந்தப் போட்டிக்குத் தகுந்த ஸ்பொன்ஸர்கள் கிடைக்காத காரணத்தால், மாஸ்டர்ஸ் போட்டி அடுத்த வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## முதல் பத்து வீரர்கள்

சீட் (CEAT) கடந்த நவம்பர் மாதம் 14ம் திகதி வெளியிட்டுள்ள தரப்பட்டியலில் பாகிஸ்தான் அணித் தலைவர் வாஸிம் அக்ரம் முதலாவது இடத்தில் இருக்கிறார்.



இந்தத் தரப் பட்டியலில் முதல் 10 இடங்களில் இந்திய, பாகிஸ்தான் வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். இலங்கை வீரர்களான முத்தையா முரளீதரன் 14வது இடத்திலும், ரொமேஷ் கலுவித்தாரன 17வது இடத்திலும் இருக்கின்றனர். முதல் 10 இடங்களில் உள்ள வீரர்கள் விபரம்:

| | | |
|---|---|---|
| 1. | வாஸிம் அக்ரம் | - பாகிஸ்தான் |
| 2. | சையிட் அன்வர் | - பாகிஸ்தான் |
| 3. | மொய்ன் கான் | - பாகிஸ்தான் |
| 4. | அனில் கும்ப்ளே | - இந்தியா |
| 4. | சச்சின் டெண்டுல்கர் | - இந்தியா |
| 6. | வக்கார் யூனுஸ் | - பாகிஸ்தான் |
| 7. | நயான் மொங்கியா | - இந்தியா |
| 8. | சக்லைன் முஷ்டாக் | - பாகிஸ்தான் |
| 9. | வெங்கடேஷ் பிரசாத் | - இந்தியா |
| 10. | இயாஸ்அகமட் | - பாகிஸ்தான் |

---

## சிந்தியா பதில்கள்

**★ ரஜினிகாந்த் அரசியலுக்கு வருவாரா?**

கே.ரவிச்சந்திரன், ஏறாவூர்.

என்ன அவசரம்? இப்போதுதானே 47வது பிறந்தநாளைக் கொண்டாடியிருக்கிறார்.

●○

**★ மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் செய்ய விரும்பும் நாடுகள் இரகசியமாக செய்யலாம் என்று அமைச்சர் கதிர்காமர் கூறியிருக்கிறாரே?**

எம்.சந்திரபோஸ், கொழும்பு-10.

பகிரங்கமாக நடப்பதுதான் சமரசம். அந்தரங்கமாக நடத்தப்படுவது சரசம். ஒரு எழுத்தை அமைச்சர் மறந்துபோய்விட்டதால் அப்படிக் கூறியிருக்கலாமோ....?

●○



**★ டியர் சிந்தியா! வாக்குறுதி கொண்டு இலக்கை அடைய முடியுமா?**

பா.நிரஞ்சன், மட்டக்களப்பு.

முடிந்திருந்தால் இலங்கைத்தீவு இப்போது இன்பபுரியாகியிருக்குமே!

●○

**★ இலங்கை கிரிக்கெட் அணிக்கு மீண்டும் அவுஸ்திரேலிய பயிற்சியாளர் நியமிக்கப்பட்டிருக்கிறாரே?**

என்.செல்வின், நீர்கொழும்பு.

யுத்தம் ஒரு விளையாட்டு. விளையாட்டும் ஒரு யுத்தம். இரண்டுக்கும் ஒரே நம்பிக்கை- வெளிநாட்டுப் பயிற்சியாளர்கள்!

●○

**★ அன்பளிப்பு, இலஞ்சம் இரண்டுக்கும் இடையில் என்ன வித்தியாசம்?**

வி.குமரேசன், மொனராகலை.

ஒரு இஸ்லாமிய அரசர் இருந்தார். அவருக்கு அன்பளிப்பாக பழவகைகள் அனுப்பப்பட்டிருந்தன. உடனடியாக அனைத்தையும் அதை அனுப்பியவருக்கே திருப்பி அனுப்பினார் அந்த அரசர்.

அவருடைய அந்தச் செயல் அமைச்சருக்கு வியப்பை ஏற்படுத்தியது.

"பிரபு! ஒருத்தர் அன்பளிப்பாக அனுப்பியதை ஏன் திருப்பி அனுப்பவேண்டும்? நபிகள் நாயகம் (ஸல்) யாரும் அன்பளிப்பாகக் கொடுப்பதை திருப்பி அனுப்புவதில்லையே?" என்று கேட்டார்.

அதுக்கு அந்த அரசர் சொன்னார்: "நபிகள் நாயகம் அவர்களுக்கு அனுப்பப்பட்ட அன்பளிப்புக்கள் உள்ளத் தூய்மையுடன் அனுப்பப்பட்டவை. ஆனால் அரசனான எனக்கு யாரும் ஆதாயம் கருதாமல் அன்பளிப்பு அனுப்புவதில்லை. ஏன் இவ்வளவு உயர்ரகப் பழங்களாகத் தெரிவு செய்து அனுப்பியிருக்கிறார்கள் தெரியுமா? இவர்கள் அநியாயமாக சேகரித்த சொத்துக்களை நான் கண்டுபிடித்து பறிமுதல் செய்துவிட்டேன். அவற்றைத் திரும்பப் பெறுவதற்காக பழங்களை அனுப்பியிருக்கிறார்கள்.

உள்நோக்கம் எதுவுமின்றி தூய்மையான அன்புடன் அனுப்பப்படுவது அன்பளிப்பு. தவறான உள்நோக்கத்துடன் கொடுப்பது இலஞ்சம்," என்று விளக்கினார் அரசர்.

●○

**★ ஒரு காரியம் வெற்றியடைய வேண்டுமானால் யாரிடம் ஆலோசனை கேட்க வேண்டும்?**

ஜெ.துஷ்யந்தன், மட்டக்களப்பு.

அது யாரிடம் ஆலோசனை கேட்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது.

வயது குறைந்த ஒரு காகத்துக்கு ஒரு நத்தைக்கூடு கிடைத்தது. நத்தைக் கூட்டை உடைத்து நத்தையை எப்படித் தின்பது என்று அதற்குத் தெரியவில்லை.

ஒரு வயதான காகத்திடம் சென்று இந்தக் நத்தைக் கூட்டை எப்படி உடைப்பது என்று யோசனை கேட்டது.

உடனே அந்த வயதான காகம், "நத்தைக் கூட்டைத் கவ்விக் கொண்டு ஒரு பாறைக்கு மேலால் பறந்துகொண்டே கீழேபோடு. நத்தைக் கூடு உடைந்து விடும்" என்று யோசனை சொன்னது.

அதன்படியே இளம் காகமும் செய்தது. நத்தைக் கூடு உடைந்தது. நத்தை வெளிப்பட்டது. தயாராக இருந்த வயதான காகம் நத்தையைப் பாய்ந்து சாப்பிட்டு விட்டது.

"நான் இவ்வளவு கஷ்டப்பட்டு உடைத்தேன். நீ தின்றுவிட்டாயே. இப்படித் துரோகம் செய்யலாமா?" என்று கேட்டது இளம் காகம்.

அதற்கு வயதான காகம் சொன்னது: "நீ என்னிடம் நத்தைக் கூட்டை உடைக்கத்தானே யோசனை கேட்டாய்? நான் சொன்னேன். மற்ற விஷயம் என் சாமர்த்தியம்!"

எனவே, துஷ்யந்தன், பாத்திரமறிந்து பிச்சையிடவேண்டும். ஆளறிந்து யோசனை பெறவேண்டும்!

●○

**★ டியர் சிந்தியா! நண்பன் பகைவனாவது எப்போது?**

மனோ கோபாலன், ஹப்புத்தளை.

கடன்வாங்கிக்கொண்டு நீங்கள் தலை மறைவாகும்போது!.

●○

**★ டியர் சிந்தியா! அம்பாறை மாவட்டத்தில் தீகவாப்பி பிரச்சனைக்கு யார் காரணம்?**

- எச்.முகமட், புதிய காத்தான்குடி.

அரசியல்!

●○

**★ பெண்களை ஆண்கள் கொடுமைப்படுத்துவதை மட்டும்தான் கண்டிப்பீர்களா? ஆண்களை பெண்கள் அதிகாரம் செய்வது உமக்குத் தெரியாதோ?**

யோ.செல்வநாதன், கண்டி.

தெரியுமே!

ஒரு அம்மா மகனிடம் விடுகதை ஒன்று போட்டார்.

"சிங்கம்போல உள்ளே வரும். ஆடு போல வெளியே போகும். அது என்ன?"

மகன் சட்டென்று பதில் சொன்னான்: "அது அப்பா!"

●○

**★ சிந்தியா! நீங்கள் கவிதை சொல்லி நீண்டநாட்கள் ஆகிவிட்டனவே. ஏன் கவிதை படிப்பதையே நிறுத்தி விட்டீர்களா?**

செல்வி சி.ஜெயராணி, கம்பளை.

சில 'கவிதைகளை'ப் படிக்கும்போது அப்படி ஒரு நினைப்பு வருவதுண்டுதான். சமீபத்தில் படித்த ஹைக்கூ கவிதை ஒன்று:

தினமும் மரணம்
தினமும் ஜனனம்
காலண்டர்!

●○

**★ பழம்பெருமை பேசுவதால் பயன் உண்டா சிந்தியா?**

கி.ரவிமூர்த்தி, திருமலை.

பலம் பெருமை இருந்தால்தான் இக்காலத்தில் மரியாதையே கிடைக்கிறது.

●○

**★ அரசியல்வாதிகளுக்கு மிக அவசியமானது எது?**

ஆர்.ஜெயபாலன், கொழும்பு-06.

சாமர்த்தியம்!

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் கென்னடி போட்டியிட்டார். கென்னடி ஒரு பொய்யர் என்று அவரை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளர் பிரசாரம் செய்தார்.

அந்த வேட்பாளர் பேசிவிட்டுச் சென்ற அதே இடத்தில் கென்னடியும் ஒரு கூட்டம் போட்டார். கூட்டத்தில் பெரும் தொகையான பெண்கள் இருந்தார்கள்.

கென்னடி பேச ஆரம்பித்தார்.

"என்னை ஒரு பொய்யன் என்று சொல்கிறார் எதிர்த்தரப்பு வேட்பாளர். நான் இப்போது என் எதிரில் இருக்கும் பெண்களாகிய நீங்கள் எல்லோரும் ரொம்ப அழகானவர்கள் என்று சொல்கிறேன். இது பொய்யா?" என்று கேட்டார் நிக்சன்.

பெண்கள் பலமாக கரகோஷம் செய்தார்கள். தமது வாக்குகளையும் கென்னடிக்கே அள்ளிப்போட்டார்கள்.

●○

**★ டியர் சிந்தியா! யாழ் நிலவரம் எப்படி இருக்கிறது?**

பா.மகேஸ்வரன், வவுனியா.

ஒப்பரேஷன் சக்சஸ், பேஷன்ற் அவுட். உயிர்கொடுக்கத்தான் உள்ளூராட்சித் தேர்தலாம்!

●○

**★ தமிழ்ப்பட நடிகைகளில் அதிக சம்பளம் வாங்கும் நடிகை யார்?**

எஸ்.குணா, ஹட்டன்.

ரம்பா! சுளையாக 25 இலட்சம் ரூபாய். நம்மூர் மதிப்பில் கிட்டத்தட்ட 40 இலட்சம் தேறும்!

●○

**★ மணிரத்னத்தின் ஆனந்தம் எப்போது திரைக்கு வருகிறது?**

வி.தனபாலன், மாத்தளை.

ஆனந்தம் வராது. அதுதான் 'இருவர்' என்று பெயர் மாற்றிவிட்டார்களே! டிசம்பர் 14ல் பாடல் கசட் வெளியிட்டுவிட்டார்கள். அடுத்தது படம்தான்!

# இராமாயணம் அங்கம் 62

## ஆவலுடன் அலைந்த ஆஞ்சநேயர்

இராஜகுமாரன்

இராமபிரான் எந்நேரமும் சீதாப் பிராட்டியாரின் நினைவாகவே, உருசியமுகம் மலைக்குகையில் இருந்தார். கடுமையான விரதத்தை மேற்கொண்டு, பசி, தாகம், தூக்கம் ஆகியவற்றைத் துறந்திருப்பவர்களைப் போன்றே அவர் காணப்பட்டார். தர்ப்பைப் புல்லினாலான பாயிலேயே-தனது கையினைத் தலையணையாகக் கொண்டு படுத்திருப்பார். தம்பி இலக்குமணனின் பிடிவாதத்திற்காக எப்போதாவது சிலபழங்களை மட்டும் புசிப்பார். நற்சுவையுடன் கூடிய பழங்களைக் கண்ணெடுத்தும் பார்க்க மறுத்தார். அவற்றின் சுவையைத்தான் உருசித்தால், அது சீதைக்குச் செய்த துரோகமாகிவிடுமோ என்ற காரணத்தினால் அவற்றை ஒதுக்கினார்.

★★★

சுக்கிரீவனின் வானர சேனைகள் நான்கு திசைகளுக்கும்- சீதாப்பிராட்டியாரைத் தேடி அனுப்பப்பட்டிருந்தன



அல்லவா? கிழக்கு, மேற்கு மற்றும் வடக்குப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டவர்கள்- அவர்களுக்கு அளிக்கப் பட்டிருந்த ஒரு மாதக்கெடு முடிந்ததும் திரும்பி வந்து தமது இயலாமையை எடுத்துக் கூறிவிட்டு ஒதுங்கிக் கொண்டனர். சீதாப்பிராட்டியாரை அவர்கள் கண்டுபிடிக்கத் தவறியமைக்காக அவர்களைத் தண்டிக்கவேண்டும் என்று சுக்கிரீவன் தவித்தான். ஆனால் அவ்வாறு எதுவும் நடந்து விடாமல் இராமர் தடுத்துவிட்டார்.

தென்திசை சென்ற குழுவினரின் வருகை தாமதமாகியது. இதனால் அக்குழுவுக்குத்தலைமை தாங்கிச் சென்ற தனது அமைச்சர் அனுமன் மீது சுக்கிரீவன் அடங்காக் கோபத்துடனிருந்தான். ஆனால் அதே அனுமன் தான் தனக்குரிய நல்ல செய்தியுடன் வருவார் என்ற நம்பிக்கையுடன் இராமர் இருந்தார். இருப்பினும் ஒருமாதம் மட்டுமல்லாமல் இரண்டாவது மாதமும் முடியும் தறுவாயை நெருங்கிக் கொண்டிருந்தமையினால் இராமபிரான் ஓரளவு நம்பிக்கை தளர்ந்த நிலையினை அடைந்திருந்தார். இதனால் அவருடைய உளமும் உடலும் மிகவும் சோர்வடைந்திருந்தன. இலக்குவனுக்கும் சோர்வு இருந்தபோதிலும், அனுமன் எடுத்த காரியத்தை நிச்சயம் வெற்றிகரமாக முடித்தே திரும்புவார் என்ற திட நம்பிக்கை இருந்தது. அதனால் அண்ணன் இராமருக்கு எப்போதும் நம்பிக்கையூட்டிக் கொண்டே இருந்தார்.

★★★

### அந்தப்புரத்துள் அனுமன்

ஆங்காங்கே காவலுக்கு நின்ற அரக்க வீரர்களைத் தவிர வேறு ஆண்களே அற்ற- பெண்கள் மட்டும் தனித்து வாழும் ஒரு பிரதேசத்துக்குள் புகுந்த விட்டமைக்காக ஆஞ்சநேயர் பெரிதும் துயரடைந்தார். இருப்பினும், சீதாப்பிராட்டியாரும் பெண்கள் வாழக்கூடிய ஓரிடத்தில்தானே இருக்க முடியும் என்ற எண்ணம் மேலிட்டமையினால், தான் அப்பகுதிகளில் பிராட்டியாரைத் தேடுவதில் தோஷமில்லை என்று சமாதானமடைந்தார்.

சிறு சிறு அரண்மனைகளைக் கொண்ட அழகிய வீதிகள் பலவற்றில் அரம்பையர் போன்ற பெண்களே காணப்பட்டனர். அங்கு எப்போதும் மகிழ்ச்சிகரமான இசை முழங்கியமையினால் அத்தகையதோரிடத்தில் சீதாப்பிராட்டியார் இருக்க முடியாதென உணர்ந்துகொண்டார் அனுமன்.

இச்சிறு அரண்மனைகளைக் கடந்து சென்ற ஆஞ்சநேயர் அதே சோலையின் நடுவே பிரமாண்டமானதோர் அரண்மனையைக் கண்டார். சுற்றி வளைத்திருந்த சிறு சிறு அரண்மனைகளாலும் அடர்ந்து வளர்ந்திருந்த பெரு மரங்களாலும் அந்தப் பெரிய அரண்மனை மறைக்கப்பட்டிருந்தது. அமைதியும் அழகும் சூழ்ந்த அந்த அரண்மனையின் வெளிப்புறத்தே எங்கும் ஒளி படர்ந்து பகல் போல் காட்சி தந்தது. எப்படியும் அதனுள்ளே சென்று பார்க்க வேண்டும் என்று அனுமன் விரும்பினார். அங்கு பாதுகாப்பும் மிகக் கடுமையாக இருந்தது. வாளை உருவிய வண்ணம் மாளிகையைச் சுற்றியிருந்த வீதிகளில் அரக்க வீரர்கள் பவனிவந்தனர்.

இத்தகைய அரண்மனைகளைக் கண்டதும், இந்த மாளிகையில் சீதாப் பிராட்டியார் சிறை வைக்கப்பட்டிருக்கலாம் என்று ஆஞ்சநேயர் நம்பினார். அப்பகுதியிலிருந்த நெடிதுயர்ந்த மரம் ஒன்றின் மீது தாவி ஏறினார். அதன் உச்சாரக் கொம்பின் மீதிருந்து மாளிகை இருந்த பகுதிக்குள்ளிருந்த பெரு மரத்தில் தாவிக்கொண்டார். பத்திரமாக தரையில் குதித்தார். தன்னை உறுதி எக்காவலரும் காணவில்லை என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டார். மாளிகை வளவினுள்ளும் காவலர்களின் நடமாட்டம் இருந்தது. ஒரு புறத்தே பெண்களே காவலில் இருந்தனர். ஆகவே அம்மாளிகையின் அதே பகுதியில் சீதாப்பிராட்டியாரைக் காணலாம் என்று திட்டப்படுத்திக் கொண்டு அவ்விடத்தை அணுகினார்.

எவருடைய கண்களிலும் தென்படாமல் மாளிகைக்குள் நுழைந்துவிட்டார். எங்கும் நறுமணம் வீசியபடி இருந்தது. யாழிலிருந்து மெல்லிய இன்னிசை பரவியது. அங்கிருந்த ஒருசாளரத்தின் வழியாக ஒரு பிரமாண்டமான அறையின் உட்புறம் கண்களை ஓட்டினார். அது ஓர் அந்தப்புரம். அரசமகளிர் பள்ளியறை. அப்பேற்பட்ட ஓரிடத்தில் தன்னைப் போன்ற ஒருத்தர் ஒரு கணநேரத்தையும் செலவிடுவது முடியாத காரியம் எனத் தெளிவாகத் தெரிந்திருந்த போதிலும், தான் மேற்கொண்ட கடமைக்காக அவ்விடத்தை நாடவேண்டியதாயிற்று.

### மண்டோதரியின் மாளிகை

மிக அலங்காரமான படுக்கை அறை. பல தோழியர்கள் ஆங்காங்கே விழித்திருந்தனர். மிகவும் வசீகரமான வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பட்ட மஞ்சத்தில் அழகுத் தேவதையாக ஒரு மங்கை படுத்திருந்தாள். தான் கொண்டிருந்த விரதத்தையும் மீறி, அப்பெண்ணின் அவயவங்களை அவதானித்தார் ஆஞ்சநேயர். அம்மாதரசியின் முகத்தில் எத்தகைய கலக்கமோ களங்கமோ தென்படவில்ல. இராமபிரான் ஏற்கனவே அனுமனிடம் சீதாப்பிராட்டியாரின் அங்க இலட்சணங்களை வர்ணித்திருந்தார். இலகுவில் அடையாளம் கண்டுபிடிப்பதற்காகவே, சீதாப்பிராட்டியாரிடம் காணப்படக்கூடிய சிறப்பு அம்சங்களைக் கூறியிருந்தார்.

படுத்துறங்கிய பெண்ணின் தலைமாட்டில் இருவரும் கால்மாட்டில் இருவருமாக நான்கு அழகிய இளமாதர் நின்ற வண்ணம் வெஞ்சாமரை வீசிக்கொண்டிருந்தனர். அனுமன் சாளரத்தினூடாகப் புகுந்து மேலே உள்ள விதானத்தில் தாவி, அப்பெண்ணை நன்கு அவதானித்தார். இப்பெண் நிச்சயமாக சீதாப்பிராட்டியாராக இருக்க முடியாது என்பதை திட்டவட்டமாக நம்பினார். சீதையைப்பிரிந்த துயரால் பசி, தாகம், தூக்கம் மறந்து இராமபிரான் படும் வேதனையை அனுமன் கண்டவர். இராமரே அவ்வளவு துயரத்துடன் துவண்டு கொண்டிருக்கும் வேளையில் அவருடைய தர்மபத்தினியான ஜானகி, இவ்வாறு நிம்மதியாகத் தூங்க முடியுமா?

### மன்னிப்புக் கோரினார்

சீதாப்பிராட்டியாரின் அங்கலட்சணங்கள் எதுவும் இப்பெண்ணிடம் காணப்படவில்லை. இப்பெண்ணும் பேரழகியாக இருந்த போதிலும், சீதாப்பிராட்டியாரின் தோற்றம் பற்றி தான் உருவாக்கியிருந்த கற்பனை உருவினை இங்கு காணமுடியவில்லை. அது மட்டுமல்லாமல், இராவணனால் வான் வழியே கடத்திச் செல்லப்படும் போது தன்னுடைய ஆபரணங்களை, உருசியமுகத்தின் அருகிலே இருந்த வனத்திலேயே சீதாப்பிராட்டியார் போட்டு விட்டுச் சென்றார். அவ்வாபரணங்களை சுக்கிரீவன் மூலம் ஏற்கனவே இராமரிடம் கைகளித்தனர். இப்பெண்ணோ ஒரு அரசிக்கு வேண்டிய அத்தனை நகைகளையும் அணிந்திருக்கிறாள். ஆகவே இது நிச்சயமாக சீதையல்ல என்று ஆஞ்சநேயர் உறுதிகொண்டார். இப்பெண் இராவணனின் பட்டத்தரசி மண்டோதரியாகத்தான் இருக்க வேண்டும் என்று துணிந்தார். இத்தகைய எண்ணம் தோன்றியதும் மண்டோதரியை இருகை கூப்பி வணங்கி, அவருடைய அந்தப்புரத்துக்குள் அத்துமீறி நுழைந்தமைக்காக- மானசீகமாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

இராவணனிடம் எத்தனையோ கெட்ட குணங்கள் குடிகொண்டிருந்தபோதிலும் அவன் மனைவி மண்டோதரி உத்தமி, பத்தினி, பதிவிரதை என்பதையெல்லாம் ஆஞ்சனேயர் ஏற்கனவே அறிந்திருந்தார். ஆகவே, ஒரு பத்தினித்தெய்வத்தை பயபக்தியுடன் துதிப்பதுபோல் அனுமனின் பிரார்த்தனையும் அமைந்திருந்தது.

### இலங்கேஸ்வரனின் உறக்கம்

உடனடியாக அவ்விடம் விட்டகன்ற ஆஞ்சநேயர் அதே மாளிகையின் மற்றொரு புறத்தை அடைந்தார். அங்கு ஆண்களே காவல்கடமையில் ஈடுபட்டிருந்தனர். அங்கு செயப்பட்டிருந்த பாதுகாப்புக்களைக் கொண்டு அது இலங்கேஸ்வரனின் ஓய்வு கூடம் என்பதனைத் தீர்மானித்துக்கொண்டார். அவருடைய உள்ளத்தில் அடக்க முடியாத கோபக்கனல் வீசியது. எவரும் கண்டு விடாதபடி அந்தக் கூடத்தை அடைந்தார். மிகவிசாலமான மஞ்சத்தில் இலங்கேஸ்வரன் படுத்திருந்தான். தான் மனதில் உருவாக்கியிருந்ததைவிட இராவணனின் தோற்றம் மிகப் பொலிவாக விளங்கியது கண்டு ஒரு கணம் பிரமித்து நின்றார். 'இராமபிரானின் துயரங்களுக்கெல்லாம் இவன்தானே காரணம்' என்றெண்ணியவராய், ஒரே அமுக்கில் அரக்கர்கோனைக் கொன்று விடலாமா என்றும் எண்ணமிட்டார். உனடியாக அந்த எண்ணத்தை விட்டு அங்கிருந்து வெளியேறினார்.

பொழுது புலரும் வேளை நெருங்கிக் கொண்டு வந்தது. அனுமனின் உள்ளத்தில் அப்போது இருள் கவ்வத் தொடங்கிவிட்டது. தான் மேற்கொண்ட பணியினை வெற்றிகரமாக முடிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடுமோ என்று ஐயங்கொள்ளலானார். அவ்வாறானதொரு நிலை ஏற்படுமானால் மீண்டும் தான் கிட்கிந்தை திரும்பவோ, உருசியமுக மலைக்குகையில் வாழும் இராமபிரானின் முகத்தில் விழிக்கவோ முடியாத நிலை ஏற்பட்டுவிடுமெனக் கலக்கமடையலானார். எதிரே தெரிந்த சோலை வனத்துள் ஒருதடவை புகுந்து அங்கு சீதாப்பிராட்டியாரைத் தேடிப்பார்ப்பது; அம்முயற்சியிலும் வெற்றி கிட்டாமல் போனால் தொடர்ந்து உயிர் வாழ்ந்தும் பயனில்லை என்று எண்ணினார். அவ்வாறு தான் உயிர் விடுவதானால் இலங்கை மாநகரின் ஒரு பெரும் பகுதியை அழித்தொழித்துவிட்டே உயிரை விடுவதெனவும் சங்கற்பம் பூண்டார். இவ்வாறான எண்ணங்களுடன் இராமபிரானை நினைத்து இராமநாமத்தை உச்சரித்துக் கொண்டு, வானுயர்ந்த மரங்களில் தாவிப் பாய்ந்து அச் சோலையை நோட்டமிட்டார். அசோகமரச்சோலைகள் சூழ்ந்து அமைதியாகக் காணப்பட்டது அப்பிரதேசம்.

கிழக்கே கதிரவனின் வரவுக்கான ஆயத்தங்கள் தோன்றின. பறவையினங்கள் ஆனந்த கீதம் இசைத்த வண்ணம் வட்டமிட ஆரம்பித்தன. அப்போதுதான் அந்தக்காட்சி அனுமனின் கண்களுக்குத் தென்பட்டது.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 60**

**சரியானவிடை:- கிழக்கின் சொர்க்கபுரி**

1. சி. சிவதர்ஷன், 188, பிரதான வீதி, திருகோணமலை.
2. நா.சு. நாதன், 90/23, மகிந்த மாவத்தை, கொழும்பு-10.
3. எம்.ரி.எம். அமீன், 31/2, தபாலலுவலக வீதி, பஹாலி-எல.
4. செல்வி தங்களா வாமதேவன், 64/1, லேக் வீதி இல-1, மட்டக்களப்பு.
5. எம்.எல்.எம். முஹம்மது அலி, 28/16, மஹாவித்தியாலய மாவத்தை, கொழும்பு-13.

**போட்டி இல. 62** கேள்வி:- **சீதையைத் தேடிக்கண்டுபிடிப்பதற்காக வானரசேனைக்கு எவ்வளவு கால அவசாகம் கொடுக்கப்பட்டது?**

டிசம்பர். 28 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி – இல.62, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

*சிறைக்குள் ஜெயலலிதாவும், சசிகலாவும் சந்திக்கிறார்கள். ஜெயலலிதாவைக் கண்டதும் சசிகலாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கிறது. வெட்டிய ஆட்டின் இரத்தம்போல முகம் சிவக்கிறது.*

# செல்வியின் கண்ணீர்

காதிலை பூ கந்தசாமி

ஜெயா: அடியே சசி! என்னம்மா இப்படி எலும்பும் தோலுமாய் இருக்கியே அம்மா! நான் காண்பதென்ன கனவா, நனவா? என் முன்னால் நிற்பது சசியா அல்லது சுசியா?

சசிகலா: (உதட்டைச் சுழித்து பழிப்புக் காட்டி விட்டு பாடுகிறார்)

யாரைத்தான் நம்புவதோ பேதை நெஞ்சம்
அம்மம்மா பூமியிலே யாவும் வஞ்சம்
உறவெல்லாம் முள்ளாகும்
உயிரெல்லாம் கல்லாகும்!



ஜெயா: ஓ...நோ.. என் சசியா இவள்? அங்கமெல்லாம் தங்கம் பூட்டி அழகு பார்த்தேனே! அந்த அழகுத் தெய்வமா இவள்? உயிர்த் தோழி என்றும், உடன்பிறவா சோதரி என்றும் ஊரெல்லாம் சொத்து வாங்கி கொத்துக் கொத்தாகக் கொடுத்தேனே! அவளா இவள்? ஓ.. மை காட்......!

சசிகலா: என்னோடு ஒட்டும் இல்லை உறவும் இல்லை என்று அறிக்கை விட்டீர்களே! அப்போது எங்கே போனது இந்தப் பாசம்? (விக்கி விக்கி அழுகிறார்)

ஜெயா: அழாதேம்மா அழாதே! நீயிருந்த கோலமென்ன? நான் இருந்த கோலமென்ன? இன்று நாமிருக்கும் கோலமென்ன? (பாடுகிறார்)

உன் கண்ணீல் நீர் வழிந்தால்-என்நெஞ்சில்
உதிரம் கொட்டுதடி
என் சொத்தில் பாதியன்றோ-கண்ணம்மா
என் பணம் உன்னதன்றோ!

சசிகலா: சொத்தாம் சொத்து. ஆக, ஆயிரம் கோடிச் சொத்துத்தானே? ஏதோ பெரிசா தந்ததுமாதிரி அதையே சொல்லிக்காட்டிக் கொண்டிருக்க வேண்டாம். அப்புறம் நான் பொல்லாதவளாயிடுவேன்!

ஜெயா: என்னடி பண்ணுவே?

சசிகலா: என்ன பண்ணுவேனா? சொத்தையெல்லாம் நீங்களே வைச்சுக்குங்க. அந்த அம்மாதான் என்னை மிரட்டி என் பேரில எழுதிவைச்சாங்க. என் ஒருத்திக்கு இத்தனை பங்களா, காரு, வசதி எல்லாம் எதுக்குங்க.? நீங்களாப் பார்த்து ஒரு நல்ல பங்களாவா தந்தீங்கன்னா, நானும் நடராசனும் அதிலே கூழோ கஞ்சியோ குடிச்சிட்டு கிடந்திடுவோம். நீங்க எப்ப கூப்பிட்டாலும் வந்து அந்தம்மாவுக்கு எதிரா புட்டுப்புட்டு சாட்சி சொல்லுறோம், எண்ணு கவர்மெண்ட்கிட்ட சொல்லிடுவேன். எப்படி வசதி?

ஜெயா: (சோகமாகப் பாடுகிறார்)

உறவு வரும் – ஒருநாள் பிரிவு வரும்
வரவு வரும் வழியில் செலவு வரும்
பதவி வரும் பின்னே பறிப்பும் வரும்
பழகி வரும் துணையும் விலகிவிடும்.

சசிகலா: பிரித்தது யாரு? அறிக்கை விடுத்தது யாரு? உயிர்த்தோழியை மறந்தாய்! வளர்ப்பு மகனைக் கலைத்தாய்! என் குடும்பத்தை 'குட்பை' சொல்லி குப்பையாக வெளியே தள்ளிவிட்டாய்!

ஜெயா: சசி! என்னை வார்த்தைகள் என்னும் பிளேடுகளால் வெட்டாதேயடி! பென்சில் சீவுவதைப் போல என் மனதை சீவாதேயடி! நானுன்னை மறப்பேனா? நாடகமடி, நாடகம்! (பாடுகிறார்)

நெஞ்சுக்குத் தெரியும் நிலவுக்குத் தெரியும்
நீ யார் நான் யார் என்பது
ஊருக்குள் இருக்கும் யாருக்குத் தெரியும்
உன்னை என் மனம் நினைப்பது!?
(உடல் குலுங்கக் குலுங்க அழுகிறார்.)

சசிகலா: (மனம் மாறுகிறார். உயிர்த்தோழி மீது இரக்கம் பொத்துக்கொண்டு வருகிறது)

ஏனழுதாய் ஏனழுதாய்
என்னுயிரே ஏனழுதாய்
நான் அழுது ஓய்ந்ததற்கு
நன்றி சொல்லவோ அழுதாய்?

ஜெயா: (பாடுகிறார்)

நெஞ்சம் மறப்பதில்லை- அது
நினைவை இழப்பதில்லை- நான்
காத்திருந்தேன்- உன்னைப்
பார்த்திருந்தேன்
கண்களும் மூடவில்லை- என்
கண்களும் மூடவில்லை.

சசிகலா: (அழுதுகொண்டே பாடுகிறார்)

என்ன நினைத்து என்னை அழைத்தாயோ
ஏன் இந்தக் கோலத்தைக் கொடுத்தாயோ
முன்னம் இருந்த நிலை நினைத்தாயோ
முகத்தைப் பார்த்துக் கொள்ளத் துடித்தாயோ?

ஜெயா: எப்படியெல்லாம் .:.பீல் பண்ணித் துடித்தேன் தெரியுமா?

அருகில் வந்தாள் உருகி நின்றாள்
அன்பு தந்தாளே
அமைதியில்லா வாழ்வு தந்தே
எங்கு சென்றாளோ?
பிரிவாலே மோதும் துயர் போதும், போதுமே!

சசி: அதுதான் இப்போ ஒரே சிறையிலே கொண்டுவந்து விட்டுட்டாங்களே!

ஜெயா: சிறை ஒண்ணு! அறை வேறு! இங்கேயும் நம்மைப் பிரிச்சுட்டாங்களேயடி!

சசி: (பாடுகிறார்)

உன்னைச் சொல்லிக் குற்றமில்லை
என்னைச் சொல்லிக் குற்றமில்லை.
காலம் செய்த கோலமடி
கலைஞர் செய்த குற்றமடி!

(காவலர் வருகிறார்)

காவலர்: என்னம்மா இதென்ன போயஸ் தோட்டமா, அல்லது நீங்க வாங்கிப்போட்ட கெஸ்ட் ஹவுஸா? அல்லது நீங்க ஓய்வெடுக்க வந்த ரெஸ்ட் ஹவுஸா?

ஜெயா: யாரு மேன் நீ? இதற்கெல்லாம் நீ பதில் சொல்ல வேண்டிவரும்! ஜாக்கிரதை!

காவலர்: முதல்லே கோட்டுல நீங்க பதில் சொல்லுங்க. உங்ககிட்ட ரொம்பநாளா ஒண்ணு கேட்கணும் எண்ணு ஆசை. இப்ப கேட்கட்டுங்களா?

ஜெயா: என்ன மேன்?

காவலர்: அதெப்படிங்க, ஒரு ரூபாய் சம்பளத்தில ஊரெல்லாம் சொத்து வாங்கினீங்க? அந்த ரெக்னிக்கை சொல்லித் தந்தீங்கன்னா நமக்கும் வசதியா இருக்குமுங்கோ!

ஜெயா: (முறைத்தபடியே தனது அறைக்குச் செல்கிறார்)

ஊரெங்கும் தேடினேன்
ஒருத்தியைக் கண்டேன்- அந்த
ஒருத்தியிடம் தேடினேன்
உள்ளத்தைக் கண்டேன்
உள்ளமெங்கும் தேடினேன்
உறவினைக் கண்டேன்- அந்த
உறவினிலே மூழ்கினேன்
பிரிவினைக் கண்டேன்!

சசி: (தன் அறையில் இருந்து பாடுகிறார்.)

எங்கிருந்தாலும் வாழ்க- உன்
இதயம் அமைதியில் வாழ்க!

வருவாய் என நான் தனிமையில் நின்றேன்
வந்தது வந்தாய் விலங்குடன் வந்தாய்
இரகசியம் காக்கும் கடமையும் தந்தாய்
இனியவளே நீ வாழ்க!

ஜெயா:

நீயில்லாத அறையினிலே நிம்மதியில்லை -உன்
நினைவில்லாத இதயத்திலே சிந்தனையில்லை.
குத்தும் கொசு சிறைக்குள் வந்தால்
கண்ணுறங்கவில்லை- தரையில்
படுத்துவிட்ட நாள் முதலாய் நானுறங்கவில்லை.

(பாடல் சத்தம் கேட்டு காவலர் எட்டிப்பார்கிறார்)

காவலர்: முன்னாள் முதல்வரே! என்னை நீங்கள் பின்னால் அழைத்தது போலிருந்ததே! ஏதாவது ஹெல்ப் தேவையா?

ஜெயா:

நான் உன்னை அழைக்கவில்லை
என் உயிரை அழைக்கிறேன்
சிறைக்குள் பிரித்துவிட்டால்
எங்கள் நேசம் மறைவதில்லை.

(காவலர் தலையில் அடித்துக் கொண்டு பாடிக்கொண்டே போகிறார்)

ஆசையே அலை போலே
நாமெல்லாம் அதன் மேலே
ஓடம்போல ஆடிடுவோமே வாழ்நாளிலே!

(நுளம்புகள் ரீங்காரம் இசைக்க, சாக்கடை நாற்றம் தென்றலாய் வீச, கரடு முரடான தரை உடலைக் குத்த உறக்கம் வராமல் பெரிய்ய்ய்யயய கொட்டாவி விடுகிறார் ஜெயலலிதா.)



19



அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


டிசம்பர் 24
உடல் மறைந்தும்
புகழ் மறையாத
மக்கள் திலகம்
எம்.ஜி. ஆர்.
நினைவு நாள்!






ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
326557
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

நிரந்தர நிம்மதி மறுபடி உயிர்த்தெழட்டும் வாசக நெஞ்சங்களுக்கு இனிகரமான நத்தார் வாழ்த்துக்கள்!


எம்.ஜி.ஆர்.
மக்களைக் கவர்ந்த
மூன்றெழுத்து மந்திரம்!



## இந்த நீளம் போதுமா?

## எரிமலை எப்படிப் பொறுக்கும்

→ எரிமலை பற்றிய செய்திகளை கேள்விப் பட்டிருப்பீர்கள். எரிமலையைப் பார்த்திருக்கிறீர்களா? படத்தில் முட்டை மஞ்சட் கரு போல இருக்கிறதே அதுதான் எரிமலை. ஆனால் இது கோபமில்லாத எரிமலை. கோபம் வந்து வெடிக்கும்போது சிவப்புத் தணல் குழம்பாகத் தெரியும் (எமக்கு மட்டும் தான் கோபத்தில் முகம் சிவக்குமா என்ன?)


உலகிலேயே எப்போதும் உயிர்ப்புடன் கொதிக்கும் நிலையில் இருக்கும் எரிமலை அமெரிக்காவில் உள்ள ஹவாய் தீவுப் பகுதியில் இருக்கிறது. படத்தில் இருப்பதுதான் இவை இடைவிடாமல் குழம்புகளைக் கக்கிக் கொண்டிருக்கும். இதன் பெயர் கிலெளயா.

ஆனாலும் இவை ஆபத்தானவையல்ல. அதனால்தான் இதன் அருகே சென்று ஆராய்ச்சியாளர்களால் அவதானிக்க முடிகிறது.

1983ம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக செக்கன் ஒன்றிற்கு 5 மீட்டர் கனமளவான எரிமலைக் குழம்பை இது வெளியிட்டு வருகிறது. அதனால் துடிதுடிப்பான எரிமலையாக இது சொல்லப்படுகிறது.

மற்றொரு உப தகவல்:

உலகின் மிகப் பெரிய எரிமலையும் ஹவாயில்தான் இருக்கிறது. 'மவுனா லோ' என்பது அதன் பெயர். நாலாயிரத்தி நூற்றி எழுபது மீட்டர் உயரத்திற்கு அது வெடித்துச் சிதறிக் குழம்புகளைப் பீச்சும். ஆனால் அதற்கு அடிக்கடி 'மூட்' வராது. நாலைந்து ஆண்டுக்கு ஒரு முறைதான் அது வெடித்துச் சிதறும். அப்போது அதன் தோற்றமும் பெரிதாக இருக்கும். 120 கிலோமீட்டர் நீளமும் 50 கிலோமீட்டர் அகலமும் கொண்ட பரப்பளவுக்கு அதன் சீற்றம் இருக்கும்.





→ 'குமிழ் விடுதல்' (பபிள்).

பொதுவாகச் சவர்க்காரக் கரைசலில் குழலை அமிழ்த்தி மறுமுனையை வாயில் பொருத்தி காற்றை ஊதினால் வட்டமாகப் பந்துபோல் குமிழ் உருவாகி சூரியக்கதிரிலுள்ள ஏழுவர்ணங்களை ஒளிர்ந்து காற்றில் பறக்கும் செயலை 'குமிழ்விடுதல்' விளையாட்டு என்பர்.

உலகிலேயே மிக மிக நீளமாக அதாவது 19.45 மீட்டர் (63 அடி 10 அங்குலம்) நீளமானதும் 1.83 மீட்டர் (6 அடி) உயரமானதுமான குமிழை ஊதிச் சாதனை மன்னன் என்ற பட்டம் பெற்றார் ஆலன் மக்கேய் என்ற நியூசிலாந்து நாட்டு இளைஞன்





நீளக்குமிழின் இடதுபுறம் அதனை ஊதி உருவாக்குகின்றார் ஆலன். அருகே அவர் காதலி மரியா. குமிழின் வலதுகோடியில் நிற்பவர்தான் சாதனையைக் கவனித்துத் தீர்ப்பு வழங்கும் நீதிபதி.

நல்ல உறைபனிக்குளிர் நாளொன்றில் சவர்க்காரக்கலவை, கிளிசரின், நீர் இவற்றாலான கலவையில் நீளமான மெல்லிய தடியொன்றின் உதவியுடன் இக்குமிழ் ஊதப்பட்டது. ஜூலை 10ம் திகதி 1995இல் இந்த உலக சாதனை செய்யப்பட்டது.

காதலி அருகில் நிற்பதால் ஊதித்தள்ளிவிட உற்சாகம் கிடைத்திருக்கும்தானே.

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



1996-12-10

செல்வி லவினியா

திருகோணமலையைச் சேர்ந்த [illegible] தம்பதியினரின் செல்வப் புதல்வி லவினியா தனது முதலாவது பிறந்தநாளை 10.12.96 அன்று Via E.T.I. BIASIC, NO-75, PALERMO, ITALY இல் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா (திருகோணமலை), அப்பப்பா, அத்தைமார், சித்தப்பமார், மாமா குடும்பத்தினர் (France), அம்மம்மா, அப்பப்பா, சித்தியார் (யாழ்ப்பாணம்) அண்ணன்மார், மச்சான்மார், மச்சாள்மார், பூட்டிமார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் அருள் பெற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: அப்பம்மா, திருமதி [illegible] (திருகோணமலை)

## தடம் இழந்த வாழ்க்கையும் தடம் இல்லாத வண்டியும்

→ இந்த ரயில் ஓடாது. தண்டவாளம் இருந்தாலல்லவா ஓடமுடியும். அது போலத்தான் இடம் பெயர்ந்து வாழும் மக்களின் எதிர்காலமும் எப்போது [illegible] இவர்களின் வாழ்க்கை வண்டி ஓட முடியும்.

தண்டவாளத்தை தொலைத்து விட்டு ஒரு ஓரமாக வளர்ப்பாரற்றுக் கிடக்கும் இந்த ரயில் பெட்டிகள் ஒருவகையில் உபயோகமாகிவிட்டன.

இடம்பெயர்ந்து வன்னியில் வாழும் மக்கள் இந்த ரயில் பெட்டிகளைத் தங்கள் தங்குமிடமாக்கிவிட்டார்கள்.

ஒதுங்க இடமில்லை. [illegible] [illegible]






[illegible]